ஒக்டோபர் - 2014

# அகவிழி

மனித மேம்பாட்டின் உயிர்ப்பு மிகு கல்விக்காய்...

விழி 10 பார்வை 110

ISSN 1800-1246

சர்வதேச கல்விச் செல்நெறிகள்

கணிதம் கற்றல்-கற்பித்தல் செயற்பாட்டை எவ்வாறு மேம்படுத்தலாம்

மாணவர்களின் கணிப்புத் தேவையை பூர்த்தி செய்வதில் ஆசிரியர்களின் வகிபங்கு

புத்தகமும் மனிதநேயமும்

கற்றலின் உளவியல் சார்ந்த அடிப்படை

கற்றல் கற்பித்தல் செயன்முறையை வெற்றிகரமானதாக்கிக் ........

சிறுவர் மேம்பாடு பற்றிய முதற் பாடம்

தனிமுறைப் போதனை

கற்றல், கற்பித்தலுக்கான வாசிப்பும் உலக வாசகர் தினமும்

'மன அழுத்தம்' கற்றல் கற்பித்தலைப் பாதிக்குமா?

சர்வதேச (ஆடம்பர) பாடசாலைகள் (International School) சிறந்த மாணவர்களை உருவாக்குகிறதா?

மேலதிக மொழிகளைக் கற்பித்தல்

பேராசிரியர் சோ. சந்திரசேகரம் ✱ கலாநிதி கோணாமலை கோணேசபிள்ளை
✱ அபுபக்கர் நளீம் ✱ எஸ்.வி. வேணுகோபாலன்
✱ ஜயசேனபுத்தப்பிட்டிய ✱ கீத்டொப்பிங்

www.viluthu.org

விலை: 100/=



இதோ வெளிவந்துவிட்டது
நவம்பர் மாத
OLIARAZI
மாத சஞ்சிகை
ஒளிஅரசி
இல்லத்தரசிகளின் தோழி
இலவசம் O/L மாதிரி வினாத்தாள் கையேடு
அரசியலோ பாலியலோ கலக்காத ஒரு பரிணாமப் படைப்பு
சாதனை எப்படி சாத்தியமானது?
சர்வதேச பொது அறிவுத் தொகுப்பு [செப்டெம்பர், ஓகஸ்ட்]
7 வகை திறன் போட்டிகள் பரிசு 150,000/=
நெகிழ வைக்கும் மாற்றம்
நோபல் பரிசு
தரம் 04 பிரபலங்களின் நுட்பமான வினா - விடை
யார் இந்த மலாலா?
கத்தி விமர்சனம்
ரொமான்ஸ்
தரையிறக்கும் இறகு!
செருக்கும் சிவமும் சிறுமையும்
உங்களுக்குள்ளே ஒரு கொலம்பஸ்!
நடிகைகளின் சம்பளம்
குரு தட்சணை
இசைச்சமர் மேனகா
இலவச பிறந்தநாள் வாழ்த்துக்கள்
எழுத்தின் மூத்த எழுத்தாளர்
விலை ரூபா 60 மட்டுமே!
தேசிய சாதனைபடைத்த வீராங்கனை ஜெகதீஸ்வரன் அனித்தாவின் முகப்பட்டைப் படத்துடன்...
இன்னும் பல சுவாரஸ்யமான அம்சங்களுடன் தற்பொழுது அமோக விற்பனையில்
உங்கள் பிரதிகளை பத்திரிகை முகவர்களிடமும் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.
விநியோகத் தொடர்புகளுக்கு: 0718 628379 / 011 5737592
விளம்பர தொடர்புகளுக்கு: 078 8864730 / 0787 273035

அகவிழி

ஆசிரியத்துவ நோக்கு...

# உள்ளே......

ISSN 1800-1246


1. சர்வதேச கல்விச் செல்நெறிகள் 4

2. கணிதம் கற்றல்-கற்பித்தல் செயற்பாட்டை எவ்வாறு மேம்படுத்தலாம் 7

3. மாணவர்களின் கணிப்புத் தேவையை பூர்த்தி செய்வதில் ஆசிரியர்களின் வகிபங்கு 12

4. புத்தகமும் மனிதநேயமும் 19

5. கற்றலின் உளவியல் சார்ந்த அடிப்படை 21

6. கற்றல் கற்பித்தல் செயன்முறையை வெற்றிகரமானதாக்கிக் கொள்வதற்காக கல்வி வழிகாட்டலும் ஆலோசனை வழங்கலும் 25

7. சிறுவர் மேம்பாடு பற்றிய முதற் பாடம் 27

8. தனிமுறைப் போதனை 31

9. கற்றல், கற்பித்தலுக்கான வாசிப்பும் உலக வாசகர் தினமும் 34

10. 'மன அழுத்தம்' கற்றல் கற்பித்தலைப் பாதிக்குமா? 37

11. சர்வதேச (ஆடம்பர) பாடசாலைகள் (International School) சிறந்த மாணவர்களை உருவாக்குகிறதா? 40

12. மேலதிக மொழிகளைக் கற்பித்தல் 42



AHAVILI
3, Torrington Avenue
Colombo 07
Tel.: 011 250 6272
E-mail: ahavili.viluthu@gmail.com



அகவிழியில் இடம்பெறும் கட்டுரைகளுக்கு அதன் ஆசிரியர்களே பொறுப்பு, கட்டுரைகளில் இடம்பெறும் கருத்துக்கள் "அகவிழி" யின் கருத்துக்கள் அல்ல.

ISSN 1800-1246

அகவிழி
ஆசிரியத்துவ நோக்கு...

மாத இதழ்

ஆசிரியர்
ச. இந்திரகுமார்

நிர்வாக ஆசிரியர்
சாந்தி சச்சிதானந்தம்

நிறைவேற்றுப் பணிப்பாளர்(விழுது)

ஆசிரியர் குழு
க. சண்முகலிங்கம்
பத்மா சோமகாந்தன்

ஆலோசகர் குழு

பேராசிரியர் சோ. சந்திரசேகரம்
முன்னாள் கல்விப் பீடாதிபதி
கொழும்புப் பல்கலைக்கழகம்

பேராசிரியர் தை. தனராஜ்
ஓய்வுநிலை, இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்

கலாநிதி சசிகலா குகமூர்த்தி
சிரேஷ்ட விரிவுரையாளர்
இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்

லெனின் மதிவானம்
பிரதிக் கல்வி வெளியீட்டு ஆணையாளர்
கல்வி அமைச்சு

வீ. தியாகராஜா
சிரேஷ்ட ஆலோசகர், சமூக விஞ்ஞானக் கற்கைகள் துறை,
இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்

கே. சாம்பசிவம்
தேசிய ஆலோசகர்: கல்வி முகாமைத்துவம்

பேராசிரியர் வ. மகேஸ்வரன்
தலைவர் தமிழ்த்துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்

து. ராஜேந்திரம்
முன்னாள் முதுநிலை விரிவுரையாளர்
இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்

க. இரகுபரன்
முதுநிலை விரிவுரையாளர்
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

பேராசிரியர் துரை மனோகரன்
தமிழ்த்துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்

திருமதி. அருந்ததி ராஜவிஜயன்
ஆசிரிய ஆலோசகர்
கொழும்பு கல்வி வலயம்

**ஆசிரியரிடமிருந்து................**

வடகிழக்கு மாகாணங்களில் உள்ள பாடசாலைகள் போர் நிலைமை காரணமாகப் பல தசாப்தங்களாக முறையாக இயங்கவில்லை என்பதும் பிள்ளைகள் பாடசாலைக்குச் சரியாகச் செல்லவில்லை என்பதோடு சென்ற பிள்ளைகளும் முறையாகக்கல்வி பெறவில்லை. இந்நிலைமையில் ஏராளமான ஆசிரியர்கள் பாடசாலையிலிருந்து இடம் பெயர்ந்தமை, வெளி நாடுகளுக்கு சென்றமை, பாடசாலைகள் பல மூடப் பட்டதோடு இயங்கிய பாடசாலைகளுக்கும் சரியான முறையில் வளங்கள் கிடைக்கவில்லை. ஏனைய மாகாணங்களில் பல புதிய கல்விச் சீர்திருத்தங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. பிள்ளைகளின் கல்வி அடைவு பற்றி நடத்தப்பட்ட ஆய்வுகளில் வடகிழக்கு மாகாணங்கள் உள்ளடக்கப்படவில்லை. இந்நிலையில் ஐயத்துக்கிடமின்றி வடகிழக்குப் பாடசாலைக் கல்வி தேக்கமுற்றதோடு ஏனைய மாகாணங்களைவிட பின்தங்கியும் நின்றது.

இத்தகைய பின்புலத்தில் பெற்றோர்களும் போரில் பாதிப்புகளுக்கு உள்ளாகிய நிலையில் தமது பிள்ளைகளின் கல்வியில் அக்கறை செலுத்த

முடியவில்லை. கல்வி இலவசமாக வழங்கப்பட்டாலும் வாழ்வாதாரங்கள் அற்ற பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் கல்விக்கான மேலதிக செலவுகளை ஈடுசெய்ய முடியாமல் அல்லல் படுவதைக் காண முடிகிறது.

போர் முடிந்து ஐந்து ஆண்டுகள் கழிந்த நிலையிலும் வடகிழக்கு மாகாணப் பிள்ளைகளின் கல்வித் தேர்ச்சிக்கும் ஏனைய மாகாணங்களில் கல்வி கற்ற பிள்ளைகளின் தேர்ச்சிக்கும் இடையில் ஏற்பட்ட ஒரு பெருத்த இடைவெளி குறிப்பிடத்தக்கதாகும். இந்த இடைவெளியை இக்கால ஆய்வுகள் பல சுட்டிக்காட்டின. இதனால் வடகிழக்குப் பாடசாலை பிள்ளைகளின் கல்வியில் விசேட கவனமும் தலையீடுகளும் தேவைப்பட்டன. அரச நிறுவனங்களுக்கு அப்பால் கல்வித்தறையில் ஈடுபாடு கொண்ட ஏனைய அமைப்புகள், கல்வி வளர்ச்சிக்கான விசேட நிதிகளை வழங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. வட கிழக்கிலுள்ள சகல பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியையும் கவனிக்க வேண்டிய அவசியம் இருக்கத்தக்கதாகவும் அவர்களில் மெல்லக் கற்போர், மற்றும் போரினால் பாதிக்கப்பட்டு கடுமையான உள நெருக்கீட்டுக்குள்ளானோரின் வளர்ச்சியை விசேடமாக கவனிக்கக் கூடிய செயற் திட்டங்களின் அவசியமும் நடைமுறைப்படுத்துவதற்கான உபாயங்களைக் கண்டறிவதும் காலத்தின் தேவையாகும்.

இந்நிலைமைகள் இவ்வாறு தொடர்கின்ற நிலையில் ஆசிரியர்களிடமிருந்து நாம் வினயமாகக் கேட்டுக் கொள்வது சகல பிள்ளைகளுக்கும் தத்தமது உள்ளார்ந்த திறமைகளை உச்ச அளவில் விருத்தி செய்து கொள்வதற்கும் அத்தியாவசியமாக அடைய வேண்டிய தேர்ச்சிகளை அடைவதற்கும் தேவையான பின்னணியை அமைத்துக் கொடுப்பதற்கு சகல வழிகளிலும் அர்ப்பணிப்புடன் செயலாற்ற முன் வாருங்கள் என்பதாகும். அதற்கு பிள்ளைகளின் பல்வகைமையை இனங் கண்டு கற்பிக்கும் செயல் வழியினை ஒழுங்கமைத்துக் கொள்வது மிக முக்கியமானதாகும்.

ஆசிரியர் பின்பற்றும் கற்றல் கற்பித்தல் செயன்முறை மாண்வர்கள் கற்றல் பேறுகளை அண்மிப்பதில் செல்வாக்குச் செலுத்தும் மிக முக்கிய காரணியாகக் காணப்படும். எனவே மாணவர்களை (மெல்லக்கற்போர், மற்றும் போரினால் பாதிக்கப்பட்டு கடுமையான உள நெருக்கீட்டுக்குள்ளானோர்) நன்கு இனங்கண்டு அவர்களின் விருப்பு வெறுப்புக்களை அறிந்து, அவர்கள் கற்கும் விதத்தினையும் புரிந்து ஆசிரியர் கற்பித்தல் செயன்முறையில் பிரவேசிப்பது கல்வியின் தர மேம்பாட்டிற்கான முக்கிய அம்சமாக விளங்கும். கல்வியின் பெறுபேறு அதன் உள்ளடக்கத்திலும் செயல்வழியிலுமே தங்கியிருக்கின்றது.

தர மேம்பாடுடைய கல்விக்காகப் பின்வரும் ஐந்து பகுதிகளூடாக உள்ளடக்கமும் செயல்வழியும் அமைந்திருத்தல் வேண்டும் என பிள்ளைநேய அணுகுமுறை பரிந்துரைக்கிறது.

» கற்றலுக்கு மாணவனிடம் காணப்படும் உடல் உளத் தயார்நிலை - சுற்றாடல், ஆரோக்கியமும் போசணை நிலையும்.

» கற்றல் சூழல் - மாணவனிடம் காணப்படும் அனுபவங்கள் வீட்டுச் சூழல், பாடசாலைச் சூழல்

» கற்றல் உள்ளடக்கம் - பாட விதானம், பாட நூல், ஏனைய மூல வளங்கள், கற்றல் வளங்கள்.

» கற்றற் செயல்வழி - தேர்ச்சி பெற்ற ஆசிரியர், மாணவர் மையக்கற்றல், - கற்பித்தல் செயல்வழி

» கற்றற் தேர்ச்சிகள் - அடைவுமட்டம். அத்தியாவசியக் கற்றற் தேர்ச்சிகள், எதிர்பார்க்கும் தேர்ச்சிகள்.

எதிர்காலத்தில் சகல பாடசாலைகளையும் சிறுவர் நேயப் பாடசாலைகளாக உருவாக்கும் அரசின் கொள்கைகளுக்கு மேற்குறித்த செயல் வழிகள் தொடர்பாக ஆசிரியர்கள் பூரண விளக்கத்தைப் பெற்றிருப்பது அவசியமானதாகும். சிறுவர் நேயப் பாடசாலையொன்றில் சகல மாணவர்களினதும் உள்ளார்ந்த திறன்களை உச்ச அளவில் விருத்தி செய்வதற்குத் தேவையான சூழல், வசதிகளை அமைத்துக் கொடுத்தல் வேண்டும். தரமான கல்வி விருத்தியை அடைவதற்கு மாணவர்களின் அடைவு மட்டத்தின் பல்வேறு நிலைமைகளை இனங்காண்பது மிக முக்கியமாகும்.

முக்கியமாக வடகிழக்கு மாகாணங்களில் கல்வித்துறையில் ஈடுபட்டிருக்கின்ற சகலருக்குமான வேண்டுகோளாக மேற்குறித்த செய்திகளை அகவிழி விடுக்கிறது. தாமதிக்காது முறையான செயல்வழியில் செயற்படுவது காலத்தின் தேவைப்பாடாகும்.

ச. இந்திரகுமார்

# சர்வதேச கல்விச் செல்நெறிகள்

பேராசிரியர் சோ. சந்திரசேகரம்



**புதிய கல்விச் செல்நெறிகள் சூழமைவு (Context)**

சென்ற நூற்றாண்டின் இறுதிக் கூறிலும் இந்நூற்றாண்டின் முற்பகுதியிலும் எழுந்த இரு நிலைமைகள் தற்போதைய கல்வி முறைகளின் போக்குகளை நிர்ணயித்துள்ளன.

அந்நிலைமைகள் அல்லது சூழமைவுகளாவன: கோளமயமாக்கமும் புதிதாக எழுச்சி பெற்று வரும் அறிவுப் பொருளாதாரச் சிந்தனையுமாகும். பாடசாலைகளுக்கும் கல்வி முறைகளுக்கும் அப்பால் தொழிற்படுகின்ற சமூக, பொருளாதார நிலைமைகளே வரலாற்று ரீதியாக கல்வி முறையின் நோக்கங்களையும் கல்விப் பொருளையும் (Content of Education) நிர்ணயித்து வந்துள்ளன. அவற்றைப் பொறுத்தே கல்வி முறைகள் விரிவாக்கப்பட்டன அல்லது ஒடுக்கப்பட்டன. விவசாய சமூகத்தில் அச்சமூகத்தின் தேவைகளைக் கருதி கல்வி கைத்தொழில் சமூகத்தில் அதற்கேற்ற கல்வி. இதுவே கல்வி முறைகளின் வேறுபாடுகளையும் நிர்ணயித்த காரணிகள்.

கோளமயமாக்கம் வலியுறுத்திய திறந்த பொருளாதாரம், ஜனநாயக மயமாக்கம், மனித உரிமைகள், தனியார் துறையின் பங்கேற்பு, அரசாங்கத்துறையின் வீழ்ச்சி முதலாம் காரணிகள் கல்வித் துறையில் பல பாதிப்புக்களை ஏற்படுத்தின. இதன் விளைவாகப் பாட ஏற்பாட்டில் மனித உரிமைகளுக்கு இடமளிக்கப்பட்டது பாடசாலை நிர்வாகத்தில் வழமையான அரசாங்க அதிகாரத்தரப்பின் செல்வாக்குக் குறைந்து சமூகத்தினதும் அதிபர், ஆசிரியர்களினதும் பங்கேற்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. இன்று இலங்கையில் 5000க்கும் மேற்பட்ட பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் பாடசாலை மட்ட நிர்வாகம் இவ்வாறான உலகளாவிய செல்நெறியின் பாதிப்பின் விளைவாகும். கோளமயமாக்கத்தின் விளைவாக வர்த்தகம், இராஜதந்திரம் மற்றும் கணினி போன்ற துறைகளில் ஆங்கிலமொழி முக்கியத்துவம் பெற்றுள்ளது. இதனால், சுயமொழிகளில் பாடம் கற்பித்த அரசாங்கப் பாடசாலைகள் தமது வசதிகளைப் பொறுத்து ஆங்கிலத்தைப் பயிற்று மொழியாகக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழகங்களில் பட்டதாரி நிலையிலும் உயர்மட்ட நிலையிலும் ஆங்கிலம் பயிற்று மொழியாக்கப்பட்டு வருகின்றது. வழமையாகத் தாய்மொழியில் கற்பித்து வந்த ஐரோப்பிய நாடுகள் மற்றும் சீனா, ஜப்பான் முதலிய ஆங்கிலம் பேசாத நாடுகளின் பல்கலைக்கழகங்களில் கூட ஆங்கில வழிக் கல்விக்கு முக்கியத்துவமளிக்கப்பட்டு வருகின்றது.

கோளமயமாக்கம் காரணமாக தனியார் துறையின் பங்களிப்புக்கு வழங்கப்பட்ட முக்கியத்துவம் காரணமாக இலங்கையின் கல்வித் துறையில் தனியாரின் பங்களிப்புக் குறித்து சாதகமான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. எண்ணிக்கை தெரியாத அளவுக்கு தனியார் சர்வதேசப் பாடசாலைகள், முதலீட்டுச் சபையின் அங்கீகாரத்துடன் அமைக்கப்பட்டு வருகின்றன. பாடசாலைக் கல்வி, உயர்கல்வி தொடர்பான அரசாங்க அறிக்கைகள் பொதுத்துறை – தனியார் துறை கூட்டு முயற்சி பற்றி விரிவான, சாதகமான பரிந்துரைகளைச் செய்து வருகின்றன. தனியார் துறையினரைப் பின்பற்றி அரசாங்கப் பல்கலைக்கழகங்கள் நீண்டகால Corporate திட்டங்களை வரைந்து வருகின்றன.

பாடசாலைக் கல்வி எவ்வாறு அமைய வேண்டும்? தனியார் துறையினரின் மனித வலுத் தேவைகளுக்கமைய எவ்வாறு பாடசாலை மற்றும் பல்கலைக்கழக பாட ஏற்பாடுகள் வரையப்படல் வேண்டும் போன்ற விடயங்களில் இன்று தனியார் துறையினருடன் கலந்தாலோசனை நடாத்தப்படுகின்றது. இலங்கை வர்த்தக சங்கம் (Chamber of Commerce) தற்போது இலங்கையின் கல்விமுறை குறித்து கருத்தரங்குகளை நடாத்துகின்றது. கல்வித்துறை சீர்திருத்தங்களுக்கான பரிந்துரைகளையும் வழங்கி வருகின்றது. பாடசாலைக் கல்வி, பல்கலைக்கழகக் கல்வி தொடர்பான குழுக்களின் தனியார் துறையினருக்கும் உறுப்புரிமை வழங்கப்படுகின்றது.

ஒரு காலத்தில் 60 சதவீத வேலைவாய்ப்புகள் அரசாங்கத்துறையால் வழங்கப்பட்டன. தற்போது இது 15 சதவீதமாக வீழ்ச்சியடைந்து, தனியார் துறையில் வேலைவாய்ப்புகள் அதிகரித்து வருகின்றன. தற்போது 35 சதவீத வேலைவாய்ப்புக்கள் தனியார் துறையில் காணப்படுகின்றன. எஞ்சியவை முறைசாரா துறையில்

(Nonformal Sector) காணப்படும் வேலை வாய்ப்புக்களாகும். பொருளாதார வளர்ச்சிக்கான பொறிமுறையாகத் தனியார் துறை புதிய அந்தஸ்த்தைப் பெற்றுள்ளது. இந்நிலையில், தனியார் துறையினர் கோருகின்ற "மென்திறன்களைக்" கொண்ட இளைஞர்களைக் கல்வி முறை உருவாக்க வேண்டியுள்ளது. (அவையாவன: புத்தாக்கத் திறன்கள், பிரச்சினை தீர்க்கும் திறன்கள், ஆங்கில மொழித் திறன்கள், சமூகத் திறன்கள் என்பனவாகும்) அரசாங்கத் துறையின் தேவைகளுக்குப் பொருத்தமான கல்விமுறையை இன்று தனியார் துறையை நோக்கியும் அறிவுப் பொருளாதாரத்தை நோக்கியும் திசைமுகப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இது இக்காலத்துக்குரிய செல்நெறியாகும்.

பல்கலைக்கழகக் கல்வியைப் பொறுத்தவரையில், இன்று பல மாற்றங்கள் பற்றி அரசாங்கத் தலைவர்கள் பேசிவருவதற்கு எழுச்சி பெற்றுவரும் அறிவுப் பொருளாதாரம் ஒரு பிரதான காரணமாகும். சிறந்த பாடசாலைக் கல்வியும் உயர்கல்வியும் அறிவுப் பொருளாதாரத்தின் நான்கு தூண்களில் ஒன்றாகும்.

அவற்றில் "உலகத்தரம்" வாய்ந்த பல்கலைக் கழகங்களை இனங்கண்டு வரிசைப்படுத்தி (Ranking) உள்ளனர். உலகில் சிறந்த பல்கலைக் கழகங்களுக்கான தகுதி விதிகளை (Criteria) அவர்கள் வகுத்துள்ளனர். அத்துடன் இவ்வனுபவத்தின் அடிப்படையில் சீன அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

இந்தியாவிலுள்ள பல்கலைக்கழகங்கள் (350) ஒன்றாவது உலகிற்சிறந்த பல்கலைக்கழகங்கள் என்ற அந்தஸ்தைப் பெறாமையால் இந்திய அரசாங்கம் தற்போது 34 புதிய உலகிற் சிறந்த பல்கலைக்கழகங்களை ஏற்படுத்த முயற்சித்து வருகின்றது. இளைஞர்களில் 20 சதவீதமானவர்கள் மட்டுமே உயர்கல்வி வாய்ப்புக்களைப் பெறும் நிலையில் இதனை மும்மடங்காக்கும் இலக்கும் முன்வைக்கப்பட்டுள்ளது. உயர்கல்வி பிரச்சினைகளை விரிவாக ஆராய்ந்து வரும் "தேசிய அறிவு ஆணைக்குழு" இந்தியாவுக்கு மேலும் 1500 பல்கலைக்கழகங்கள் தேவையென வலியுறுத்தியுள்ளது. ஆராய்ச்சி, விஞ்ஞானம், தொழில்நுட்பம், தன்னாட்சி அதிகாரம், கல்விச் சுதந்திரம் என்பவற்றுக்கு முக்கியத்துவம் வழங்கும் புதிய "நவரத்தினப் பல்கலைக்கழகங்களை" நிறுவும் பணியில் இந்தியா ஈடுபட்டு வருகின்றது. உயர் கல்வியின் மேம்பாட்டுக்காக வறுமை, நீர்வளம், பட்டினி, பிணிகள் முதலிய பிரச்சினைகள் குறித்து ஆராயும் புதிய 14 புத்தாக்கப் பல்கலைக் கழகங்களை (Innovation University) அமைப்பது பற்றியும் இந்திய அரசு அறிவித்துள்ளது. இவை யாவும் உலகின் பல்கலைக் கழகங்களுடன் ஒப்பிடும் வகையில் வளர்ச்சி பெறல் வேண்டும் என்ற இலக்கினை இந்தியா உருவாக்கியுள்ளது.

சிங்கப்பூர், தென்கொரியா, மலேசியா, தாய்லாந்து முதலிய நாடுகளும் இதே போன்று உயர்கல்வி வளர்ச்சியில் அக்கறை செலுத்தி வருகின்றன. இத்தகைய ஆசியப்பின்னணியில் இலங்கை வாளாவிருக்க முடியாது என்பதால் இலங்கை அரசும் இரு கொள்கைப் பிரகடனங்களைச் செய்துள்ளது. இலங்கையின் அரச பல்கலைக்கழகங்களில் நன்கு தெரிவு செய்யப்பட்டு மேலதிக நிதியுதவியுடன் அவை மிகச் சிறந்த மாணவர்களையும் ஆசிரியர்களையும் கவர்வனவாயும் ஆராய்ச்சித் துறையில் கூடிய கவனம் செலுத்துவனவாயும் கற்றல், கற்பித்தல் மற்றும் நிர்வாகத்தில் உயர் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவனவாயும் இருத்தல் வேண்டும். அங்கு செய்யப்படும் ஆய்வுகள் சர்வதேச தரங்களையும் அங்கீகாரத்தையும் பெறுதல் வேண்டும். இரண்டாவதாக வெளிநாட்டு மாணவர்கள், பேராசிரியர்கள் முதலியோரின் வருகை சாத்தியமாகும். சர்வதேசத் தொழிற் சந்தைக்குப் பொருத்தமான புதிய கற்கை நெறிகள் தொடங்கப்பட வாய்ப்புண்டு. உள்ளூர் மாணவர்களுக்கான உயர்கல்வி வாய்ப்புகளை அதிகரித்துக் கொள்ளவும் முடியும். உயர்கல்விக்கான உள்ளூர் முதலீடு பற்றாக்குறையாக இருப்பதால் வெளிநாட்டு மூலதனப் பாய்ச்சலுக்கான வாய்ப்புக்கள் உண்டாகும். அரசாங்கப் பல்கலைக்கழகங்களுக்கும் இப்புதிய பல்கலைக்கழகங்களுக்குமிடையில் ஏற்படும் ஆரோக்கியமான போட்டியும் பல்கலைக்கழகங்களின் தராதர வளர்ச்சிக்கு உதவும் என்ற எதிர்ப்பார்ப்பும் உண்டு. பாடசாலைக் கல்வி, பல்கலைக்கழகக் கல்வி என்பவற்றின் தராதர விருத்தி, விரிவு என்பன அறிவுப் பொருளாதாரத்தின் சில பண்புகள் இவ்வாறான கல்வி வளர்ச்சியை வேண்டி நிற்கின்றன.

அறிவுப் பொருளாதாரமானது உலகளாவிய ரீதியில் பெருகிவரும் விஞ்ஞானத் தொழில்நுட்ப அறிவை உள்வாங்க (Assimilation) வேண்டும். உள்வாங்கிய அறிவை நாடு முழுவதிலும் பரப்புதல் (Dissemilation) வேண்டும். முழுச் சமூகமும் தொடர் கல்வியில் ஈடுபடும் கற்கும் சமூகங்களாக மிளிர வேண்டும். நாட்டின் பல்வேறு துறைகளுக்கும் தேவையான பொருத்தமான அறிவை உருவாக்குதல் (Cration) வேண்டும். உள்வாங்கிய அறிவையும் உருவாக்கிய அறிவையும் பொருள் உற்பத்திக்காகப் பயன்படுத்துதல் (Apply) வேண்டும்.

இத்தகைய அறிவை சேமித்து வைத்தலும் முகாமை செய்தலும் ஏனைய சில பண்புகளாகும். இவ்வாறு அறிவை உள்வாங்குதல், பரப்புதல், பயன்படுத்துதல், உருவாக்குதல், சேமித்தல், முகாமை செய்தல் போன்ற பணிகளை செய்வதற்கான உயர்தரமான மனிதவளத்தை உயர்கல்வி நிறுவனங்களே உருவாக்க வேண்டும். இதன் காரணமாகவே தரம் வாய்ந்த பாடசாலைக் கல்வியும் உயர்கல்வி முறை

களும் தேவைப்படுகின்றன. அறிவுப் பொருளாதாரத்தை நோக்கிச் செல்ல வேறு மாற்று வழிகள் எவையும் இல்லை.

புதிய அறிவு மைய நூற்றாண்டில் நாமும் கற்கும் சமூகமாக (Learning Society) மாற வேண்டும். இன்று அறிவுச் சமூகம், அறிவுப் புரட்சி, தகவல் நூற்றாண்டு, அறிவு நிறுவனங்கள், அறிவு ஊழியர்கள் என்ற புதிய எண்ணக்கருக்களும் நிலைமைகளும் தோன்றியுள்ளன. தனிநபர் வருமானம், மொத்த உள்நாட்டு உற்பத்தி என்பவற்றின் அடிப்படையில் எழுந்த செல்வந்த நாடுகள், வறிய நாடுகள் என்ற வகைப்பாடு இன்று முடிவுக்கு வந்துள்ளது.

மக்களின் கல்வித்தேர்ச்சி, கல்வி மட்டங்கள் என்பவற்றின் அடிப்படையில் அறிவார்ந்த நாடுகள், அறியாமையினால் பீடிக்கப்பட்ட நாடுகள் என்ற புதிய வகைப்பாடு தோன்றியுள்ளது. இத்தகைய புதிய மாற்றங் களை சகல சமூகங்களும் உள்ளவாங்கி, புதிய அறிவு நூற்றாண்டின் நிலைமைகள், தேவைகள், சவால்கள் என்பவற்றை எதிர்கொள்ளத்தம்மை கல்வி ரீதியாக வலுப்படுத்திக்கொள்ள வேண்டியுள்ளது. இப்பின்புலத்தில் இன்றைய கல்வி முறைகளின் மற்றொரு செல்நெறி, எதிர்காலவியல் நோக்கில் பாடசாலைக் கல்வியையும் பல்லைக்கழக கல்வியையும் திட்டமிடுவதாகும்.

இன்று பாடசாலைகளில் கல்வி பயிலும் 40 இலட்சம் பிள்ளைகளும் 13 ஆண்டுகளின் பின்னர் 2023ஆம் ஆண்டில் வேலை உலகில் அறிவு பொருளாதாரத்தில் இணையப் போகின்றவர்கள் அத்தகைய வேலை உலகில் இசைந்து வாழ்வதற்கான திறன்களையும் அறிவையும் தேர்ச்சிகளையும் பாடசாலைக் கல்வியின்போதே வழங்கிட வேண்டும். எனவே 2020களில் அறிவுப் பொருளாதாரத்தின் தேவைகளும் பண்புகளும் எவையென்பது பற்றி இப்போதே உய்த்துணர்ந்து மாணவர்களுக்குத் தேவையான ஆயத்தத்தை பாடசாலைகளே வழங்கிட வேண்டும். இதனால் இன்று கல்வி நிறுவனங்களுக்குப் பெரியளவிலான சமூக, பொருளாதார முக்கியத்துவம் உண்டு.

**மூன்று தசாப்த காலமாக கல்விப் பணியாற்றி ஓய்வு பெறும் பேராசிரியர் மா. கருணாநிதி அவர்களின் சேவை நலன் பாராட்டு விழாவை அகவிழி குழுமம் மனமார வாழ்த்துகிறது**

அகவிழி ஆசிரியர் சஞ்சிகை ஆரம்பித்த காலத்திலிருந்து இன்றுவரை அகவிழிக்கான கல்வியியல் ஆக்கங்களை தொடர்ந்து எழுதி வருபவர். பல சந்தர்ப்பங்களில் ஆலோசனை களை தந்து எமது பணிக்கு உறுதுணையாயிருப்பவர். அகவிழியின் காத்திரமான பணிக்கு இவரது ஒத்துழைப்பும் ஆலோசனையும் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. அவரது பணி மேலும் தொடரவும் கல்வித்துறையில் தொடர்ந்து இயங்கிக்கொண்டு இன்னும் பல சேவைகளை ஆற்றவும் அகவிழி வாழ்த்துகிறது.

தொடர்ந்த கல்விப் பணிக்கு நீண்ட ஆயுளையும் ஆரோக்கியத்தையும் இறைவன் வழங்கவேண்டும் என்று அகவிழியின் சார்பாக வாழ்த்துகிறோம்.

ஆசிரியர்பீடம்
விழுது
மனிதவள மேம்பாட்டு நிறுவனம்
கொழும்பு - 7

அகவிழி
ஆலோசனை குழு
இல. 03, ரொறிங்டன் அவனியூ
கொழும்பு - 7



# கணிதம் கற்றல்–கற்பித்தல் செயற்பாட்டை எவ்வாறு மேம்படுத்தலாம்

கலாநிதி கோணாமலை கோணேசபிள்ளை

B.ED. (Hons), M.A, M.Sc., ED.D., PhD



உலகளாவிய ரீதியாக நோக்கும்போது தற்காலத்தில் கணிதக் கல்வி மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. விஞ்ஞானவிருத்தி, தொழில்நுட்ப விருத்தியாகியவை மாத்திரமல்லாது பொருளியல், உளவியல், சமூகவியல் ஆகிய துறைகளும் கணிதத்தின் தேவையை வேண்டி நிற்கின்றன. எனவே கணிதம் கற்றல்-கற்பித்தலை எவ்வாறு மேம்படுத்தலாம் என்பதில் பல நாடுகளும் கவனம் செலுத்தி வருகின்றன. சர்வதேச ரீதியாக, பாடசாலை கணித, விஞ்ஞான அடைவுகளை ஒப்பிட்டு மதிப்பீடு செய்வதற்கு 41 நாடுகள் முயற்சி எடுத்து வருகின்றன. இந்த நாடுகளில் இலங்கையும் இந்தியாவும் இணைய வில்லை. இவ்வாறு இணைந்துள்ள நாடுகளின் மதிப்பீட்டை நோக்கும்போது தற்போது பாடசாலை மட்டத்தில் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களின் அடைவில் முதன்மை வகித்து முன்னேற்றத்தைக் கண்ட நாடுகளாக சிங்கப்பூர், தென்கொரியா, ஜப்பான், செக் குடியரசு ஆகியவை திகழ்கின்றன. இந்த நாடுகளின் வெற்றியைக் கொண்டு, மற்றைய நாடுகள் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங் களின் கற்றல்-கற்பித்தல் செயற்பாட்டை மேம்படுத்துவதற்குப் பல கோணங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கணிதம் நீண்ட காலமாகக் கற்பிக்கப்பெற்று வந்தாலும் கணிதம் கற்பித்தல் தொடர்பாக ஆசிரியருக்கான சீராக நடைமுறைப்படுத்தப்பெற்ற கல்வி சென்ற நூற்றாண்டிலே தான் ஆரம்பமாகியது.

கற்பித்தற் செயற்பாட்டுக்கு பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து அவர்களது அறிவுசார்ந்த, தொழில்சார்ந்த திறன்களை விருத்திசெய்து அவர்களைக் கற்பித்தலில் ஈடுபடுத்தினாலேதான் கற்றலை மேம்படுத்தலாம் என்பதை நடைமுறைப்படுத்தி வெற்றி கண்ட நாடு ஜேர்மனியாகும். இந்த வெற்றியை பல நாடுகள் பின்பற்ற முயன்றன. இரண்டாவது மகா யுத்தம் முடிந்தபின் அங்கு ஏற்பட்ட பல சேதங்களை கண்ட ஜப்பான் நாடு, நாட்டை வேக மாகக் கட்டி எழுப்ப முனைந்தது. முதற்படியாக கல்வி விருத்தியில் கவனம் செலுத்தியது. திறமை மிக்கவர்களை ஆசிரியப் பணியில் இணைப்பது, கூடிய வேதனம் கொடுப்பது, சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்த்தைக் கொடுப்பது போன்றவற்றாலேதான் கல்வியை மேம்படுத்தி ஆக்கத்திறன் மிக்க சமுதாயத்தை உருவாக்கலாம் என்ற குறிக்கோளை கொண்டு நாடு முன்னேறிச் சென்றது. சில ஆண்டுகளில் நாட்டின் முன்னேற்றம் வியக்கத்தக்க வகையில் பிரகாசிக்கத் தொடங்கியது. கல்வியில் சன்மார்க்கம், கணிதம், விஞ்ஞானம், தொழில்நுட்பம் ஆகியவை முக்கிய இடம்பெற்றன. இவைகளை நன்கு கற்பிக்கத் திறமைமிக்க ஆசரியர்கள் நியமிக்கப்பெற்றார்கள்.

ஆசிரியர்களின் மனப்பாங்கு மிக முக்கியமாகக் கருதப்பட்டது. கற்றலுக்கான மகிழ்ச்சிகரமான சூழல் கற்றல் திறமையாகச் செயற்படுவதற்கு அவசியம், பரிசு கற்றலை மேம்படுத்தும், தண்டனை கற்றலை மேம்படுத்தாது, தண்டனை மாணவர்களின் உள விருத்தியைப் பாதிக்கலாம், மாணவர்கள் ஒவ்வொருவரும் வேறுபட்டவர்கள், சிலருக்கு சில விடயங்கள் உடனே விளங்கலாம், சிலருக்கு சில விடயங்கள் தாமதித்து விளங்கலாம், மாணவர்களுக்கு ஆசிரியர் மேல் அன்பும் மரியாதையும் ஏற்படும் வகையில் ஆசிரியரின் நடத்தை அமைதல் வேண்டும், ஆசிரியர் தனது பிழையை ஒத்துக்கொள்ளல் வேண்டும், தன்னைப் பார்க்கிலும் கெட்டித்தன மாணவர்கள் வகுப்பில் இருக்கலாம், தான் கற்கவேண்டிது எவ்வளவோ உண்டு, தமது பணி நாட்டின் வளர்ச்சிக்கு உதவுதல் வேண்டும் போன்றவற்றில் ஆசிரியர் நம்பிக்கை உடையவராக இருத்தல் அவசியம் என்று ஜப்பான் கருதி அதை நடைமுறைப் படுத்தியது. இப்படியான பின்னணியிலேதான் கணிதம் மாத்திரமல்ல மற்றைய பாடங்களும் கற்பிக்கப் பெற்றன.

அமெரிக்காவில் உள்ள கொலம்பியா பல்கலைக் ழகத்தின் கல்விப்பீடமான ரீச்சஸ் கொலிஞ்ஞில் கணிதம் கற்றல்-கற்பித்தல் தொடர்பாக அறிவை மேம்படுத்துவதற்காக கணிதக் கல்வித்துறை ஆரம்பிக்கப்பெற்றது. கணிதக் கல்விப் பேராசிரியராக இயுஜின் சிமித் (Eugen Smith) நியமிக்கப்பெற்றார். கணிதம் கற்றல்-கற்பித்தல் தொடர்பான ஆய்வுகள் நடத்தப்பெற்றன. 1929ஆம் ஆண்டு கிலறன்ஸ் அக்கோமிக் (Clarence McCormic) என்பவர் ஐக்கிய அமெரிக்காவில் உயர்நிலைப் பாடசாலைகளில் கணிதம் கற்பித்தல் தொடர்பான ஆய்வை கணிதக் கல்விப்

பேராசிரியர் இயுஜின் சிமித் அர்களின் மேற்பார்வையில் ஆய்வு நடத்தி, "The Teaching of General Mathematics in the Secondary Schools of the United States – a Study of the Development and Present Status of General Mathematics". ஆராய்ச்சிக் கட்டுரையை சமர்ப்பித்து கலாநிதிப் பட்டத்தைப் பெற்றார். தனது ஆராய்ச்சியிலிருந்து, கணித பாடத்திட்டம், தர்க்க ரீதியாக அல்லாது உளவியல் ரீதியாக அமைதல் வேண்டும் என்னும் கருத்தை தனது முடிபாக எடுத்துக் கூறினார். இந்த ஆராய்ச்சி, ஐக்கிய அமெரிக்காவில் மாத்திரமல்லாது ஐரோப்பிய நாடுகளிலும் கணிதக் கல்வி தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தியது. அதாவது கணிதக் கல்வியில் உளவியல் ஆய்வுகள் எடுத்துக் காட்டியுள்ள முடிபுகள் முக்கியத்துவம் பெறத்தொடங்கின. மனித வளர்ச்சி, படிகளாக ஒன்றன் பின் ஒன்றாக அமைந்துள்ளது என்று ஜீன் பீயாஜே (Jean Piaget) என்ற உளவியலாளர் ஆய்வுகளின் மூலம் எடுத்துக்காட்டியுள்ளார். ஆரம்பக் கல்விபெறும் மாணவர்கள் திட செயற்பாட்டு நிலையிலும் (Concrete Operation) உயர்நிலைப் பாடசாலை மட்டத்தில் கல்விபெறும் மாணவர்கள் நியம சிந்தனை படியிலும் (Formal operation stage) உள்ளார்கள் என்னும் ஆய்வு முடிபைக் கொண்டு கற்பவர்களின் எண்ணக்கரு விருத்தி அமைந்துள்ள தன்மையை உணரலாம். எனவே கணிதத்தின் தர்க்க ரீதியான ஒழுங்கைவிட கற்பவர்களின் எண்ணக்கரு விருத்தியியை அடிப்படையாகக் கொண்டு கணிதம் கற்றல் கற்பித்தல் நிகழ்ந்தாலேதான் கற்றல் பெறுபேறு செயல்திறன் மிக்கதாக அமையும் என்று உணரப்பட்டது.

ஐக்கிய அமெரிக்காவில் 1959இல் ஜெறோம் புறூணரின் (Jerome Bruner) தலைமையில் உவுட்ஸ் ஹோளில் (Woods Hall) என்னும் நகரில் நடைபெற்ற உலகப் பிரசித்தி பெற்ற கருத்தரங்கில் எதையும் எந்த வளர்ச்சிப் படியில் உள்ள பிள்ளைக்கும் அறிவுக்கு உண்மையான வகையில் கற்பிக்கலாம் என்ற புறூணரின் கருதுகோளின் அடிப்படையில் கலந்துரையாடல்கள் நடைபெற்றன. இதன் அடிப்படையில் கற்பிக்கும் விடயம் கற்பவரின் வளர்ச்சிப்படி மட்டத்துக்குக் கொண்டுவரப்பட்டால் கற்றல் சீராக ஏற்படும் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டது. எனவே கற்கும் விடயம் கற்பவரின் வளர்ச்சிப் படியோடு இணைந்து செல்லல் வேண்டும் என்னும் கருத்து வலுப்பெற்றது.

இந்தக் காலகட்டத்தில் அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் பாடசாலைக் கணிதத்தில் மாற்றங்கள் முன்வைக்கப்பெற்றன. "இது புதிய கணிதம்" என்று அழைக்கப்பெற்றது. இலங்கையில் எண்கணிதம், கணிதம் என இரு பாடங்கள் கற்பிக்கப்பெற்றன. 1964ஆம் ஆண்டு எல்லோருக்கும் கணிதம் கற்பித்தல் வேண்டும் என்னும் நோக்கில் புதிய கணித பாடத்திட்டம் தயாரிக்கப்பெற்றது. இக் கணிதத் திட்டத்தில் புதிய அலகுகளும் சேர்க்கப்பட்டன. ஆனால் எண்கணிதப் பாடத்துக்குப் பதிலாக எல்லா மாணவர்களுக்கும் கணிதம் கற்பிப்பதற்கு போதிய ஆசிரியர்கள் இல்லாமையினால் ஒரு பகுதியினருக்கு எண்கணிதமும் மற்றையோருக்கு அட்சரகணிதம், கேத்திர கணிதம், திரிகோணகணிதம் எண்கணிதம் ஆகியவற்றை உள்ளடக்கிய கணிதமும் கற்பிக்கப்பெற்றன.

கொலம்பியா பல்கலைக்கழகத்து கல்விப் பீடத்தில் அதாவது ரீச்சர்ஸ் கொலஜில் 1970 இல் ஆய்வு நடத்திய புறூஸ் சால்ஸ் பேஅர்ட் (Bruce Charles Burt) கணிதமும் விஞ்ஞானமும் ஒருங்கிணைந்து கற்பிக்கப்பெறும்போது கற்கும் மாணவர்களின் கணித அடைவு நிலை தொடர்பாக ஆய்வு நடத்தினார். (The Effect of an Integrated Approach of Teaching of Mathematics and Science on Student Achievement in Mathematics) இந்த ஆய்வுக் கட்டுரையைச் சமர்ப்பித்து 1973இல் கலாநிதிப்பட்டம் பெற்றார். இவருடைய ஆய்வில் இருந்து கணிதமும் விஞ்ஞானமும் ஒருங்கிணைந்து கற்பிக்கப்பெற்றால் மாணவரின் கணித அடைவு மேம்படும் என்பது அறியப்பெற்றது. இந்த ஆய்வு கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் பாடத்திட்ட மறுமலர்ச்சி ஏற்பட்ட சூழலில் பாடசாலைக் கல்வியிலும் ஆசிரியர் கல்வியிலும் அமெரிக்காவில் மாத்திரமல்ல சர்வதேச ரீதியாகவும் பெரும் சீராக்கத்தை ஏற்படுத்தியது.

இலங்கையில் 1972இல் கல்வி முறையில் பெரும் சீராக்கம் நடைமுறைப்படுத்தப்பெற்றது. இதன் பயனாக முதலாம் வகுப்பில் இருந்து கணிதம் கற்பிப்பதற்குத் திட்டமிடப்பட்டது. கணித பாடத்திட்டத்தில் சர்வதேச மாற்றங்களுக்கமைய புதிய அலகுகள் இணைக்கப்பெற்றன. தொடை, வரைபு, புள்ளியியல், நிகழ்தகவு, எண்ணடி போன்ற அலகுகள் பாடத்திட்டத்தில் இடம்பெற்றன. இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பெற்ற கல்வி சீரமைப்பில் ஆரம்ப வகுப்பு கணிதத்தில் கணிசமான சீராக்கம் கொண்டுவரப்பெற்றது. இங்கிலாந்தில் நடைமுறைப்படுத்தப்பெற்ற "நபீல்ட் கணிதத்திட்டத்தின்" (Nuffield Project) அடிப்படையில் ஆரப்ப வகுப்பு ஆசிரியர் கணித கைநூல்கள் தயாரிக்கப் பெற்றன. தமிழில் இவை "செயல்மூலம் உணர்தல்" என்று அழைக்கப்பெற்றன. நபீல்ட் கணிதத்திட்டத்தில் சீனப் பழமொழி மகுட வாசகமாகத் தரப்பட்டிருந்தது. தமிழில் இவ்வாசகம் இவ்வாறு அமையலாம். "நான் கேட்பதை மறந்து விடுகிறேன்" "பார்ப்பதை ஞாபகத்தில் வைத்திருப்பேன்" "நான் செய்வதை விளங்குகிறேன்". அதாவது நபீல்ட் திட்டம் செயல் மூலம் கற்பதை அடிப்படையாகக்கொண்டு செயற்பட்டது. அதேபோல இலங்கை ஆரம்ப வகுப்பு கணிதத்திட்டமும் செயல் மூலம் கற்றலையே அடிப்படையாகக் கொண்டமைந்திருந்தது. இங்கிலாந்தில் இத்திட்டத்துக்குப் பொறுப்பாய் இருந்த பேராசிரியர் ஜோபிரி மத்தியூஸ் இலங்கைக்கு வருகை தந்து இலங்கையில்



இத்திட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு கருத்தரங்குகளை நடத்தினார். இவரோடு உளவியலாளர் ஜீன் பியாஜேயுடன் பணியாற்றிய கலாநிதி ஜோன் பளிஸ் அவர்களும் கருத்தரங்கு நடத்துவதில் இணைந்து கொண்டார்.

ஆபிரிக்க நாடான பொட்ஸ்வானாவில் 1993 இல் ஆரம்பக் கல்வியை முடித்து இடைநிலைக் கல்வியை நாடிச்செல்லும் மாணவர்களின் ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களின் அடைவு நிலை தேசிய மட்டத்தில் ஆராயப்பெற்றது. பொட்ஸ்வானாவில் ஆரம்பக் கல்வி ஏழாம் வகுப்பு வரையும் அதாவது எட்டு ஆண்டு காலம் அமைந்துள்ளது. ஆரம்பக் கல்வியை முடித்து மாணவர்கள் இடைநிலைக் கல்விக்குக் காலடி எடுத்து வைக்கும்போது அவர்கள் 12 வயதை அடைந்து பியாஜேயின் வளர்ச்சிப்படி அமைப்பின்படி நியமசிந்தனைப் பருவத்தை அடைந்துவிட வாய்ப்புண்டு என்று கொள்ளலாம்.

இந்த ஆய்வு பொட்சுவானா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த மவுட்லே, கோணேசபிள்ளை, லுங்கு ஆகியோரால் செய்யப்பெற்றது. (The Quality of Primary School Completers and its Implications for Form I organization and Teaching). A. Report for the Second National Commission on Education, Botswana. Gaborone: Botswana Educational Research Association. இதைத் தொடர்ந்து இதே பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த கோணேசபிள்ளை, மவுட்லே, ஷமீலா ஆகியோரால் "கணித அடைவில் பொட்சுவானாவில் ஆரம்பக் கல்வியை முடித்து வெளியேறும் மாணவர்களின் ஆங்கிலமொழித் திறமை கணித அடைவில் எவ்வாறான செல்வாக்கைச் செலுத்துகிறது" என்பது ஆராயப்பெற்றது. (Influence of Competency of English on Mathematics Achievement of Primary School Completers in Botswana). இந்த ஆய்வறிக்கை ஐக்கிய நாடுகள் சபை சிறுவர் நிதியத்தால் மொசாம்பிக் நாட்டில் பெய்ரா நகரில் ஒழுங்கு செய்யப்பெற்ற சர்வதேச கருத்தரங்கில் சமர்ப்பிக்கப்பெற்று கலந்துரையாடப்பெற்றது. இந்த ஆய்வில் இருந்து கல்வி மொழியான ஆங்கிலத்தின் அடைவுக்கும் கணிதத்தின் அடைவுக்கும் ஒன்றுக்கொன்று உயர் இணைப்பு இருப்பதாக அறியப்பெற்றது. அதாவது ஆங்கில மொழி அறிவில் உயர் அடைவைப் பெற்றவர்கள் கணிதத்திலும் உயர் அடைவைப் பெறும் சாத்தியம் காணப்பட்டது. அதேபோல ஆங்கில மொழி அறிவில் குறைந்த அடைவைப் பெற்றவர்கள் கணிதத்திலும் குறைந்த அடைவைப் பெறும் சாத்தியம் காணப்பெற்றது. பொட்சுவானாவில் பல பாடசாலைகளில் ஆரம்பக் கல்வி தாய்மொழியில் ஆரம்பிக்கப்பெற்றாலும் படிப்படியாக ஆங்கில மொழி மூலம் ஆரம்பக்கல்வி முடிவடைகிறது. கல்வி மொழி எம்மொழியாக இருந்தாலும் அம்மொழியின் அடைவு மட்டம் கணித அடைவு மட்டத்தில் செல்வாக்குச் செலுத்த வாய்ப்புண்டு என்று கொள்ளலாம்.

பத்தொன்பதாம் இருபதாம் நூற்றாண்டுகளில் கல்வியலாளர்களும் உளவியலாளர்களும் கற்றல்-கற்பித்தல் தொடர்பாக சிந்தனை அடிப்படையிலும் ஆய்வுகளின் அடிப்படையிலும் முக்கிய கருத்துக்களை முன்வைத்தனர். மனனம், ஞாபகம், மறதி ஆகியவற்றை பரிசோதனைகள் மூலம் ஆய்வு செய்த எபின்ஹோஸ் இவை மூளையோடு தொடர்புடையன என்றும் ஞாபகத்தில் உள்ளவை எவ்வாறு மறக்கப்பெறுகின்றன என்பதையும் வரைபுகள் மூலம் விளக்கினார். தோன்டைக், நன்கு விளங்கியனவே ஞாபகத்தில் இருக்கும் சாத்தியம் அதிகம் என்றும் விருப்பமான செயல்கள் மீள்வலியுறுத்தப்படுகின்றன என்றும் எடுத்துக் கூறினார்.

இருபதாம் நூற்றாண்டில் உளவியலில் அதிகம் செல்வாக்குச் செலுத்திய உளவியலாளராக பி.எ.ஃப். ஸ்கின்னர் கருதப்பெறுகிறார். இவர் கல்வியில் உளவியலை

எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதை "கற்பித்தல் தொழில்நுட்பம்" (Technology of Teaching) என்னும் நூலில் விளக்கியுள்ளார். இந்த நூலில் "ஏன் ஆசிரியர்கள் தவறுகிறார்கள்" என்னும் தலைப்பில் முக்கிய கருத்துக்களை முன்வைத்தார். அவரது கூற்றின்படி

மாணவர்கள் கற்பதில் இருந்து தப்பித்துக் கொள்ள முயல்வதை தூண்டும் முறைகளை ஆசிரியர்கள் கையாளுகிறார்கள்.

மேலும் எடுத்துரைப்பதும் விளக்குவதும்தான் கற்பித்தல் என்று கருதுகிறார்கள். ஆனால் மாணவன் ஆசிரியரின் கூற்றில் இருந்தும் அவனுக்குக் காட்டப்படுவதில் இருந்தும் கற்பதில்லை.

மணவர்களின் அறிவு நிலைக்கு பொருந்தக்கூடியதாக கற்றல் தொழிற்பாடுகளை வழங்குவதில்லை

நேர் மீள்வலியுறுத்தலை அடிக்கடி வழங்குவதில்லை

இவ்வாறு கூறிய ஸ்கின்னர், எவ்வாறு கற்பித்தல் அமைதல் வேண்டும் என்று பின்வருமாறு கூறுகிறார்:

மாணவன் செய்ய வேண்டியதை தெளிவாக விளக்குதல்

செய்ய வேண்டிய பணிகளை சிறு சிறு கூறுகளாக இலகானவற்றில் இருந்து சிக்கலானவைகளாக முன்வைத்தல்

ஒவ்வொரு படியிலும் மாணவன் வெற்றி பெற்றவற்றை, மீள் வலியுறுத்தல்

செய்யவேண்டிய பணி சிக்கலாக மாணவனுக்குப் புலப்பட்டால் அதை இலகுவாக்கி தன்னம்பிக்கையை ஏற்படுத்தி மாணவன் அடையவேண்டிய இலக்கை நோக்கி நகர்வதற்குத் துணைபுரிதல்

உலகளாவிய ரீதியில் கல்வியில் செல்வாக்குச் செலுத்தியுள்ள ஜெரோம் புறூணர், கற்பித்தலில் சுழல் பாடவிதானத்தை முன்னுரைத்தார். இந்த எண்ணக்கரு கணிதம் கற்பித்தலில் மிக நன்கு பயன்படக் கூடியது. அதாவது ஒரு அலகைப் கற்பிக்கும்போது அதற்கு அடிப்படையாக உள்ள அறிவை மீட்டு அதன்பின் கற்பிக்கும் அலகுக்குச் செல்லுவதோடு அடிக்கடி பின் னோக்கிச்சென்று முன் கற்றவற்றை ஞாபகமூட்டினால் கற்றல்-கற்பித்தல் நோக்கம் சீராக நிறைவேறும் சாத்தியம் உண்டு.

ஜேறோம் புறூணர் முன்வைத்துள்ள கருத்துக்களில் ஒன்று பிள்ளைகள் விடும் பிழைகளை ஆராய்ந்து குறிப் பிட்ட பிழையின் தன்மையைக்கண்டு பிழையைத் திருத்தி கற்றலைத் தொடர்வதாகும். கல்வி அடைவில் உயர்ந்து விளங்கும் நாடுகளில் ஆசிரியர் கல்வியில் இக்கருத்து முக்கிய இடம் பெறுகிறது. இதன் பிரதிபலிப்பாக வகுப் பறையில் பிள்ளைகள் விடும் பிழைகளை ஆராய்ந்து பிழைகளைத் திருத்தி சரியானவற்றை மீளவலியுறுத்திக் கற்றல்-கற்பித்தல் செயல்பாட்டைத் தொடரும் மனப் பாங்குள்ள ஆசிரியர்கள் உருவாக்கப்படுகிறார்கள்.

எனது பேரன் வகுப்பில் கொடுத்த கணக்குகளுக்கு பிழை வாங்கியுள்ளதால் வகுப்புக்குப்போக பின்வாங்கினான். அவனை அழைத்து அப்பியாசப் புத்தகத்தைப் பார்த்தேன். முதலாவது கணக்கு

ரமணன் 639 மாபிள்களை வைத்திருந்தான். அவன் ஆயிரம் மாபிள்களைச் சேர்க்க இன்னும் மாபிள்கள் எத்தனை வேண்டும்?

மாணவனின் விடை 461 தேவை

இரண்டாவது கணக்கு

ஒரு பாத்திரத்தில் உள்ள பாலின் அளவு 375 ml. பாலின் அளவு ஒரு லிட்டர் ஆவதற்கு இன்னும் எவ்வளவு பால் சேர்க்க வேண்டும்?

மாணவனின் விடை 725 ml. இரண்டு விடைகளுக்கும் பெரிய பிழை அடையாளங்களையிட்டு வகுப்பை முடித்து விட்டார் ஆசிரியர். மாணவனுக்கோ ஏன் பிழை என்று விளங்கவில்லை.

இரண்டு கணக்குகளும் 1000 இல் இருந்து அதிலும் சிறிய எண்ணைக் கழிப்பதாகும்.

மாணவன் 1000
639
--------
461 என்று விடையை எழுதினான்.

இங்கே முதலாவது கழித்தலும் சரி. அதாவது 10 இல் இருந்து 9 கழிக்கப்பட்டது. இரண்டாவது கழித்தலும் சரி. 9 இல் இருந்து 3 கழிக்கப்பட்டது. மூன்றாவது கழித்தலில் 10இல் இருந்து ஒன்று ஏற்கனவே எடுக்கப்பட்டது நினைவுக்கு வரவில்லை. எனவே 10இல் இருந்து 6 ஐ கழித்து 4 ஐ எழுதினான். இந்தப் பிழையை உடனே விளக்கி இருந்தால் அடுத்த கணக்குக்கு சரியான விடையைக் கண்டிருப்பான். மேலும் சரியான அம்சங்களை அங்கீகரித்து பிழையான இடத்தைச் சுட்டிக்காட்டுவது முக்கியமாகும்.

இரண்டாவது கணக்கு இவ்வாறு செய்யப்பட்டது:

1000
375
---------
725

முதலாவது கணக்கில் ஏற்பட்ட பிழைதான் இங்கும் ஏற்பட்டுள்ளது. முதலாவது பிழையைத் திருத்தியிருந்தால்

சரியான முறை மீள்வலியுறுத்தப்பட்டிருந்தால் இரண்டாவது கணக்கு பிழை வந்திருக்காது.

கற்றலின்போது எவ்வாறான பிழைகள் ஏற்படுகின்றன என்று நோக்குவோம். சில வேளைகளில் 22 ஆல் பெருக்குவதற்கு 2ஆல் மாத்திரம் பெருக்கப்படுகிறது. பரப்பைக் காண்பதற்குப் பதிலாக சுற்றளவு காணப்படுகிறது. வர்க்கமூலம் காணப்படுவதற்கு பதிலாக வர்க்கம் காணப்படுகிறது. இவ்வாறான பிழைகளை செய்கைகளை மீள்பார்வை செய்யும்போது கண்டுபிடித்து விடலாம். எனவே தான் செய்யும் வேலையை மீள்பார்வை செய்யும் மனப்பாங்கை மாணவர் மத்தியில் வளர்த்தல் அவசியமாகும். செய்த வேலையை மீள்பார்வை செய்யாத காரணத்தால் குறிப்பாக பரீட்சைகளில் சிலர் சித்தியடையாத நிலை உருவாகலாம். இவ்வாறான பிழைகள் ஏற்படுவதற்கு சூழல் நெருக்கடியான நிலையில் இருப்பதும் காரணமாகும். நெருக்கடியான சூழலில் தற்செயலாக ஏற்படும் பிழைகள் அதிகம் ஏற்படக்கூடிய சந்தர்ப்பம் உண்டு என்று கருதப்படுகிறது.

இன்னுமோர் வகையான பிழை சரியான எண்ணக்கரு அல்லது கணித உண்மை மீள வலியுறுத்தப்படாமையே காரணம் எனக் கொள்ளலாம். அண்மையில் ஒரு பரீட்சையில் ஒரு நேர் கோட்டில் இரு கோணங்கள் அமைந்தால் ஒரு கோணம் 60 பாகை எனின் மற்றைய கோணம் எத்தனை பாகை எனப் படத்துடன் கேட்கப்பட்டது. சிலர் இதற்கு விடையளிக்கவில்லை. 40 பாகை என்னும் விடையும் காணப்பட்டது. இதற்குரிய காரணத்தை நோக்கவேண்டியது அவசியமாகும். வெப்பத்தை அளப்பதற்கு பயன்படுத்தப்படும் கருவி 100 பாகையாக அமைந்துள்ளது. 100 சென்ரிமீட்டர் ஒரு மீற்றராகும். பரீட்சையில் கொடுக்கப்படும் புள்ளிகள் நூற்று வீதத்தில் தரப்படுகின்றன. எனவே 100 பிள்ளையின் நினைவில் நிலைத்து நிற்கின்றது. 180 பாகை ஒரு நேர் கோட்டில் அமையும் என்பது பிள்ளையின் நினைவில் இருப்பதில் சிரமம் உண்டு. எனவே இந்த கணித எண்ணக்கருவை அடிக்கடி ஞாபகம் ஊட்டவேண்டியுள்ளது. அதாவது பிழை ஏற்படும் காரணத்தை கண்டறிந்து பிழையைத் தவிர்த்தலுக்கு வழி காணல் முக்கியமாகும்.

முடிபுரையாக நோக்கினால், ஒருவரின் கற்றலுக்கு, கற்பவருக்கும் கற்பிப்பவருக்கும் இடையில் இன்பகரமான இணைப்பு இருத்தல் வேண்டும். கற்கும் சூழலை பயம், தண்டனை, வன்சொல் ஆகியன பாதிக்கின்றன என்பதை ஆய்வு முடிபுகள் எடுத்துக்காட்டியுள்ளன என்பதை கல்வியில் ஈடுபட்டுள்ளவர்களும் பெற்றாரும் உணர்தல் வேண்டும் கற்றலில் குறிப்பாகக் கணிதம் கற்றலில் தனியாள் வேறுபாடு உண்டு. வகுப்பில் உள்ள அத்தனை பேரும் கற்பித்தவற்றை நன்றாக விளங்கியிருக்க மாட்டார்கள். சிலருக்கு தனிப்பட்ட உதவி தேவையாகும். சில பாடசாலைகளில் கணித பாடத்தை மாணவர் நிலைக்கு ஏற்றவாறு பிரித்துக் கற்பிப்பதுண்டு. அவுஸ்திரேயாவில் சில மாவட்டங்களில் ஒவ்வொரு பாடத்தையும் மாணவரின் நிலைக்கு ஏற்றவாறு பிரித்துக் கற்பிக்கும் முறையும் உண்டு. சில நாடுகளில் கணிதம் விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கு விசேட பாடசாலைகள் ஒழுங்கு செய்யப்பட்டு வருகின்றன. கற்பித்தல் மாணவனை தானாவே அறிவு தேடும் திறனை வளர்க்கக்கூடியதாக அமைதல் தற்கால உலகில் வரவேற்கப்படுகிறது. ஆனால் ஆரம்பத்தில் கணிதத்தில் திறமை காட்டாத மாணவர்கள் காலப்போக்கில் கற்பித்தல் முறையின் மாற்றத்தாலும் ஆசிரியர் மாற்றத்தாலும் மனோநிலையில் ஏற்பட்ட மாற்றத்தாலும் பிரமிக்கத்தக்க திறமையை வெளிப்படுத்தும் வாய்ப்பும் உண்டு. கற்பவர் பிழைவிடுவது சாதாரணமான நிகழ்ச்சி என்பதை உணர்பவர்களே ஆசிரியப்பணியில் ஈடுபடல் வேண்டும். இப்பிழைக்கு கற்பவரைக் பார்க்கிலும் கற்பிப்பவரே பொறுப்பு என்பதை ஆசிரியர் உணர்தல் முக்கியம். பிழைகள் ஏன் ஏற்படுகின்றன என்பதை ஆய்வுக் கண்ணோடு நோக்கி பிழைகளை பொறுமையோடும் அன்போடும் திருத்தினால் கற்றல் சீராக நடைபெற வாய்ப்புண்டு. ஒரு மனிதன் பிற்காலத்தில் தான் கணிதத்தில் திறமை அடையாததுக்குக் காரணம் கணித ஆசிரியர் என்றோ தான் படித்த பாடசாலை என்றோ குறை கூறு வதற்கு வாய்ப்பளிக்காத வகையில் கல்வி செயற்பாடுகள் அமைதல்வேண்டும்.

**உசாத்துணைப் பட்டியல்**


செயல் மூலம் உணர்தல் 1, 2, 3. கல்வி அமைச்சு வெளியீடு

Bruner, J.S. (1960) The process of education. Cambridge: Harvard University Press

Bruner,J.S. (1966). Toward a theory of instruction. Cambridge: Belknap Press.

Burt, B.C. (1970). The effect of an integrated approach of teaching of mathematics and science on student schievement in mathematics. New York: Milbank Memorial Library, Columbia University

Konesappillai,K. (1987). A comparative study of the two theses submitted in partial fulfillment for the requirement for the award of doctor of philosophy at Teachers College Columbia University. New York: Milbank Memorial Library, Columbia University

Konesappillai,K., Mautle, G, & Shameela,E. (1993). Influence of competency of English on mathematics achievement of primary school completes in Botswana: Beira, Mozambique: UNICEF Conference Report.

Mautle, G., Konesappillai,K. and Lungu, E. (1993) The quality of primary school completers and its implications for Form I organization and teaching. A. Report for the Second National Commission on Education, Botswana. Gaborone: Botswana Educational Research Association.

Mc Cormic, C. (1929). The teaching of general mathematics in the secondary schools of the United States – a study of the development and present status of general mathematics. New York: Milbank Memorial Library, Columbia University

Skinner, B.F. (1968) The technology of teaching. New York: Appleton-Crntury-Crofts.

# மாணவர்களின் கணிப்புத் தேவையை பூர்த்தி செய்வதில் ஆசிரியர்களின் வகிபங்கு

அபுபக்கர் நளீம்
வருகை விரிவுரையாளர், கல்வி பீடம், இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்



மாஸ்லோ (Maslow) எனும் உளவியலாளர் மனித தேவைகளை படி நிலைப் படுத்தி தேவைக் கோட்பாட்டை (Needs theory) முன்வைத்துள்ளார். இக்கொள்கையின் படி மாணவர்களின் பல தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டிய வகிபாகத்தினை ஆசிரியர்கள் கொண்டுள்ளனர்.

மாஸ்லோ மனிதத் தேவைகளை 1950களில் முதலில் ஐந்தாக வகுத்தார். பின்னர் 1970 களில் இவற்றை ஏழாக அடையாளப்படுத்தினார். அவரின் வகைப்படுத்தல் பின்வருமாறு.

1. உயிரியல், உடலியற் தேவைகள் - Biological and Physiological needs
2. காப்புத் தேவைகள் - Safety needs
3. அன்புத் தேவைகள் - Belongingness and Love needs
4. கணிப்புத் தேவைகள் - Esteem needs
5. அறிவுத் தேடல் தேவைகள் - Cognitive needs
6. அழகுணர்வுத் தேவைகள் - Aesthetic needs
7. தன்னடைவுத் தேவைகள் - Self-Actualization needs

இத்தேவை அடுக்கில் மாஸ்லோ குறிப்பிடும் கணிப்புத் தேவையை ஆசிரியர்கள் வகுப்பறைகளில் எந்தளவு நிறைவேற்றுகின்றனர். என்பதை மையப்படுத்தியே இக்கட்டுரை எழுதப்படுகிறது.

### கணிப்புத் தேவை

அன்புத் தேவை நிறைவடைந்ததும் கணிப்புத் தேவை ஏற்படும் என்று மாஸ்லோ குறிப்பிடுகிறார். இவருடைய தேவைப்படி நிலையில் நான்காவதாக கணிப்புத் தேவையைக் குறிப்பிட்டுள்ளார்.

கணிப்புத் தேவை சுய கணிப்பு, பிறர் கணிப்பு என இரு வகைப்படுத்தப்படும்.

### சுய கணிப்பு

குறித்த இலக்கை அடைய அல்லது ஒரு சாதனையைச் செய்ய தன்னால் முடியும் என்ற தன்னம்பிக்கையே சுய கணிப்பாகும். தன்னைப்பற்றிய பெறுமானத்தை ஒருவன் அறிந்து சுய கணிப்புத் தேவையை நிறைவு செய்வான். உலகத்தில் தானும் பயனுள்ளவன் என்ற உணர்வும் தன்னைப் பற்றிய பெறுமானத்தையும் அறிந்து சுய கணிப்புத் தேவையை மனிதன் நிறைவு செய்வான் சுய கணிப்பு நிறைவேறாவிட்டால் தாழ்வுணர்ச்சி ஏற்படும்.

### பிறர் கணிப்பு

ஏனையேரிடமிருந்து தன்னைப் பற்றிய நன்மதிப்பை பெறுவதே பிறர் கணிப்பாகும். இன்னொரு விதத்தில் கூறுவதாயின் பிறரிடமிருந்து பெயரும், புகழும், கணிப்பும், விரும்புதலும் பிறர் கணிப்பு எனலாம்.

பிறரிடமிருந்து கணிப்பினைப் பெற வேண்டும் என்ற கணிப்புத் தேவை எல்லா வயதினருக்கும் இயல்பாக இருக்கும். குழந்தைகள் தமது செயல்களை பெற்றோர் பார்த்து கணிக்க வேண்டும் என்று விரும்பும். இதற்காக பெற்றோரை பிள்ளைகள் தமது செயல்களைப் பார்த்து கணிக்குமாறு கூறுவர்.

மாணவர்கள் ஆசிரியர் தமது செயல்களையும் தன்னையும் கணிக்க வேண்டும் என்று விரும்புவர். கட்டிளமைப் பருவத்தினர் ஆசிரியரும் நண்பர்களும் தம்மைக் கணிக்க வேண்டும் என்று விரும்புவர். ஆனால் இவர்கள் வாயினால் கணிப்பை கேட்க மாட்டார்கள். கணிப்புக் கிடைக்காவிடில் தகாத நடத்தையில் ஈடுபட்டேனும் பிறரின் கணிப்பை பெற இவர்கள் முயல்வர். இதனால் நெறி பிறழ்வான நடத்தையில்கூட இவர்கள் ஈடுபடலாம்.

பொதுவாக எல்லோருமே தம்மைப் பிறர் புகழவேண்டும், மெச்ச வேண்டும் என்று எதிர்பார்கின்றனர். இவ்வாறான கணிப்பை பெற மாணவர்களும் முயல்வது இயற்கையானது. வளர்ந்த மாணவர்கள் தாம் செய்யும் தீரச் செயல்களையோ கெட்டித்தனங்களையோ ஏனையோர் புகழுமாறு வாயாற் கேட்காவிட்டாலும் உள்ளத்தால் பெரிதும் விரும்புகின்றனர். விசேடமாகப் பெற்றோர் மற்றும் ஆசிரியர்களின் கணிப்பை அவர்கள் பெரிதும் எதிர்பார்கின்றார்கள். இதையுணர்ந்து புகழுரைகள், பரிசுகள் போன்றனவற்றை அளிப்பதன் மூலம் குறித்த மாணவர்கள் மட்டுமன்றி ஏனைய

மாணவர்களும் தம்மிடையே மறைந்து கிடக்கும் கணிப்புத் தேவைகளால் உந்தப்பட்டு கல்வியில் முன்னேற்றம் அடைய முயற்சிப்பர். அத்துடன் நன்னடத்தை பெற்று தம்மைச் சீராக்கிக் கொள்ளவும் முயல்வர். சிறுவர் களாயின் தம்மைப் புகழுமாறு சில நேரங்களில் வாய்விட்டு கேட்பார்கள். சில பிள்ளைகள் ஏதாவது ஒன்றைச் செய்து விட்டு அதனைப் பார்த்து கணித்துக் கூறுமாறு கேட்பர். இவ்விடயத்தில் பெற்றோர், ஆசிரியர்கள் புரிந்துணர்வுடன் நடந்து கொள்ளல் வேண்டும்.

சில வேளைகளில் வகுப்பறைச் செயற்பாடுகளில் ஆசிரியர்களின் கணிப்பை பெற்றுக் கொள்ளாத சில மாணவர்கள் வேறு முறைகள் மூலம் ஆசிரியர்களினதும் சக மாணவர்களினதும் கணிப்பைப் பெற முயல்வர். உதாரணமாக தேவையின்றி அளவுக்கதிமாக ஆசிரியருக்கு உதவ முன்வருதல் கரும்பலகையை அழிக்க எழுந்து ஓடுதல், அடிக்கடி எழுந்து நிற்றல் இன்னோரன்ன செயற்பாடுகளை அவர்களிடம் காணலாம். இன்னும் சில கணிப்புக் குறைந்த மாணவர்கள் மற்ற மாணவர்களைத் தாக்கி அதன் மூலம் வகுப்பில் குழப்ப நிலைமையை உண்டாக்கி கணிப்பைப் பெற முயல்வர். அது மட்டுமன்றி கணிப்பு இல்லாத காரணத்தால் சில மாணவர்கள் தாம் ஒன்றுக்கும் உதவாதவர்கள் என்ற விரக்தி நிலைக்கும் மனமுறிவுக்கும் உட்பட்டு அதன் காரணமாக அவர்களிடம் பல பிழையான விரும்பத்தகாத துலங்கல் ஏற்படலாம்.

இத்தகைய நிலமைக்கு தனியாள் உதவியாளர்கள் இன்னுமொரு விதமான விளக்கத்தினை அளிக்கின்றார்கள். பொதுவாக மனிதர்களுக்கு “உடைமையாயிருத்தல்” என்றதொரு அத்தியாவசிய தேவை இருக்கின்றது. உதாரணமாக தான் சார்ந்திருக்கும் குடும்பம்,சமூகம், பாடசாலை, வகுப்பறை போன்றவற்றின் உடைமையாகத் தான் இருக்க வேண்டும் என இவர்கள் விரும்புகின்றனர். இந்த உடைமை என்ற உணர்வு மற்றவர்களின் கணிப்பையும் கவனத்தையும் பெறும் போதே கிடைப்பதாக இவர்கள் உணர்கின்றனர். இல்லா விட்டால் தான் வேண்டப் படாதவன் என்ற எதிரான உணர்வு இவர்களை வாட்டி வதைகின்றது. குடும்பமாக இருந்தால் பெற்றோரினதும் சகோதரர்களினதும் கவனத்தை தம்பக்கம் ஈர்க்க விரும்புகின்றனர். தம்மை விட தமது சகோதரர்கள் மேம்பட்டுச் செல்லும் சந்தர்ப்பங்களில் தான் இவ்வுடமை நிலைமை இழப்பதாக உணர்வடைகின்றனர். இதனால் போட்டி, பொறாமை என்ற நிலமைகளும் உண்டாகின்றன. வகுப்பறை நிலைமையில் ஆசிரியர்களின் கவன ஈர்ப்பை பெற மாணவர்கள் இதனாலேயே பெரும் பிரயத்தனங்களை மேற்கொள்கின்றனர்.

எல்லா மாணவர்களும் ஆசிரியரின் கணிப்பு வேண்டி தம்மாலான எல்லாப் பிரயத்தனங்களையும் மேற் கொள்கின்றனர். எனவே ஆசிரியர்கள் பாடத்தில் கெட்டித்தனம் என்பதை மட்டும் வைத்துக்கொண்டு கணிப்பைக் கொடுக்க முற்படாமல் மாணவர்களிடையே பொதிந்து கிடக்கும் பல்வேறு ஆற்றல்களை இனங்கண்டு எல்லா மாணவர்களும் பெறத்தக்கதாக கணிப்பைக் கொடுக்க வேண்டும். நேரம் தவறாமை, தூய்மை, அழகான உறுப்பமைந்த எழுத்து, ஒழுக்கம், கலை இலக்கிய வெளிப்பாடுகள், விளையாட்டுத்திறன், மார்க்க ஈடுபாடு என்றவாறு ஏதோ ஒரு திறன், மாணவர்களிடம் மறைந்து கிடக்கும் என்பதை ஆசிரியர் மறக்கலாகாது. மேலும் கெட்டித்தனமான மாணவர்களுக்கு மட்டுமே ஆசிரியர் கணிப்பைத் தொடர்ந்து கொடுத்துக் கொண்டிருந்தால் காலக்கிரமத்தில் குறித்த மாணவனும் ஆசிரியரின் கணிப்பை ஒரு பொருட்டாகக் கருதவும் மாட்டான்.

தன்னைப்பற்றிய நற் கருத்தும், சமூதாயத்தில் தனது பங்கு பற்றிய உண்மையுணர்வும் ஒருவனுக்கு ஏற்பட பிறரது ஏற்பு (Acceptance) இன்றியமையாததாகும். இத்தேவையை நிறைவேற்றிக் கொள்வதற்குத் தடை ஏற்படுவதால் உள நிலை பாதிக்கப்படல், குறைந்த ஆளுமைப்பண்பு, இழிவான செயற்பாடுகளில் ஈடுபடல் போன்ற விளைவுகளை ஏற்படுத்த சந்தர்ப்பம் உண்டு.

**கணிப்புத் தேவையின் முக்கியத்துவம்**

ஆசிரியர்களின் கணிப்பு குறிப்பிட்டளவு ஊக்கலை மாணவர்களுக்கு வழங்குகின்றது. மாணவர்கள் தற்போது இருக்கும் நிலைமையிலேயே அவர்களை ஏற்றுக் கொண்டு, மதித்து, அவர்களின் ஆற்றலில் உள்ள தனது நம்பிக்கையை எற்றி வைத்து, அவர்களின் உண்மையான முயற்சிகளை வரவேற்று சிறந்த கற்றலுக்கான சூழலை அமைக்கும் போது ஆசிரியர்-மாணவர் பரஸ்பர நம்பிக்கை ஏற்படுகின்றது. இதுதான் ஊக்கலுக்குத் தேவையான முக்கியமான நிபந்தனையாகும்.

டின்க்மெயொர், டிரெய்க்கர்ஸ் (1963) ஆகியோர் ஊக்கம் அளிக்கும் ஆசிரியர் பற்றி பின்வருமாறு கூறுகின்றனர்.

- மாணவன் தற்போது இருக்கும் நிலை எதுவாக இருந்தாலும் அதை மதிப்பர்.
- மாணவர்களின் ஆற்றல்கள் வளர்க்கப்பட்டால்தான் அவர்களில் நம்பிக்கை வைக்கலாம் என்பதை விடவும் நேராகப் பிள்ளைகளில் நம்பிக்கை வைப்பார்.
- மாணவரின் ஆற்றலில் நம்பிக்கைவைப்பர். அவர்களின் சுய கௌரவத்தைக் கட்டியெழுப்புவதுடன் பிள்ளைகள் சுயநம்பிக்கையை அடைய உதவுவர்.
- மாணவர்களின் முயற்சிகளுக்கு அங்கீகாரம் அளித்துப் பாராட்டுவர்.

» பிள்ளைகளின் விருத்திக்கு குழு இயல்பைப் பயன்படுத்துவர்.

» பிள்ளை தனது நிலையை உறுதிப்படுத்தும் வகையில் குழுக்களை ஒன்றிணைப்பார்.

» பிள்ளை வெற்றி பெறக்கூடியவாறு உளவியல் ரீதியாக அணுகி ஆற்றல் மேம்பாட்டுக்கு உதவுவர்.

» மாணவர்களின் சுயபலங்களில் கவனத்தைக் குவித்து அங்கீகாரம் அளிப்பர்.

» பிள்ளைகளின் இரசனையைப் பயன்படுத்திக் கற்பித்தலைச் சக்தி மிக்கதாக்குவர்.

மேலுள்ள கருத்துக்கள் கணிப்புத் தேவையின் முக்கியத்துவத்தையே வலியுறுத்துகின்றன.

எல்லாக் கற்பித்தல் நிலமைகளிலும் நேரான அணுகுமுறைகளையே கையாள வேண்டும். மாணவர்களின் பலவீனங்களைச் சுட்டிக் காட்டுவதை விடுத்து அவர்களின் சுய பலத்தைத்தான் பாராட்டுதல் வேண்டும் எனது வீடும் குடும்பமும் என்ற தலைப்பில் முதலாம் வகுப்புப் பிள்ளையொன்று சித்திரம் ஒன்றைக் கொண்டுவந்து காட்டியபோது ஆசிரியர் "இந்தத் தோட்டம் எவ்வளவு அழகாக இருக்கின்றது" என்று கூறவேண்டுமேயொழிய வீட்டின் உயரமும் பிள்ளையின் உயரமும் எப்படிச் சமமாக வரமுடியும் என்று வினவக் கூடாது. இவ்வாறே மோசமான எழுத்தாற்றல் கொண்ட பிள்ளையொன்று தான் எழுதிய தாள் ஒன்றைச் சமர்ப்பித்தபோது அதிலுள்ள ஏதாவது நல்லவிடயத்தை இனங்கண்டு பாராட்ட வேண்டும். உதாரணமாக சின்ன சின்ன வசனங்களாக எழுதப் பட்டுள்ளமையை பாராட்டலாம். அதாவது பிள்ளையின் சுய பலத்தைக் கண்டு ஊக்குவிக்க வேண்டுமேயொழிய அவர்களின் பலவீனத்தைச் சுட்டிக் காட்டி அவைகளைத் தவிர்க்கச் செய்ய முயலக்கூடாது.

மாணவர் ஒருவரது செயற்பாடுகள் பற்றி பின்னூட்டிக் கருத்துரை ஒன்றை வழங்குவதன் முழுமையான நோக்கம் அம்மாணவரின் நடத்தை மற்றும் ஆற்றுகை தொடர்பில் முன்னேற்றத்தினை ஏற்படுத்துவதாகும். இந்த வகையில் மாணவரின் திருப்திகரமற்ற செயற்பாடு தொடர்பில் மேற்கொள்ளப்படும் விமர்சனமானது ஆசிரியர் அது தொடர்பில் தனது கோப உணர்ச்சியினை அல்லது மனக்கசப்பினை வெளிப்படுத்துவதாக அமைதல் கூடாது. அவ்விமர்சனமானது மாணவரின் மனதைப் புண்படுத்தி அவரது தன்னம்பிக்கையினை இழக்க காரணமாகி விடக்கூடாது.

எதிர்மறையான விமர்சனமானது மாணவரினது தன்னம்பிக்கையின் அடித்தளத்தினை ஆட்டம் காணச் செய்வதுடன் தாழ்வு மனப்பான்மை ஒன்று ஏற்படவும் காரணமாகி விடும். இதனால் அம்மாணவர் குறிப்பிட்ட விடயத்தினை மீண்டும் மேற்கொள்ளும் போது மனச் சஞ்சலத்திற்குள்ளாகி அதில் மேலும் தவறிழைப்ப வராகிவிடுவார். சில சந்தர்ப்பங்களில் எதிர்மறையான விமர்சனத்திற்குள்ளான அந்த விடயத்தினை அதன் பின்னர் மேற்கொள்ள முயற்சிப்பதனையே அடியோடு கைவிட்டு விடவும் கூடும். அத்துடன் அவ்விடயம் தொடர்பில் ஓர் வெறுப்பும் மனக் கசப்பும் நம்பிக்கையீனமும் ஏற்படுவதனால் தன்னைப்போல் வெறுப்புணர்ச்சி கொண்ட அவற்றில் ஏற்கனவே பின்தங்கி நிற்கும் மாணவர்களுடன் கூட்டுச் சேர்ந்து தன்னையும் அவர்களில் ஒருவராக்கிக் கொள்ள முயற்சிக்கக்கூடும். இவ்வாறான மாணவர்கள் மனத்தளர்வு, கோபம், நம்பிக்கையீனம், விரக்தி போன்ற பல்தரப்பட்ட எதிர்மறையான உணர்சிகளுக்கு ஆட்பட்டு கல்விசார் நடவடிக்கைகளில் மட்டுமன்றி பொதுவாக வாழ்க்கை தொடர்பிலேயே எதிர்மறையானதொரு பார்வை கொண்டவர்களாக மாறி விடுவதற்கும் சந்தர்ப்பம் உண்டு.

இந்த வகையில் ஒருவரது நடத்தை அல்லது ஆற்றுகை தொடர்பில் மேற்கொள்ளப்படும் விமர்சனமானது அவரது ஆற்றல் சுயமதிப்பு மற்றும் தன்னம்பிக்கை என்பவற்றினை எந்த விதத்திலும் பாதிக்காத வகையில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

**கணிப்புத் தேவையும் ஆசிரியரின் வகுப்பறைச் செயற்பாடுகளும்**

மாணவர்களின் கணிப்புத்தேவையினை வகுப்பறையில் ஆசிரியர் பூர்த்தி செய்வது அவசியமாகும். தற்கால வகுப்பறைகளில் ஆசிரியர்களால் கணிப்புத் தேவை ஓரளவு பூர்த்தி செய்யப்பட்டாலும் இன்னும் போதிய அளவிலும் சரியான வித்திலும் இடம்பெறவில்லை என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்ட வண்ணமே உள்ளது.

அனேகமாக வகுப்பறைகளில் தவறை மையமாகக் கொண்டு மாணவர்களின் செயற்பாடுகளை ஆசிரியர்கள் அணுகுவதால் தாழ்வு மனப்பான்மை, தேர்ச்சி இன்மை என்பவற்றை மாணவர்கள் அடைகின்றனர். அவர்களினால் ஆசிரியர் எதிர்பார்க்கும் தரத்தை அடைய முடிவதுமில்லை ஆசிரியரின் எதிர்பார்ப்பை நிறைவேற்ற முடிவதுமில்லை. மாணவர்கள் நன்றாக கற்க வேண்டுமென்று ஆசிரியர்கள் எதிர்பார்க்கின்றார்கள். ஆனால், அவர்களின் தவறுகளை சுட்டிக்காட்டுவதன் மூலம் சுய தோற்கடித்தலுக்கு மாண வரை இட்டுச் செல்கின்றனர். மனிதர்கள் எப்போதும் முற்று முழுதாகச் சரியாக நடக்க *இயலாதவர்கள்* என்பதை மறந்து விடுகின்றனர்.

மாணவர்கள் விடும் தவறுகள், குறைபாடுகளில் கவனம் குவித்தல், அவர்களை அப்படியே ஏற்றுக் கொள்ள

மறுத்தல், அவர்கள் நன்றாக செயற்பட்டால் மட்டுமே ஏற்றுக் கொள்வதாக நிபந்தனை விதித்தல் என்பன மாணவர்களின் ஊக்கத்தை கெடச் செய்கின்றன. மாணவர்கள் எவ்வளவு தூரம் இருக்க வேண்டும் என்பதை அவர்களுக்கு சுட்டிக் காட்டிக் கொண்டே இருப்பது மாணவனை ஊக்கம் கெடச் செய்யும் அணுகுமுறையாக கருதப்படுகின்றன. இந்நடவடிக்கை அவன் பெரும் முயற்சி எடுப்பதற்கு பதிலாக முயற்சி செய்து பார்ப்பதற்கு கூட மனமில்லாமல் செய்து விடுகின்றது. அவன் இப்போது நல்ல நிலமையில் இல்லை என்று தானே இதன் மூலம் சொல்லுகின்றோம். இதுதான் ஒருவருக்கு சொல்லக் கூடிய மிக மோசமான விடயமாகும். பொதுவாக ஆசிரியர்கள் மாணவர்களுக்கு அவர்களின் தற்போதைய நிலமை போதுமானது அல்ல என்றும் இன்னும் உணர வேண்டுமென்றுதான் கூறிவருகின்றனர். "நிஸார் இதை விட மிக நன்றாக செய்ய முடியும்" என்றெல்லாம் கூறுவது மாணவர்களின் அடைவை மேம்படுத்த சரியான வழியல்ல என்று தனியாள் உளவியலாளர்கள் கூறுகின்றனர். ஆசிரியர்கள் பிள்ளைகளை தற்போதுள்ள நிலைமையிலே ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆசிரியர்கள் எதிர்பார்க்கும் அதி சிறந்த நிலமையில் மாணவன் இல்லாவிட்டாலும் இவ் இடத்தில் ஆசிரியர் "இப்போது நீர் சரியாகக் செய்கின்றீர். மிக்க நன்று இனி நாம் சேர்ந்தே படிப்போம்" என்றுதான் கூற வேண்டும்.

பிள்ளையைக் கண்டித்தல், தண்டனை வழங்குதல் என்னும் விடயங்களில் மட்டும் அக்கறை செலுத்தாது, பிள்ளை செய்து முடித்த பணிகளுக்கு உரிய பாராட்டை வழங்க ஆசிரியர்கள் கற்றுக்கொள்ளல் வேண்டும். கண்டிக்க முற்படும் போது எப்போதாவது பிள்ளையைப் பாராட்டியுள்ளோமா என்பது பற்றியும் ஆசிரியர்கள் சிந்தித்துப் பார்க்கப் வேண்டும்.

பின்வரும் வசனங்களை அதிக ஆசிரியர்கள் வகுப்பறைகளில் பயன்படுத்துவதைக் காணமுடிகின்றது.

» மாணவன் ஒருவன் தான் வரைந்த படத்தை ஆசிரியரிடம் காட்டிய போது ஆசிரியர் "நீர் வரைந்துள்ள வீடு நன்றாக உள்ளது. ஆனால் நீர் அதிக வர்ணங்களைப் பயன்படுத்தவில்லை" என்று கூறினார்.

» உடற்கல்வி ஆசிரியர் "இப்போது விளையாட்டில் நீர் பங்கு கொள்ளலாம். ஆனால் தற்போது இருப்பதைவிட அதிகமான அளவில் நீர் விளையாட்டில் பங்குபற்ற வேண்டும்" என்று குறிப்பிட்டார்.

» நீர் பிரச்சினையைத் தீர்த்துவிட்டதாகவே தெரிகின்றது. நீர் அதற்காகப் பின்பற்றிய முறை பொருத்தமில்லை.

» நீர் தயாரித்த பொம்மை உண்மையானது. போன்றே இருக்கின்றது. நான் அதன் கையைச் சரி செய்து தருகின்றேன். அதன் பிறகு உமது பொம்மையைப் பற்றி நீர் பெருமை கொள்ளலாம்.

» இல்லை காந்தன் அந்தப் புத்தகம் உனக்கு வாசிக்க மிகக் கடினமானது. அதை இருந்த இடத்தில் வைத்துவிட்டு இலகுவானதொன்றை எடுத்துக்கொள்.

» புத்தகத்தைச் சரியான அலுமாரியில்தான் வைத்துள்ளீர் ஆனால் அதற்கு நீர் அதிக நேரம் எடுத்தீர்.

» இல்லை சாந்தி அதைச் செய்வதற்கு உனக்கு வயது போதாது. நீர் கூடிய வயதை அடைந்த பின்பு முயற்சி செய்து பார்.

மேற்படி கூற்றுக்கள் மாணவனுக்கு இப்போது இருக்கும் நிலையில் நான் நன்றாக இல்லை. ஆனால் நான் வயதானதும் புத்தி கூடியதும் விரைவாக இயங்க முடியுமான போது பெரியாள் ஆயின் என்னை இவர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்ற செய்தியைத்தான் சொல்கின்றன. ஆசிரியர் ஒரு கையைக் கொடுத்து மறு கையை மறுப்பதன் மூலம் மாணவர்களை ஊக்கம் கெடச் செய்கிறார். இன்னொரு விதமாக கூறினால் ஆனால் என்ற நிபந்தனையுடன் கொடுக்கும் எந்தவிதமான கணிப்பும் மாணவரை ஊக்கப்படுத்துவதில்லை. மாணவர்கள் தற்போது இருக்கும் நிலைமையிலேயே ஆசிரியர்கள் அவர்களையும் அவர்களது செயற்பாடுகளையும் ஏற்றுக் கொள்ளல் வேண்டும். எதிர்கால மேம்பாட்டை நிபந்தனை யாகவைத்து அவர்களை ஏற்றுக் கொள்ள முயற்சிப்பதைத் தவிர்த்தல் வேண்டும்.

பிள்ளைகள் அடைவை அடிப்படையாக வைத்தே தமது செயற்பாடுகளில் அதிகம் கவனம் செலுத்துகின்றனர். சில பிள்ளைகள் ஆசிரியர்களின் பாராட்டுக்களை பெறும் ஒரே நோக்கத்தின் அடிப்படையிலேயே தமது வேலைகளை பூரணப்படுத்துகின்றனர். மிகச் சிறந்த செயற்பாடொன்றைச் செய்து ஒப்படைப்பதன் மூலமே ஆசிரியரின் சிறந்த பாராட்டைப்பெறலாம் என்று எண்ணி பல மாணவர்கள் தமது வேலைகளையும் முயற்சிகளையும் மேற் கொள் கின்றனர். ஆசிரியருடைய பாராட்டு வெகுமதியாக அமைவ தால் அதிகமான மாணவர்கள் ஆசிரியர் பாராட்டுதல்களை சொல்வதால் மட்டுமே தாம் பெறுமதியானவர் என்று நினைக்கின்றனர்.இது கணிப்புத் தேவையே ஆகும்.

பாராட்டு போட்டி முறைக்கு உட்படுத்தப்பட்டு மிகச் சிறப்பாக செய்தவர்கள் அல்லது குறித்த விடயத்தை பூரணப்படுத்தியவர்களுக்கு மட்டும் வகுப்பறைகளில் வழங்கப்படுவது வழக்கம். இதனால் ஏனைய மாணவர்களின் வேலைகளில் குறைபாடுகள் இருப்பின் அவர்கள்

விமர்சிக்கப்படுகின்றனர். இந்நிலை அம் மாணவர்களைக் இன்னும் அடித்தளத்திற்கே கொண்டு செல்லும்.

மாணவர்களின் விருத்தியில் அவர்கள் நிபந்தனையின்றி ஆசிரியரால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளனர் என்ற உணர்வு முக்கியமானதாகும். இதன் காரணமாக அவர்களின் செய்கையின் தரத்திற்கும் அவர்கள் ஏற்றுக் கொள்ளப் படுவதற்கும் அல்லது கணிக்கப்படுவதற்கும் இடையில் எந்த விதமான தொடர்பும் இருக்காது.

மாணவர்களின் சில குறித்த செயல்களை ஆசிரியர் நிராகரித்து இருந்தாலும் அவ்வாறான செயல்களை புரிந்தமைக்காக மாணவர்களை ஏற்றுக் கொள்ளாது இருத்தல் கூடாது குறித்த செயலை அதைச் செய்தவரில் நின்றும் வேறுபடுத்திப் பார்க்க ஆசிரியர் எப்போதும் தெரிந்து வைத்திருப்பது அவசியமாகும்.

தற்போதய நிலமையில் அப்படியே மாணவர்களை ஏற்றுக் கொள்ள மறுக்கும் ஆசிரியர்கள்தான் அதிகமாக உள்ளனர். மாணவன் எதைச் செய்தாலும் பரவாயில்லை. அங்கு யாரோ ஒருவர் கூடிய ஆற்றலுடன் தேர்ச்சியுடன் திறமையுடன் வினைத்திறனுடன் அல்லது அறிவுடன் இருப்பார்.

பாடசாலைகளில் ஒரு மாணவனின் அடைவை மற்றய மாணவர்களுடன் ஒப்பிட்டு தரமிடும் பழக்கம் காணப் படுகின்றது. இது மிகவும் முக்கியமாக மாணவர்களை ஊக்கம் கெடச் செய்யும் முறையெனத் தனியாள் உளவியலாளர்கள் கருதுகின்றார்கள். இப்பழக்கம் மாணவர்களிடையே கூட்டுறவைவிட போட்டி மனப் பான்மையையே வளர்கின்றது. இதன் காரணமாக திறமை காட்டும் ஒரு சில மாணவர்கள் தாம் மற்றவர்களைவிட மேம்பட்டவர்கள் எனக் கணித்துக் கொள்ளும் அதேவேளை, குறைவாக அடைவைப்பெறும் அதிகமான மாணவர்கள் தாழ்வுச் சிக்கலை அடைந்து தைரியம், கௌரவம், சுய-பெறுமதி இவைகளில் தாழ் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். குறைந்த தர மதிப்பெண்கள் அரிதாகவே மாணவர்களில் முன்னேற்றத்தை தடுக்கின்றன. மாறாக, இத்தகைய மாணவர்களுடன் ஆசிரியர் பின்பற்றும் அணுகுமுறைகள் தீங்கு பயப்பனவாகவும் ஊக்கம் கெடச் செய்வனவாகவுமே அமைந்துள்ளன.

போட்டி அல்லது நியதிசார் தரமிடும் நடைமுறையைக் கொண்ட வகுப்பில் சுமுகமான இயக்கம் காணப்படமாட்டாது. கூடுதலான புள்ளிகள் பெறும் மாணவர்கள் தாம் மிகச்சிறந்த மாணவர் என்ற தமது கணிப்பை உறுதிப் படுத்தும் அதேவேளை குறைந்த புள்ளிகளைப் பெறும் மாணவர்கள் ஆற்றலற்றவர்கள் என நம்பச் செய்வதுடன் கோமாளித்தனம், துன்புறுத்துதல், திருடுதல் போன்ற பயனற்ற வழிகளை நாட இட்டுச் செல்லப்படுகின்றனர்.

குறைந்த அடைவுள்ள மாணவர்கள் என்று சொல்லப்படுகின்றவர்கள் உண்மையில் இயலுமானவர்களே ஆனால் மற்றவர்கள் போன்று செய்ய இயலாமை காரணமாக தமது கல்வியைத் தொடர்வதில் எந்தப் பயனு மில்லையென்று தீர்மானிக்கின்றார்கள். இதற்கு முக்கிய காரணமாக இவர்களின் விரக்தி நிலையைத்தான் இவ்விடத்தில் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. இம்மாணவர்கள் தம்மை உயர்திக் காண்பிக்காத சகல விதமான வேலை களில் இருந்தும் பின்வாங்கிக் கொள்கின்றார்கள்.

போட்டி காரணமாக மற்றவர்களைப் போன்று நன்றாகச் செய்யச் சந்தர்ப்பம் அற்றவர்கள், தாம் என்ன செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றார்களோ அதைச் செய்ய இயலாதவர்கள், தமது சக்தி மீறிய எதிர்பார்க்கை காரணமாகத் தனது விருப்பப்படி செய்ய இயவாதவர்கள் என்று பாடசாவையில் இலகுவில் தோல்வி அடைகின்றார்கள். மாணவர்கள் போட்டி, கூட்டுறவு இரண்டுக்குமே சம காலத்தில் உட்படுகின்றார்கள். இப்போதுள்ள வினா இவற்றில் எது சிறந்தது என்பதுதான். சிறந்த பங்களிப்பு, ஒத்துளைப்பு மூலம் சமூக வாழ்க்கைக்கு ஆயத்தமாக்க போட்டிக் கல்வி முறையை விட கூட்டுறவு கல்வி முறையே சிறந்தது. என்பது வெளிப்படையாகும்.

எனவே ஆசிரியரின் வகுப்பறைக் கணிப்பும் இதற்குப் பொருத்தமானதாக இருக்க வேண்டும்.

வகுப்பறையில் ஆசிரியர் மாணவர்களின் கணிப்புத் தேவையை நிவேற்றுவதற்கான ஆலோசனைகள்

ஆசிரிய வகிபாகம் மிகப்பரந்ததாகும். மாணவர்களின் பல்வேறு தேவைகயையும் பூர்த்தி செய்ய வேண்டிய கடப்பாடு ஆசிரியருக்கு இருக்கிறது. இதில் குறிப்பாக மாணவர்களின் கணிப்புத் தேவையை ஆசிரியர் வகுப்பறையில் நிறைவேற்றுவதற்கு

கல்விச் சிந்தனையாளர் பெஸ்டலோசியின் சிந்தனையானது ஆசிரியத்துவமானது குழந்தையினது சிந்தனையாற்றல்கள், தனித்துவங்கள் ஆக்கத்திறன்கள் வளர்வதற்கு உதவவேண்டும் என்பதாக அமைந்தது. குழந்தைக் கல்விச் சிந்தனையாளர் மொண்டசூரி அம்மையாரின் சிந்தனையோ ஆசிரியரின் பணி கற்பித்தல் அல்ல. இயக்குனராக இருந்து பிள்ளைகளுக்கு வழிகாட்டுவதும் ஊக்கம் அளிப்பதுமே என்பதாகத் தொடர்ந்தும் தமது மாணவர்களை அவர்களது சொந்த அறிவு ஆய்வு இவற்றில் ஈடுபடுத்துவதனூடாகச் செயலாக்கங்களை தூண்டுவதும் அவர் பணியாகும். என்றவாறாக அமைந்தது. இந்தியக் கல்விச் சிந்தனையாளர் கிருஸ்ணமூர்த்தியின் கருத்துப்படி ஆசிரியர் மாணவர்களிடம் உள்உணர்வுகள் பற்றி எடுத்துக் கூறி அவர்கள் தனித் தன்மை தெளிவுபட உதவவேண்டும். அவற்றின்வழி மாணவர்

தெளிந்து தமக்கே உரித்தான ஆக்கச் செயற்பாடுகளை முன்னெடுக்க உதவ வேண்டும் என்றார். இலங்கைச் சிந்தனையாளர் சுவாமி விபுலானந்தரோ மாணவர்களிடம் மறைந்து கிடக்கும் உணர்வை உள்ளார்ந்த திறன்களை வெளிக் கொண்டு வருபவனே ஆசிரியரின் என்றார்.

குறைகள் கண்டுபிடித்தல் பாடசாலையில் பொருத்த மில்லாத நடவடிக்கையாகும். மாணவர்கள் தம்மீதே நம்பிக்கை கொள்ளும் அளவிற்கு அவர்கள் மீது தமக்கு நம்பிக்கை உள்ளதாக ஆசிரியர்கள் மாணவர்களுக்கு காண்பிக்க வேண்டும். பிள்ளைகளின் குறைகள், தவறுகளை அழுத்திக்கூறும், ஊக்கத்தைக் கெடுக்கும் அணுகுமுறைகளை தவிர்த்தல் வேண்டும். நம்பிக்கை, ஏற்றுக் கொள்ளல், அடைவை வரவேற்றல், மாணவர்தம் செய்கை பாராட்டல், முயற்சியைப் பாராட்டல் போன்ற மனப்பான்மைகளை ஆசிரியர்கள் காட்டல் வேண்டும்.

மாணவர்கள் தமது வேலைகளை நன்றாகச் செய்ய முடியும் என்ற நம்பிக்கை இருந்தாற்தான் பயிற்சி மூலம் தம்மை மேம்படுத்திக் கொள்வதற்கும் வாய்ப்புக் கிடைக்கின்றது. மாணவரின் சுயபலத்தை மேம்படுத்துவதன் மூலம் மாணவர்களின் தொடர்ச்சியான விருத்திக்குத் தேவையானவைகள் ஆசிரியரால் வழங்கப்படுகின்றன. கமாலின் விடயத்தில் சரியாகச் செய்தவைகளை மட்டும் ஆசிரியர் அடையாளமிட்டு பின்பு இடப்பெறுமானம் இடுவதைக் கற்பதற்கு இது நல்லதொரு ஆரம்பம் என்று கூறுவார். இதைக் கமால் எவ்வாறு வியாக்கியானம் செய்வான்? “இது நல்ல ஆரம்பம் பின்னர் நான் இன்னும் சிறப்பாக செய்வேன்” என்று தானே அவன் உணர்வான். மாணவனின் தற்போதைய கற்றலைப் பயன்படுத்தி கற்றல் செயன் முறையின் மீதி விடயங்களையும் தன்னால் சிறப்பாக செய்ய முடியும் என்ற உணர்வை மாணவர்களில் ஆசிரியர்கள் தொடர்ந்திருக்கச் செய்தல் வேண்டும். இவ்வாறே, பாலனின் ஆசிரியர் அவனைச் சப்தமிட்டு வாசிக்கச் சொல்லலாம். அவன் ஏதும் பிளைகள் விட்டாலும் அவைகளை உதாசீனம் செய்து விட்டு அவன் வாசித்து முடிந்ததும் அவன் வாசித்த கதை தொடர்பாக பாலனிடம் ஒரு வினாவைக் கேட்கலாம் அவனது விடையை ஆசிரியர் மகிழ்ச்சியுடன் அனுபவித்து அவனது முயற்சியை வரவேற்றல் வேண்டும். அவனில் உண்டாகும் ஏதாவது அபிவிருத்தி வாசிப்பதற்கான அவனது தன்னம்பிக்கையை மேலும் அதிகரிக்கும். அவன் வாசிக்கும் போது விட்ட பிள்ளைகளை பற்றி அவனிடம் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. ஏனெனில் அவைகள் அவனது இயலாமையை வெளிக்காட்டுகின்றன.

தவறுகள் ஏற்படுவது சகஜம். அநேகமான கற்றல் சந்தர்பங்களில் அவை தவிர்க்க முடியாதவை. தான் தவறு விட்டு விடுவேனோ எனப்பயப்படும் பிள்ளையினால் எதையும் சரியாகச் செய்ய முடியாது. ஏன் எனில், அவர்களின் குறிப்பிட்ட வேலை முடிந்த பின்புதான் தாம் செய்த வேலை சரியா பிழையா என்பது அவர்களுக்குத் தெரிய வரும். தான் தவறு செய்து விடுவேனோ என்று பயப்படும் போது அவர்களால் அசையவோ, விருத்தி யடையவோ அல்லது தீர்மானங்கள் எடுக்கவோ முடியாது. தாம் பிழையாகச் செய்து விடுவோமோ என்று அவர்கள் பயப்படுவதுதான் அதற்கு முக்கிய காரணமாகும். தவறுகள் கற்றலின் ஒரு பகுதியே என்றும் அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை என்றும் மாணவர்கள் அறிவுறுத்தப்படல் வேண்டும். தவறுகள் தவிர்க்கப்பட வேண்டியவை. என்பதை விடவும் தவறுகளைத் திருத்தும் போது என்ன செய்ய வேண்டும் என்பதிற்றான் கூடிய கவனம் செலுத்துதல் வேண்டும். கடந்த காலம் போய்விட்டது. அதில் மாற்றங்கள் செய்ய முடியாது. ஆனால் எப்போதும் எதிர்காலத்தில் செய்ய வேண்டிய ஏதோவொன்று இருந்து கொண்டே யிருக்கும். தவறுகள் பிள்ளைகளைப் பதற்றம் அடைய வைக்காமல் அவர்கள் அதிக அளவில் கற்பதற்கு உதவுவனவாக இருத்தல் வேண்டும்.

இவ்வாறு கூறுவதன்மூலம் மாணவர்களின் தவறுகளைத் திருத்த ஆசிரியர் முயலக் கூடாது என்று தவறாக விளங்கிக் கொள்ளக்கூடாது. உதாரணமாக ஆசிரியர் ஒருவர் வகுப்பறையைச் சுற்றி வரும்போது “பூஞ்சோலை” என்ற சொல்லை அதிகமான மாணவர்கள் பிழையாக எழுதியிருப்பதை அவதானிக்கின்றார். அப்போது அவர் கரும்பலகைக்குச் சென்று வகுப்பில் கண்ணன் “பூஞ்சோலை” என்ற கடினமான சொல்லை நன்றாக எழுதியிருப்பதாக கூறி கரும்பலகையில் எழுதி விடலாம். அப்போது அச்சொல்லை பிழையாக எழுதியிருந்த மாணவர்கள் திருத்திக் கொள்வார்கள். இம்முறையில் மாணவர்கள் விமர்சிக்கப்படவில்லை. எதிரான பின்னூட்டல்கள் வழங்கப்படவுமில்லை. இதே முறையை முன்பு கலந்துரையாடிய இடப்பெறுமானத்தில் தவறு விட்ட மாணவன் தொடர்பாகவும் ஆசிரியர் கையாளலாம்.

வேறொரு உதாரணத்தை பார்ப்போமாயின் புகையிரதம் எவ்வாறு செல்கிறது என்பதை பார்பதற்காக மாணவர் குழு ஒன்று ஆசிரியரால் அழைத்துச் செல்லப்பட்டது. பின்னர் அது பற்றிய குறிப்பொன்றை எழுதுமாறு ஆசிரியர் மாணவர்களை குறிப்பிட்டார். ஒரு மாணவன் சமர்பித்த அறிக்கையில் ஆறு, ஏழு பிழைகள் காணப்பட்டன. இவ் வேளையில் மாணவர்களை ஏற்றுக் கொள்வதன் ஊடாக ஊக்கல் வழங்க வேண்டும் என்பதை அறிந்திருக்கும் ஆசிரியர் களப்பிரயாணம் பற்றிய அறிக்கை அழகாக எழுதப்பட்டிருப்பதை சுட்டிக் காட்டலாம் கடினமான வசனங்கள் பாவிக்கப்பட்டிருப்பதை பாராட்டலாம் கடினமான பல சொற்கள் சரியாக எழுதப்பட்டிருப்பதை எடுத்துக் காட்டி பாராட்டலாம். இதே வேளை அம்மாணவனுக்கு

இருக்கின்ற எழுத்துப் பிழைகள் விட்ட சொற்களை வேறு மாணவன் இச்சொற்களை சரியாக எழுதி இருக்கிறார். எனக் கூறி அச் சொற்களை பிழையாக எழுத இருப்போர் இப்படி திருத்திக் கொள்ளுங்கள் என்று கரும் பலகையில் சரியாக எழுதி விடலாம்.

குறிப்பாக சொல்வதாயின் ஆசிரியர் மாணவர்களுடைய தவறுகளிலும் பலவீனங்களிலும் கவனம் செலுத்தும் போது மிக நுணுக்கமாக நடந்து கொள்ள வேண்டும் அத் தவறுகளுடனும் பலவீனங்களுடனும் முதலில் மாணவர்களை ஏற்றுக் கொள்ள வேண்டும். இக் கணிப்புத் தேவை மாணவர்களுக்கு இன்றி அமையாததாகும். பின்னர் அத் தவறுகளை திருத்துவதற்கான சரியான வழி காட்டல்களை சூசகமான முறையில் வழங்க வேண்டும்.

மாணவரது சுயமதிப்பினை பாதுகாப்பதற்கு முன்னுரிமை அளித்தல் விமர்சனத்தின் போது பயன்படுத்தப்படும் ஒவ்வொரு வார்த்தையும் மிகவும் கவனமாக தெரிவு செய்யப்பட்டு பிரயோகிக்கப்படல் வேண்டும் நீர் மிகவும் ஆற்றல் பொருந்திய சிறந்த மாணவா் என்பது எனக்குத் தெரியும். நான் உம்மீது மிகுந்த நம்பிக்கையும் அன்பும் வைத்துள்ளேன். அந்த வகையில் அண்மையில் உமது நடவடிக்கை தொடர்பின் சில கருத்துக்களை பரிமாறிக் கொள்ள வேண்டியுள்ளது போன்ற வார்த்தைப் பிரயோகங்களுடன் ஆரம்பிக்கப் படல் வேணடும் என்பதுடன் முடிவிலும் கூட மாணவரது தன்னம்பிக்கை சுயமதிப்பு என்பவற்றினை உறுதிப்படுத்தும் வார்த்தைப் பிரயோகங்கள் பயன்படுத்தப்படல் வேண்டும்

**முடிவுரை**

வகுப்பறைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டில் உளவியல் கருத்துக்கள் பெருமளவு தாக்கம் செலுத்துகின்றன. ஆசிரியர் உளவியல் ரீதியான பல வகிபங்குகளின் அடிப்படையில் செயற்பட வேண்டிய தேவையுள்ளவராகவும் இருக்கின்றார்.

ஆசிரியர்கள் மாணவர்களின் பல்வேறு தேவைகளையும் வகுப்பறையில் பூர்த்தி செய்யவேண்டிய நிலையிலுள்ளனர். குறிப்பாக மாஸ்லோ குறிப்பிடும் பல்வேறு தேவைகளையும் ஆசிரியர் நிறைவேற்றும் போதே மாணவர்களின் கற்றலை மேம்படுத்த முடியும். மாஸ்லோவின் தேவைப் படிநிலைகளில் கணிப்புத் தேவை முக்கியமானதாகும் இதனைச் சரியாக நிறைவேற்றும் போதே மாணவர்கள் கற்றலில் ஊக்கம் பெறுவர்.

மாணவனின் உடலியல், காப்பு, அன்பு, கணிப்புத் தேவைகள் நிறைவு செய்யப்படாத நிலைமையில் அவனில் பொதிந்து கிடக்கும் ஆற்றல்களை வெளிக்கொண்டுவர எடுக்கும் முயற்சிகள் பலனற்றவையாகவே முடிவடையும். அத்துடன் மாணவனும் கல்வியில் வெறுப்படைந்து வகுப்பறை வேலைகளை உதாசீனம் செய்யத் தொடங்குவதினால் வகுப்பறை நிர்வாகத்தில் ஒழுக்கமும் கட்டுக் கோப்பும் சீர் குலையத் தொடங்குகின்றன.

வீட்டிலும் பாடசாலையிலும் கணிப்பைப் பெறாத நிலைமையில் மாணவன் தனது திறமைகளை வெளியிட்டு நிறைவு கொள்வான் என எதிர்பார்க்க முடியாது.

மாஸ்லோ மனித ஊக்கம் குறித்து கூறிய கோட்பாட்டுக்கு விமர்சனங்களும் கூறப்படுகின்றன. இருப்பினும் மாஸ்லோவின் கொள்கையானது மனித நடத்தையில் திறன்களை விருத்தி செய்வதில் அதிகளவு தாக்கம் செலுத்துகின்றது. மாணவர்களின் திறமையான கற்றலுக்கு ஊக்கமளிக்கும் விதத்தினை செம்மையாகத் தெளிவுபடுத்துகின்றது. அத்தோடு மாணவர்களின் வினைத்திறன் மிக்க கற்றலுக்கும் ஆசிரியர்களின் சிறப்பான கற்பித்தலுக்கும் துணை புரிகிறது. இவ்வாறான கொள்கை தொடர்பாக அறிவை ஆசிரியர்களும், மாணவர்களும், பெற்றோர்களும் அறிந்திருப்பதும் அவற்றை நடைமுறைப் படுத்துவதும் அவசியமானதென வலியுறுத்தப்படுகின்றது.

கணிப்புத் தேவை வகுப்பறைகளில் ஆசிரியர்களால் நிறைவேற்றப்பட்ட போதும் அது திருப்திகரமானதாக நிறைவேற்றப்படுகிறதா என்ற கேள்வியும் மேலெழுந்துள்ளது. ஆசிரியர்கள் மாணவர்களின் கணிப்புத் தேவையை சரியாக இனங்கண்டு அதனைச் சரியான விதத்தில் நிறை வேற்றும் போதே மாணவர்களை கற்றலில் நல்ல முறையில் ஊக்கப்படுத்த முடியும்.

**உசாத்துணைகள்**


1. முத்துலிங்கம். சு, (2002), கல்வியும் உளவியலும்- பகுதி 1, லங்கா புத்தகசாலை, கொழும்பு
2. பக்கீர் ஜ.்.பார், ப.கா. (2009), மாணவரின் வகுப்பறை நடத்தை, குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
3. நவரட்ணம். உ, (2007), கற்றல்கற்பித்தல் செயன்முறையில் கல்வி உளவியல், குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
4. எம். எச்.எம். ஹஸன் (2010) அன்றாட வாழ்வில் அனைவருக்கும் உளவியல் (2ஆம் பதிப்பு) கொழுபம்பு
5. யோ. பெனடிக்ற் பாலன் (2008) கல்வி உளவியல் அடிப்படைகள் (6ஆம் பதிப்பு) சென்னை.
6. www.slideworld.com/slideshow.aspx/Motivation-ppt-2770983
7. www.slideshare.net/amykua/maslow-theories-and-criticism
8. www.slideshare.net/samuraitheologian/*maslows-hierarchy-of*-needs-theory-online

# புத்தகமும் மனிதநேயமும்

எஸ்.வி. வேணுகோபாலன்

வாசிப்பு என்பதே நேயத்தின் ஒரு வெளிப்பாடுதான். மகாகவி பாரதியின் கவிதை வரிகளில், காசி நகர்ப் புலவர் பேசும் உரைதான் காஞ்சியில் கேட்பதற்கோர் கருவி செய்வோம் என்று வருகிறது. என்ன கருவி அது? காசியில் இருப்பவர் பேசும் மொழி காஞ்சியில் இருப்பவர்க்கு எப்படி விளங்கும். ஒன்று இவர் அந்த மொழியைக் கற்றிருக்கவேண்டும். அல்லது அவர் தமிழில் பேச வேண்டும். அல்லது பொதுவான மொழியொன்றில் பரஸ்பரம் புரிந்து கொள்ளவேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக, அவர் சொல்வதை இவர் கேட்பதற்கோர் இதயம் வேண்டும். அந்த உள்ளம் அந்த மனம்தான் பாரதி சொல்லும் கருவி.

கதையோ, கவிதையோ, சிறுகதையோ, நாவலோ ஒரு புத்தகம் நமக்குள் எத்தனையோ வித சிந்தனையைத் தூண்டிவிடுகிறது. நம்மைச் சுற்றி இருப்பவர் குறித்து யோசிக்க வைக்கிறது. சிந்தி மொழி கவிஞர் மோதிலால் ஜத்வானி எழுதி இருக்கும் செலவழித்த புன்னகைகள் என்ற கவிதை, மளிகைக் கடைக்காரனிடம் சிறிது புன்னகை செய்கிறேன் பொருள்களைத் தராசில் வைத்து நிறுத்தும் போது என் பக்கம் சிறிய சாய்வு செய்யக் கூடாதா என்று! எனது அன்றாடத் தேவைகளின் விலை கூடிக் கொண்டே செல்கிறது, காய்கறிக்கடைக்காரனிடமும் புன்னகை செய்கிறேன் என்னுடையதைப் போன்ற குறைந்த தேவைக்கு அவன் அதிகவிலை வைத்துவிடக் கூடாதே என்று இப்படி கடைத் தெரு முழுக்க செலவாகிறது என் புன்னகை வீடு திரும்புகிறேன் மனைவி பிள்ளைகளைப் பார்த்துச் சிரிக்க புன்னகை கைவசம் இல்லை என்று முடிகிறது.

டாக்டர் பி எம் ஹெக்டே அவர்களின் உள்ளங்கையில் உடல் நலம் (விகடன் பிரசுரம்)நூலின் முதல் கட்டுரை சிரிப்பு மருத்துவம் பற்றிப் பேசுகிறது. சிரிப்பைப் பற்றிய கலைவாணரின் பாடலில், வேறு ஜீவராசிகள் செய்ய முடியாத செயலாக்கும் இந்தச் சிரிப்பு என்று வருகிறது. ஹெக்டே அவர்கள், நாய் போன்ற சில விலங்குகள் சிரிக்கத்தான் செய்கின்றன. ஆனால், அவற்றின் முகம் நீண்டிருப்பதால் நமக்கு அது தென்படுவதில்லை என்று சொல்கிறார். நாமோ சிரிக்கத் தெரிந்தும் சிரிக்க மறுக்கிறோம். ஸ்மைல் ப்ளீஸ் என்று நமது மோவாயைத் தொட்டுப் புகைப்படக் கலைஞர் என்ன கெஞ்சினாலும் நாம் இறுக்கமாகவே நிற்பதை புகைப்பட ஆல்பங்கள் நிரூபிக்கும். இலேசாகும் மனத்தால் வஞ்சனையின்றி சிரிக்க முடியும். அதற்கும் புத்தகம் மிகப் பெரிய வாசல் திறந்து கொடுக்கிறது. வேறு ஜீவராசிகள் செய்ய முடியாத செயலாகும் இந்த வாசிப்பு. நாம் ஏன் அதை மறுத்துக் கொள்ள வேண்டும்?

அறுபதுகளில், எழுபதுகளில், எண்பதுகளில் வாழ்ந்த வாழ்க்கைக்கும் தொண்ணூறுகளுக்குப் பின் நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் வாழ்க்கைக்கும் மிகப் பெரிய வேறுபாடு இருக்கிறது. உலகமயம் நமது போக்கில் எத்தனையோ மாற்றங்களைத் திணித்துவிட்டது. கூடி வாழ்ந்த ஜனத் திரளை ஒற்றை ஒற்றை மனிதர்களாகப் பிரிக்கும் வேலையில் உலகமயம் வெற்றி பெற்று வருகிறது என்று பத்தாண்டுகளுக்கு முன்பே சுட்டிக் காட்டினார் பிரபல பொருளாதார நிபுணர் பிரபாத் பட்நாயக். நேயத்திற்கு எதிரான கோட்பாடு இந்த உலகமயம்.

இந்தத் தெருவில் குரைப்பதற்கு நாய் கூட இல்லைஎன்று தொடங்கும் த.வாசுதேவன் என்பவரின் வீடு என்கிற கவிதை (தீராநதி: மார்ச் 2012),

*வீடுகளின் குழந்தைகள்*
*ரெசிடென்ஷியல் பள்ளிகளில் படிக்கிறார்கள்*
*பெரியவர்கள்*
*முதியோர் இல்லங்களில்*
*இறப்பதற்குக் காத்திருக்கின்றனர்*
..
*தங்கத்தை பேங்க் லாக்கரில் வைத்திருப்பதால்*
*திருடர்களும் வர மாட்டார்கள்*
*மிச்சமிருக்கும் உணவை*
*வைப்பதற்கு /பிரிட்ஜ் இருப்பதால்*
*பிச்சைக்காரன் கூட இங்கு வரமாட்டான்*
....
*நாங்கள் அனேகமாக அலுவலகத்தில்தான்*
*இருக்கிறோம்*
*வாடிக்கையாளரும் எஜமானனும்*
*வெளிநாட்டில் இருக்கிறார்கள்*
*வீடு பெரும்பாலும் பூட்டித்தான் இருக்கிறது*
*மனசும்தான்*

*இந்த வீட்டில்*
*டிவி மட்டுமே பேசவும் பாடவும் செய்யும்*
*இந்த வீட்டில் தான்*
*கதவுகளை நன்கு சாத்தியபடி*
*நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்*

என்கிறது. மறைந்த மார்க்சிய தத்துவார்த்த மேதை பி. ராமமூர்த்தி அவர்களது விடுதலைப் போரும் திராவிட இயக்கமும் (அண்ணா அவர்களது ஆரிய மாயை நூலுக்கு எதிர்வினையாக ஆரிய மாயையா, திராவிட மாயையா என்ற தலைப்பில் பி ஆர் எழுதிய நூல் அது) என்ற புத்தகத்தில், புராதன பொதுவுடைமை காலத்தில் மக்களது கீதங்களாகப் பிறந்த ரிக் வேதத்தில், ஓம் ஸஹ நாவவது ஸஹ நௌ புனக்து என்று வரும் பாடலின் பொருள், நாம் கூட்டாக வாழ்வோம், கூட்டாக விளையாடுவோம், கூட்டாக அனைத்து இன்பங்களும் அடைவோம் என்பதாக வருவதை பி ஆர் விளக்கினார்.

உன்னைப் பற்றி மட்டுமே யோசி, உனக்குள் ஒடுங்கிக் கொள், உன்னைப் பற்றி மட்டுமே கவலை கொள் என்கிறது உலகமயம். சேர்ந்து வாழும் மனிதகுல பண்பாட்டுக்கு வேட்டு வைக்கிறது உலகமயம். அதைத் தகர்த்து எறிந்து மனித குல இருப்பிற்கும், மற்றவர்களுக்கு உதவுவதற்கும் சிந்திக்க வைக்கும் வேலையை ஒரு புத்தகம் சிறப்பாகச் செய்யமுடியும்.

*அறிவை விரிவு செய், அகண்டமாக்கு*
*விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை*
*அணைந்து கொள், உன்னைச் சங்கமம் ஆக்கு*
*மானிட சமுத்திரம் நானென்று கூவு*

என்ற பாவேந்தர் வரிகள் இதைத் தான் செய்கின்றன. ஒரு நல்ல புத்தகம் உள்ளத்தைத் தீண்டி இம்மாதிரியான சிந்தனைகளைத் தூண்ட முடிகிறது. நேயத்தை ஊட்டமுடிகிறது.

எல்லாவற்றையும் பண்டமாக, பணமாக, லாபத்தின் கூறாகப் பார்க்கப் பழக்கும் தாராளமய காலத்தில் நாம் அனைத்து உறவுகளையும் ஈவிரக்கமின்றி மிதித்து நடக்கிறோம். குழந்தைகளை வாட்டி எடுக்கிறோம். வயது மூத்தவர்களைப் புறக்கணிக்கிறோம். முதுமை அடையும் நிராகரிப்பின் கசப்பைப் பேசும் கவிஞர் வைரமுத்துவின் கவிதை ஒன்று, எண்ணைக்கு என் மனைவி என்னைவிட்டுப் போனாளோ அண்ணைக்கே என் படுக்கை திண்ணைக்கு வந்திருச்சு நாய் தின்னும் சொத்தில் நாலஞ்சு கவளத்த எனக்கும் போட்டுவப்பான் இரக்கமுள்ள எம்புள்ள.. என்கிறது.

குழந்தைகள், முதியவர்கள், பெண்களையும் சமூகம் மிக மோசமாக நடத்துகிறது. ஒடுக்கப்பட்டோரை மிகவும் கீழ்மைப்படுத்தி வதைக்கிறது. ஆதிக்க உளவியல் இருக்கும் இடத்தில் அன்பு மறுக்கப்பட்டுவிடுகிறது. தருமபுரி மாவட்டத்தில் கிராமங்கள் மூன்று சூறையாடப்பட்ட சாதிய தாக்குதல்களை விவாதிக்கும் யாரும், அதற்கு ஒரு மாதமுன்பே தொடர் நிகழ்வுகளின் தாக்கத்தில் இமையம் அவர்கள் எழுதிய பெத்தவன் (உயிர்மை:ஜூன் 2012 பின்னர் பாரதி புத்தகாலய வெளியீடாக வந்திருப்பது) கதையைப் பேசாது தவிர்க்க முடியாது.

உரத்த சத்தம் எழுப்புவதாலேயே ஒன்றின் நியாயம் தீர்மானிக்கப்பட்டுவிட முடியாது என்று சொல்லும் குட்பை மிஸ்டர் சிப்ஸ் கதையை, பேரா. ச. மாடசாமி அவர்களது மொழியில் போயிட்டு வாங்க சார் (பாரதி புத்தகாலயம்) நூலகா வாசிக்கிறோம். ஆசிரியர்கள் மாணவர் உறவின் மேன்மையைக் கொண்டாட்டமாகப் பேசும் இந்த நூலை ஆசிரியர்கள் வாங்கிப் படிப்பது அவசியமாகிறது.

இலங்கை எழுத்தாளர் அ முத்துலிங்கம் (கனடா) எழுதியிருக்கும் புவி ஈர்ப்புக் கட்டணம் சிறுகதை, இயற்கையின் வரங்களுக்கும் கட்டணம் போட்டுச் சுரண்டும் எதிர்கால அரசியலைப் பகிடி செய்து எழுதப்பட்டதாகும். சுஜாதாவின் நகரம் சிறுகதை, குழந்தையின் சிகிச்சைக்காக மதுரை பெரியாஸ்பத்திரிக்கு வரும் ஏழைத் தாய் எதுவும் புரியாமல் குழந்தையோடு வெளியேறியபிறகு, அடடா அது ஒரு தீவிர நோய் ஆயிற்றே எங்கே அவர்கள் என்று அலைமோதும் மருத்துவரையும் பேசுகிறது.

வகுப்பறை குறித்துக் கேள்வி எழுப்பும் ஆயிஷாவும், குழந்தை-பெற்றோர் உணர்வுகள் குறித்தப் பேசும் ரோஜாவும் (இரா நடராசன் நூல்கள்:பாரதி புத்தகாலயம்) கல்வி குறித்து நிறைய சிந்தனைகளை எழுப்புகின்றன. வர்த்தகமாகும் கல்வி பற்றியும், மருத்துவம் பற்றியும் பேசும் நூல்கள் சம கால அராஜக வாழ்வுச் சூழலுக்கு எதிரான கலகத்தை விதைக்கின்றன.

காஸா பகுதியில் இஸ்ரேலிய படைகளின் தாக்குதலால் மருத்துவமனைகளில் நிறையும் இரத்தம், வெட்டப்பட்ட உறுப்புகள், உயிரிழக்கும் மனிதர்களைப் பார்த்தாவது போர்களை நிறுத்துவீர்களா என்று ஒபாமாவை கேள்விக் குள்ளாக்கும் கட்டுரை ஒன்றை அங்கே பணியாற்றும் மருத்துவர் எழுதியிருக்கிறார் (தமிழ் இந்து: ஜூலை 25). சம காலத்தில் வேட்டையாடப்படும் உணர்வுகளை, உளவியலை, வாழ்க்கையை மீட்டெடுக்க புத்தகங்கள் ஏராளமான சாத்தியங்களை முன்வைக்கின்றன. ஆதிக்கத் திற்கு எதிரான போர்க்குரலை நூல்கள் எழுப்பமுடியும்.

வாசிப்பு பகிர்தலைக் கற்பிக்கிறது மனித வாழ்வை மேன்மைப் படுத்துகிறது நேயம் கொண்டாடும் நெஞ்சத்தை வழங்குகிறது.

*நன்றி: தீக்கதிர் இலக்கிய சோலை (ஜூலை 28, 2014)*

# கற்றலின் உளவியல் சார்ந்த அடிப்படை

ஜயசேனபுத்தப்பிட்டிய
தமிழாக்கம்: பேராசிரியர் தை. தனராஜ்

நாம் பின்வரும் இரண்டு சம்பவங்களை அடிப்படையாகக் கொள்வோம்.

**சம்பவம்:01**

(இதுவோர் உண்மைச் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டதாகும்)

அவள் பெயர் சமதி

பக்கத்துக் கிராமத்தில் இருந்த பாடசாலையில் ஆண்டு 4ல் பயில்கிறாள். விந்தை என்னவென்றால் சுமார் இரண்டு வருடங்களாக அவள் பாடசாலையில் எவரோடும் ஒரு வார்த்தையேனும் கதைப்பதில்லை. வீட்டினும் தங்கையோடு பாடசாலைக்கு வரும் வழியிலும் அவள் கதைப்பதாக ஆசிரியை கூறினார். எதேச்சையாகப் பாடசாலையை அடைந்த கல்வி முகாமைத்துவ ஆலோசகரொருவரிடம் இதனைக் கூறியபோது அவர் அவ்வகுப்பறையில் சற்று நேரம் தங்கியிருக்க முடிவு செய்தார்.

"நான் சற்று நேரத்தில் வகுப்புக்கு வருவேன். ஆனால் அந்தப் பிள்ளையை எனக்குக் காட்ட வேண்டாம்"

அவர் வகுப்பை அடைந்து அனைவரையும் தேசிய கீதத்தை இசைக்கச் செய்தபோது அனைவருமே துலங்கலைக் காட்டினர். பின்னர் சற்று நேரம் கவிதைகளையும் பாடல்களையும் மாணவர்களோடு சேர்ந்து இசைத்தார். அதனை அடுத்து மாணவர்கள் விரும்பிய பூக்கள் பற்றிய உரையாடல் ஆரம்பமாயிற்று. இப்போது சுவா ரசியமான உரையாடல் நடைபெற்றுக் கொண்டிருக் கிறது.

அடுத்துச் சுமதிக்குச் சந்தர்ப்பமளிக்கப்படுகிறது.

"சுமதி கதைக்கமாட்டாள் சேர்" பிள்ளைகள் அனைவரும் ஏகோபித்துக் குரலெழுப்பினர். சுமதியின் முகம் வாடிவிட்டது. சுமதி மீண்டும் தலையை உயர்த்தவேயில்லை.

**சம்பவம் 02**

"எனது வகுப்பில் புதுமையான ஒரு மாணவி இருந்தாள். அவள் மொழிப்பாட நேரத்தில் எதையேனும் எழுதமாட்டாள். ஒருநாள் நான் பின்வருமாறு கூறினேன்.

அமலா இப்போது மிகவும் நல்லவள். எழுத்துப் பாட புத்தகத்தின் அட்டையில் எவ்வளவு அழகாகத் தமிழ் என்று எழுதியிருக்கிறாள். பாருங்கள் பிள்ளைகள்.

அடுத்த நாள் அந்தச் சிறுமி ஒரு பக்கம் பூராகவும் தமிழ் என்றவாறு எழுதிக்கொண்டு வந்து என்னிடம் காட்டினாள். அவள் எதனை எழுதினாலும் நான் நல்ல தெனக் கூறியதால் மேலும் எழுதத் தொடங்கினாள். பின்னர் சரியான எழுத்துக்கள் சரியான சொற்களுக்கு நல்லது என்று கூறிப் பெரிதாகச் சரி என்ற குறியீட்டை இட்ட போது அவள் தொடர்ந்தும் எழுதினாள். சற்றுச் சரியான வாக்கியங்களுக்காக அவளைப் பாராட்டினேன். இப்போது அமலா அதிகமான புள்ளிகளை எடுக்கும் மாணவி. பிள்ளைகளின் விதமே இப்படித்தான்."

**உரையாடல்**

01. இவ்விரண்டு சம்பவங்களின் பிரகாரம் கற்றல் என்பதனால் கருதப்படுவது யாது?
02. சுமதியை மீண்டும் கதைக்கச் செய்வதற்காக ஆசிரியரொருவர் கையாளக் கூடிய உளவியல் ரீதியிலான உத்திகள் எவை?
03. கற்றல் தொடர்பாக அமலாவின் நடத்தையில் மாற்றத்தினை விளைவித்த உளவியல் சார்ந்த தத்துவம் யாது?
04. இவ்விதமான உளவியல் சார்ந்த காரணிகள் கற்றல் தொடர்பான பலத்தில் அல்லது பலவீனத்தில் செல்வாக்குச் செலுத்துகின்றனவா? இயன்றவரை விடயங்களைச் சமர்ப்பிக்கவும்.

**ஆசிரியரது பங்களிப்பு**

எமது பாடசாலைகளில் சுமதி, அமலா போன்றோர் ஆயிரக் கணக்கில் இருக்கிறார்கள். பெற்றார் தம் பிள்ளைகளுக்கு உணவூட்டி மிகுந்த சிரமத்தோடு அவர்களைப் பாடசாலைக்கு அனுப்பிவைக்கிறார்கள்.

பெற்றாரால் விளங்கிக் கொள்ள முடியாத கல்வியைப் பெற உகந்த இடம் பாடசாலையே என்றவாறான ஓர் எண்ணம் நிலவுதல் அதற்கான காரணமாகும்.

பாடசாலையும் பாடசாலை பற்றிய உயர்ந்த எண்ணமும் இல்லாவிடின் பிள்ளைகள் கற்றலை நிறுத்தி விடுவார்களா? இல்லை, நிறுத்தவே மாட்டார்கள்.

அன்றாட வாழ்வில் தம் பணிகளை ஆற்றுவதற்காகவும் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதற்காகவும் சுற்றாடலில் கற்றுக் கொள்ளவே செய்வார்கள். தமிழ் பேசும் ஒரு வீட்டில் உள்ள பிள்ளைகள் 5 வருடங்கள் பூர்த்தியாகும் முன்னர் தமிழில் கருத்துக்களைப் பரிமாறக் கற்றுக் கொள்கின்றனர். ஆங்கிலத்தில் அல்லது சிங்களத்தில் பேசும் பிள்ளைகள் அந்தந்த மொழியைக் கற்றுக் கொள்கிறார்கள். அவ்வாறாகப் பேசுதல், கருத்துப் பரிமாற்றம் என்பவற்றைப் பாடசாலைக்குச் சென்றுதான் கற்கிறார்களா இல்லை. இருப்பினும் பிரச்சினை ஒன்றுண்டு. எதேச்சையாக இவ்வாறு கற்பதனால்,

» எமது விருப்புக்கேற்ப மாற்றங்களைக் கொண்ட பிள்ளைகள் உருவாகமாட்டார்கள்.

» பிள்ளைகள் வசமுள்ள விசேட இயல்புகள் வெளிப்படா.

» வழிகாட்டல் இல்லாத நிலையில் பெரும்பாலானோர் சமூகத்துக்குப் பயன்படாத நபர்களாக மாறிவிடுவர்.

பாடசாலை என்பது இக்கற்றல் கற்பித்தல் நடவடிக்கை யினைத் தனது பொறுப்பாக ஏற்றுக்கொண்ட ஒரு சமூகக் கேந்திர நிலையமாகும்.

"தமது பொறுப்பில் விடப்பட்ட மாணவர்களின் கல்வி மற்றும் சேமநலன் என்பன தொடர்பாகத் தாம் தனிநபராகவும் கூட்டாகவும் பொறுப்பினால் கட்டுண்டவரே என்ற உணர்வு ஆசிரியர்களில் காணப்பட வேண்டும்."

*யுனெஸ்கோ ஆசிரியர்*
*சாசனம்*

எனவே ஆசிரியர் கற்றல் - கற்பித்தல் நடவடிக்கையின் போது வழிப்படுத்துபவராகச் செயலாற்ற நேரிடுகிறது.

இதன் நிமித்தம் பிள்ளைகளின் கற்றல் தொடர்பான உளவியல் சார்ந்த அடித்தளத்தை அறிந்திருத்தல், விளக்கம் பிரயோகம் பற்றிய தெளிவு என்பன வாயிலாக ஆசிரியரொருவர் தேர்ச்சியாளராகவும் கல்வியில் நிபுணராகவும் மாறுகிறார். அவ்வாறு அமையாத பட்சத்தில் வகுப்பறைகள் என்பன கற்கவியலாத பிள்ளைகள் எனப் பட்டப் பெயர் சூட்டப்பட்ட கூட்டத்தாரைக் கொண்டதும் வேதனைக்குரியதுமான ஓரிடமாகிவிடும். பாடசாலையால் உளத்தாக்கத்துக்கு ஆளாகும் அப்பாவிப் பிள்ளைகளுக்கே அதற்கான நட்ட ஈட்டினைச்செலுத்தவேண்டும்.

**கற்றல் என்பது யாது?**

ஆசிரியரின் பிரதான பணியாவது கற்றலுக்கு உதவுதலே என வியாக்கியானஞ் செய்வதாயின் உளவியலாளர்களால் இதுவரை மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் சார்ந்த கண்டுபிடிப்புகளின் பிரகாரம் அது மிகச் சிக்கலான செயன்முறையாகும்.

கற்றலானது உளவியல் சார்ந்த செயன்முறையோடு இணைந்துள்ளமையால் அது எவ்வாறு நடைபெறுகிறது என்பது பற்றிக் கடந்த பல ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் பிரதானமானவை. இருப்பினும் இக்கண்டு பிடிப்புக்கள் இதுவரை பூர்த்தியாகாத பணியாக விளங்குகின்றன.

கற்றல் என்பதாவது மனிதனின் நடத்தைக்கோலங்களில் நிகழும் ஒரு மாற்றம் என ஏற்கப்பட்ட கருத்துக்களை மையமாகக் கொண்டு அது எவ்வாறு நடைபெறுகிறது என்பது தொடர்பான எந்தவொரு புதிய கருத்தினையும் வெளியிடுவதற்கான அவகாசம் இன்னமும் உண்டு. விடய ஆய்வில் தென்படும் இரண்டு கற்றற் சந்தர்ப்பங்களை நாம் ஒரு கணம் உதாரணமாகக் கொள்வோம்.




இது ஆசிரியரொருவரால் எதிர்பார்க்கப்படும் மாற்ற மல்ல. இருப்பினும் அம்மாற்றம் பிள்ளைகளின் உளவியற் செயன்முறையின் ஒழுங்கமைப்புக்கேற்பக் கட்டாயமான ஒரு பெறுபேறாக நிகழ்ந்துள்ளது. வேறு விதமாக எளிதாகக் குறிப்பிடுவதாயின் அந்நடத்தைக் கோலம் பிள்ளையின் வாழ்வில் தீங்கினை விளைவிப்பதாகும். எனவே பாடசாலையில் அதனைக் கற்றல் என ஏற்க முடியாது.

முன்கூட்டியே சிந்தித்துத் திட்டமிடும் நடத்தையினைப் பிள்ளையில் ஏற்படுத்துவதற்காக கல்வி உளவியல் பற்றித் தெரிந்திருத்தல் வேண்டும். நாம் இரண்டாம் சம்பவத்தையும் அவதானிப்போம்.

முன்கூட்டியே சிந்தித்துத் திட்டமிடும் நடத்தையினைப் பிள்ளையில் ஏற்படுத்துவதற்காக கல்வி உளவியல்

பற்றித் தெரிந்திருத்தல் வேண்டும். நாம் இரண்டாம் சம்பவத்தையும் அவதானிப்போம்.




எதிர்பார்க்கப்பட்ட மாற்றத்தை மாணவன் அண்மித்தல் இங்கு நிகழ்ந்துள்ளது. அது மாணவனின் விருத்திக்கு ஏதுவாகிறது. எனவே பிள்ளையின் அபிவிருத்திக்கு காரணமாகும் அதே சமயம் நன்மை பயக்கும் நடத்தையினை ஏற்படுத்துதல் ‘கற்றல்’ எனக் குறிப்பிடப்படுகிறது.

மிக எளிதாகக் குறிப்பிடப்பட்டபோதும் இம்மாற்றத்தினை பிள்ளைகளில் ஏற்படுத்துவதற்கு ஆசிரியரொருவரது அறிவு மாத்திரம் போதுமானதாகாது. அவரது வாழ்வில் நீண்ட காலமாக நிலைநாட்டப்பட்ட,

| | |
|---|---|
| தத்துவம்,<br>மனப்பாங்குகள்,<br>அனுபவங்கள்,<br>அர்ப்பணிப்பு,<br>திருப்தி | என்பனவும் மிகப் பிரதானமானவையாகும். |

திறமையான ஓர் ஆசிரியர் எப்போதும் பிள்ளையின் உளவியற்றன்மையை இனங்காண்பவராக இருக்க வேண்டும் என்பற்கான காரணமும் அதுவே.

**நடத்தை மாற்றங்கள்**

மனிதரின் நடத்தை மாற்றங்கள் தொடர்பாக அண்மைக்கால உளவியலாளர்களுக்கு முன்னர் தத்துவஞானிகளால் குறிப்பிடப்பட்ட கருத்துக்கள் மிகப் பிரதானமானவையாகும். புத்தர் கொடிய மனிதரோடு செயற்பட்ட விதத்தைக் கவனத்தில் கொள்ளும் போது தற்கால உளவியலாளர்களால் கூறப்படும் புதிய கருத்துக் கள் எம் நினைவுக்கு வருகின்றன. அங்குலிமால என்ற கல்நெஞ்சங் கொண்ட மனிதன் தனது முழுச் சக்தியைப் பிரயோகித்து ஓடுகையில் புத்தரைத் தரிக்குமாறு கர்ச்சித்தான்.

“நான் நிற்கிறேன், நீங்களும் நிற்கவும்”

என்று புத்தர் கூறியபோது அங்குலமாலவின் மூளையில் படுகொலை தொடர்பாக அதுவரை செயற்பட்ட நரம்புக்கோலம் சிதைவுண்டு புதியதொரு கோலம் தோன்றியது. ஒருபோதுமே பொய் கூறாத இம்மகா புருஷர் கூறிய இச்சொற்களின் பொருள் யாது? உள்ளத்தை வழிப்படுத்தும் சரியான கோலத்தை இனங்கண்ட புத்தர் அங்குலிமாலாவின் தவறான நடத்தையை மாற்றியமைத்து, அவனை ஒரு கீழ்ப்படிவான சிஷ்யனாக்கிக் கொண்டார்.

யேசுநாதரைப் பற்றியும் இவ்வாறான ஒரு சம்பவம் பைபிளில் இடம்பெறுகிறது. குற்றமிழைத்த ஒரு பெண்ணைத் துன்புறுத்தும் சனக்கும்பலின் மத்தியில் வந்து நின்ற அவர் அத்துன்புறுத்தும் நடத்தையினை ஆச்சரியப்படத்தக்க விதத்தில் மாற்றியமைத்தார்.

“உங்களில் பாவஞ் செய்யாதவர் எவரேனும் இருப்பின் அவர் முதலாவது கல்லை அவள் மீது எறியட்டும்”

அவர்கள் திகைப்படைந்தனர். பாவிகளான நாம் அடுத்தவரை எவ்வாறு தண்டிக்க முடியும்? நாம் முதலில் எமது பாவங்களை அகற்றிக் கொள்வோம். சிறந்த உளவியலாளர்கள் சிறந்த ஆசிரியர் தெய்வங்களாக முடியும் என்பதற்கு இதுவோர் எடுத்துக்காட்டகும். கற்றல் என்பது இத்தகைய பெரியதும் சிறியதுமான சிறப்பியல்புசார் ஏராளமான நடத்தை மாற்றங்களே என்பதை ஆசிரியர்கள் என்ற வகையில் நீங்கள் சிந்தையில் கொள்ளவேண்டும்.

ஒரு புதிய சுற்றாடலுக்குப் பிள்ளையை வழிப்படுத்துதல், அச்சுற்றாடலில் சுதந்திரமாக நடமாட ஆவன செய்தல் என்பன கற்பித்தலாகும். இதன் நிமித்தம் பிள்ளையைச் சுற்றாடலுக்கு இட்டுச் செல்லல் என்பது அவனது நரம்புத் தொகுதியின் மாற்றங்கள் காரணமாக மூளையில் நிகழும் செயன்முறையை மையமாகக் கொண்டு நடைபெறுவதாக உளவியலாளர்கள் கூறுகிறார்கள். பின்வரும் கூற்று அக்கருத்துகளின் செறிவாகும்.

“ஒரு உயிரி சமூகத்தோடு இசைதல் தொடர்பான இலகுவான தன்மை அல்லது சிக்கலான தன்மை நரம்புத் தொகுதியின் மீதே தங்கியிருக்கிறது. கண், காது, மூக்கு, நாக்கு, தோல், தசைத் தொகுதிகள் என்பனவற்றால் கிடைக்கும் தகவல்கள் சிக்கலான நரம்புத் தொகுதி வாயிலாகப் பகுப்பாய்வு செய்யப்படும். மிகுந்தசிக்கலான ஒரு நரம்புத் தொகுதியாக இருப்பினும் சுற்றாடலில் இருந்து ஒதுக்கி வைப்பதனால் செவ்வையாக்கப்படல் சார்ந்த மிகக் குறைவான நிலையை அடையலாம்.

மனிதன் சுற்றாடலோடு இசைதலானது சுற்றாடலால் அவன் பெறும் தகவல்களை உடனடியாக ஒருங்கிணைக்கக் கூடிய செயன்முறையின் மீதே முழுமையாகத் தங்கியிருக்கிறது. மேற்படி ஒருங்கிணைப்பானது மனிதனின் மூளையில் நடைபெறுகிறது. உண்மையாகவே மனித மூளையில் சுமார் 100,000 (ஒரு இலட்சம்) நரம்புக்

கலங்கள் உண்டு. எனவே மூளையில் உண்டாக்கக்கூடிய தொடர்புகள் மிக விந்தையானதும் மிகச் சிக்கலானதுமாகும். அச்சிக்கலான தன்மை மனிதனின் நடத்தையிலும் சிக்கலான தன்மை ஏற்படக் காரணமாகின்றது.

கற்றலின்போது நிகழுவதை உளவியலாளரின் சொற்களால் குறிப்பிடுவதாயின் எதிர்பார்க்கப்படும் அறிவுக் கோலங்கள், எதிர்பார்க்கப்படும் திறன்சார் கோலங்கள், எதிர்பார்க்கப்படும் மனப்பாங்குக் கோலங்கள். என்பனவற்றுக்குப் பொருத்தமான தொடர்புகளாலான வலைப்பின்னல்கள் மூளையில் தோன்றுவதாகும்.

எனவே குறிப்பிட்ட ஒரு பிள்ளையைப் பொறுத்தவரையில் வாய்ப்பாடு மனனமாவதில்லை எனின் நரம்புக் கலங்களில் (Cells) தொடர்புகள் சார்ந்த கோலம் உண்டாவதில்லை என்பதே அதன் கருத்தாகும். அதன் நிமித்தம் மற்றுமொரு முறை கையாளப்படுமிடத்துப் பிள்ளைக்குப் பொருத்தமான முறை உதயமாகும். பிள்ளைக்குப் பொருத்தமான கோலத்தினை இனங்காண்பதற்கான உணர்வினை ஆசிரியர் ஏற்படுத்திக்கொள்ளல் அவரது பணியாகும்.

**உளவியலாளர்களின் கண்டுபிடிப்புகள் தொடர்பான பின்னணி**

ஒரு பாடசாலையின் கற்றல் முகாமைத்துவத்தோடு சம்பந்தப்பட்ட உளவியல் சார்ந்த பகுப்பாய்வான இதில் உளவியலாளர்களின் கண்டுபிடிப்புகளை விபரமாகச் சமர்ப்பித்தல் கடினமாகும். மேலதிக வாசிப்புக்காக இதில் குறிப்பிடப்பட்டுள்ள நூல்கள் உங்களுக்கு உதவியாக அமையும். இருப்பினும் தத்துவஞானிகளால் வெளியிடப்பட்ட கருத்துகளுக்கு அறிவியல் அடிப்படையினை ஏற்படுத்திய வண்ணம் 19ம் நூற்றாண்டின் இறுதிப் பகுதி தொடக்கம் மனித நடத்தை மாற்றங்கள் தொடர்பான இவ்வித வாதப் பிரதிவாதங்கள் இடம் பெற்றன என்பதை இங்க குறிப்பிட வேண்டியுள்ளது.

» வில்ஹேல்ம்வுண்ட் (Wilhelm Wundt) என்பவர் உலகின் முதலாவது உளவியல் ஆய்வு கூடத்தினை ஜெர்மனியில் தொடக்கிவைத்தார். முதலாவதாக உளவியலைத் தத்துவத்தில் நின்றும் வேறாக்கி அதனை சடத்துவாயியலாக மாற்றியமைத்தார். அவர் உளவியற் செயன் முறையினை ஆய்வுசெய்யும் விதி முறையாக அகநோக்கு முறையினைக் கையாண்டார்.

» சார்ஸ் டார்வினால் சமர்ப்பிக்கப்பட்ட பரிணாமவாதம் தொடர்பான கருத்துகள் விலங்குகள் மற்றும் மனிதர்கள் பற்றிய ஆய்வுகளுக்கு அடிப்படையாக அமைந்தன.

» நடத்தைசார் உளவியலாளர்களால் கற்றலானது S-R கோட்பாட்டினை அதாவது தூண்டல் மற்றும் அதற்கான துலங்கல் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு நடைபெறுவதாக ஒரு முக்கிய கருத்து அதன் பின்னரே சமர்ப்பிக்கப்பட்டது. பவ்லோ, வொட்சன், ஸ்கினர் ஆகியோர் இது தொடர்பான முன்னோடிகளாவர்.

» ‘கெஸ்டால்ட்’ உளவியலாளர்கள் (கொ.ஃப்கா, கொ.ஃப்லர், வேதிமர்) முழுமையாக நோக்குவதன் பிரகாரம் நடத்தைகளைப் பகுப்பாய்வு செய்தலானது கற்றல் தொடர்பான கருத்துகள், மேலும் விஞ்ஞான ரீதியாக முன்னோக்கிச் செல்ல உதவியது.

» ‘சிக்மன் புரொய்ட்’ என்பவரது உளப் பகுப்பாய்வு வாதமானது அடிமனம் பற்றிய புதிய கருத்துகள் வெளியிடப்பட வழிகோலியது.

» உளவியலானது பிள்ளைகளின் கற்றலில் செல்வாக்குச் செலுத்துவது பற்றி அண்மைக் காலத்தில் உலகம் பூராகவும் ஒரு முக்கியமான கருத்தினைச் சமர்ப்பித்த ஓர் உளவியலாளர் ஜீன் பியாஜே (Jean Piajet) ஆவார்.

பிள்ளைகளின் அபிவிருத்தி தொடர்பாக வெளியிடப்படும் இக்கருத்து அபிவிருத்திசார் உளவியல் எனப் பிரசித்தி பெற்றுள்ளது. கல்வி உளவியல் தொடர்பாக நவீன யுகத்தில் தோன்றியுள்ள புத்துணர்வானது பியாஜேயின் கருத்துக்களோடு இணைந்ததாகும்.

I. பிள்ளைகள் எண்ணக் கருக்களை ஏற்படுத்திக் கொள்ளும் விதம் தொடர்பான பல்வேறு தன்மைகளை இன்ங்காண்பதால் ‘கற்றல்’ பற்றிய தெளிவான விளக்கத்தோடு பணிகளைத் திட்டமிடலாம்.

II. பிள்ளைகளின் அபிவிருத்திச் சந்தர்ப்பங்களுக்கேற்ப நிகழும் மாற்றங்களுக்குப் பொருத்தமானவாறு கற்பித்தல் தொடர்பான முறை நுட்பங்களைத் திட்டமிடலாம். மேலும் கிரக்வோல் (Crackwall), சிம்சன் (Sympson) ஆயோரும் புதிய கருத்துக்களைச் சமர்ப்பித்துள்ளனர். இவ்வடிப்படையினை ஆழமாகக் கவனத்தில் கொள்ளும் திறமையான ஆசிரியரால் பாடசாலையில், வகுப்பறையில் கற்றல் மற்றும் கற்பித்தல் நடவடிக்கைகளில் ஒரு புரட்சியினை நிகழ்த்த இயலுமென்பது கல்வியியலாளர்களின் கருத்தாகும். எனவெ பியாஜேயின் உளவியற் கருத்துகள் தொடர்பான ஒரு சுருக்கமான மீளாய்வு இதில் சேர்க்கப்பட்டுள்ளது.

# கற்றல் கற்பித்தல் செயன்முறையை வெற்றிகரமானதாக்கிக் கொள்வதற்காக கல்வி வழிகாட்டலும் ஆலோசனை வழங்கலும்

### கல்விக்கும் வழிகாட்டலுக்கும் இடையிலான தொடர்பு

'கல்வி' என்பதைத் திட்டவட்டமாக வரையறுக்க முடியாதெனினும், முன்வைக்கப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் படி கல்வியின் இறுதி இலக்கு கற்பவரிடத்தே பூரண ஆளுமை விருத்தியை ஏற்படுத்துதலாகும் அல்லது தனியாளின் உடல், உள, சமூக, மனவெழுச்சி, ஒழுக்க, ஆன்மீக ரீதியான ஒட்டுமொத்த விருத்தியாகும். இந்த நோக்கத்தை அடைவதற்காக எடுக்கும் முயற்சிகளை, குறிக்கோள்கள், சிறப்புக் குறிக்கோள்கள் மற்றும் செயற்பாடுகள் எனக் கருதும் போது, அவை, ஒரு மாணவனை அல்லது ஒரு தொகுதி மாணவர்களை இலக்காகக் கொண்டு அவர்களுடன் நெருக்கமாகத் தொழிற்படும் ஒரு தொகுதிச் செயற்பாடுகளாக அமையும். மேலும், அது மாணவனைப் படிமுறை படிமுறையாக முன்னேற்றத்தின்பால் இட்டுச் செல்லுவதுமாகும்.

வழிகாட்டல் என்னும் எண்ணக்கருவும் அது போன்ற ஒரு செயன்முறையைப் போதிக்கின்றது. தனியாளின் ஆளுமை விருத்தியில் செல்வாக்குச் செலுத்தும் பாதகமான நிலைமைகளை இனங்கண்டு நல்ல உடல், உள நிலைமைகளுடன் பொருத்தமான நடத்தைக் கோலங்களின் பால் ஒருவரை (தனியாளை) வழிப்படுத்துவதே வழிகாட்டல் செயன்முறையின் நோக்கமாகும். ஒரு மாணவனை அல்லது ஒரு தொகுதி மாணவர்களை இலக்காகக் கொண்டு அமைக்கப்படும் குறிக்கோள்கள், சிறப்புக் குறிக்கோள், செயற்பாடுகள் என்பவற்றுடன் மாணவரைப் படிப்படியாக முன்னேற்றத்தின்பால் இட்டுச் செல்லும் வேலைத்திட்டமொன்று அதிலும் அடங்கியுள்ளது.


கல்வி, வழிகாட்டல் ஆகிய இரண்டு எண்ணக் கருக்களையும் நடைமுறைப்படுத்துகையில், அடிப்படையாகக் கொள்ளப்படும் பாட உள்ளடக்கங்களில் சில மாற்றங்கள் காணப்படுகின்றமையை ஏற்றுக் கொள்ள வேண்டியுள்ளது. அவை இந்த இரண்டு எண்ணக் கருக்களுக்கும் சிறப்பான நிலைமைகளாகும். எனினும், இந்த இரண்டு எண்ணக்கருக்களினதும் நீண்டகால இலக்குகளையும் செயன்முறைகளையும் கவனிக்கையில் அவற்றை ஒன்றிலிருந்தொன்று வேறுபிரிக்க முடியாது.

» நோக்கங்கள், முறைநுட்பங்கள், பெறுபேறுகள் ஆகியவற்றைப் பொறுத்தவரையில் கல்விக்கும் வழிகாட்டலுக்கும் இடையில் பாரிய வேறுபாடு இல்லை – கில்டர்

» கற்றல் சந்தர்ப்பங்களை புத்திசாலித்தனமாகக் கட்டுப்படுத்துவதற்காக வழிகாட்டலை மையமாகக் கொள்ளலாம். – நொமீகிஸ்ன் -

» கல்வி என்பது வழிகாட்டலாகும். – வழிகாட்டல் என்பது கல்வியாகும். – ஹேர்பட் நோகிஸ் -

எனவே ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள் போன்ற இந்த இரண்டு எண்ணக்கருக்கள் தொடர்பான விளக்கமானது கற்றல் கற்பித்தல் செயன்முறையில் ஈடுபடுவதற்கு ஆசிரியருக்கு மிக முக்கியமானதாகும்.




### வழிகாட்டலும் ஆலோசனையும் தொடர்பான எண்ணக்கரு பொருள் விளக்கம்

மனித வரலாற்றின் தொடக்கத்தில் மனிதர்கள் எதிர் கொண்ட பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்காக, தமக்குள் இருந்த அறிவுடையோரின் உதவியையோ சமய தாபனங்களைச் சேர்ந்தோரினதோ உதவியைப் பெற்றனர். அது அக்கால எளிமையான சமூகத்திற்குப்

பொருத்தமானதாகவும் இருந்துள்ளதாகத் தெரிகிறது. எனினும், பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் அமெரிக்க ஐக்கியக் குடியரசில் நிகழ்ந்த துரிதமான கைத்தொழில் மயமாக்கம் காரணமாக அமெரிக்க சமூகத்தில் தொழில் வாய்ப்புக்கள் தெரிவு செய்து கொள்வதில் இளைஞர்கள் குடித்தொகை இடர்பாடுகளை எதிர்கொண்டமையினால் தொழில் வழிகாட்டல் செயன்முறை தன்னைத் தொழில் துறையுடன் இணைத்துக் கொண்டது. அதற்கமைய இளைஞர்களுக்கு தொழில் ஒன்றை தெரிவு செய்து கொள்வதற்கு உதவும் நோக்குடன் 1908 இல் அமெரிக்கரான, பிரான்க் பாசன் என்பவர் பொஸ்டன் நகரில் தொழில் அலுவலகமொன்றினைத் தாபித்து பாசேனிய மாதிரியை அறிமுகஞ் செய்தார். அது தற்போது பல்வேறு துறைகளில் பரம்பியுள்ளது. அதுவே வழிகாட்டல் சேவை லரலாற்றின் தொடக்கமாகக் கருதப்படுகின்றது.

**பிரான்க் பாசன் முன்வைத்த பார்சோனிய மாதிரி**

**01. தனியாள் பகுப்பாய்வு**

ஆலோசனை வழங்குபவர், தொழிலை எதிர்பார்ப்பவரின் அதாவது ஆலோசனையை பெறுபவரின் பண்புக் கூறுகளை நோக்குதல் / விசாரணை செய்தல்

**02. தொழில் சார் பகுப்பாய்வு**

ஆலோசனை வழங்குபவரின் உதவியுடன், தொழிலை எதிர்ப்பார்ப்பதால் தாம் விரும்பும் வெவ்வேறு தொழில் துறைகளில் காணப்படும் சந்தர்ப்பங்கள் மற்றும் அவற்றின் தன்மை பற்றி அறிந்து கொள்ளுதல்

**03. தனியாள் பகுப்பாய்வும் தொழில்சார் பகுப்பாய்வையும் ஒப்பிடுதல்**

ஆலோசனை வழங்குபவரும் வழிகாட்டுபவரும் சேர்ந்து மேற்படி இரண்டு பகுப்பாய்வுகளது இணக்கப்பாடுகள், இணக்கமின்மைகளைக் கலந்துரையாடல்.

அதன் மூலம் குறித்த ஆளுக்குப் பொருத்தமான தொழிலைத் தெரிவு செய்து கொள்வதற்கு வழிகாட்டல் வழங்கப்படும்.

இவ்வாறாக தொடங்கிய வழிகாட்டல் செயன் முறையானது, பிற்காலத்தில் கல்விச் செயன்முறைக்கு உதவி வழங்கும் ஒரு வேலைத்திட்டமாகப் பரிணமித்து வழிகாட்டல் என்பது பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்தப் பட்டுள்ளது.

> மாணவருக்கு, பாடசாலையுடன் இசைவடைவதற்கும் கற்கைப் பரப்பைத் தெரிவு செய்து கொள்வதற்கும் வழங்கப்படும் உதவிச் சேவையாகும்.
>
> - ட்ருமன் கெலி(1914)

> மாணவனால் பாடசாலையையும் வாழ்க்கையின் தாக்கங் களையும் வெற்றி கொள்வதற்காக பிரயோகிக்கப்படும் ஒரு தலையீட்டுச் செயன்முறையாகும்.
>
> - வில்லியம் பெரொக்டர் (1925)

> அபிவிருத்தி சார்ந்த ஒரு செயன்முறையாகும். அது தனியாளின் தொழில்சார் கல்வி தனிப்பட்ட சமூக அனுபவங்கள் தொடர்பாக வழங்கப்படுதலாகும்.
>
> - றொபட் மதிவ்சன்

> முதிர்ச்சியின்பால் செல்லும் தனியாள் அனைவரும் எதிர் நோக்கும் தெரிவு செய்தல் மற்றும் தீர்மானமெடுத்தல், தனிப்பட்ட பிரச்சினைகளின் போது பாடசாலையெங்கும் பரம்பிய ஓர் உதவிச் சேவையாகும்.
>
> - கெனத் ஹெரயிட்டு(1962)

உளவியல், உள மருத்துவவியல், உடலமைப்பியல், சாரக உளவியல் (clinicalPsychology), புள்ளிவிபரவியல் ஆகிய பாடப்பரப்புகளின் விருத்தியுடன் வழிகாட்டலை நடைமுறைப்படுத்தக் கூடிய விடயப் பரப்பு வீச்சு விரிவடைந்து அதன் மூலம் மனிதனின் பண்புக் கூறுகள் மற்றும் சிக்கலான மனித நடத்தைகளை பயில்வதும் ஆராய்வதும் இலகுவாகியது. இவ்வாறாக விரிவடைந்த வழிகாட்டல் தொடர்பான எண்ணக்கருக்களை தனியாளின் உளவியல் பிரச்சினைளைத் தீர்ப்பதற்காக பயன்படுத்த முடியும் எனும் கருத்து வெளியிடப்பட்டது. அதில் முன்னின்ற கால் றொஜர்ஸ் அதனூடாக ஆலோசனை வழங்கல்தொடர்பான எண்ணக்கருவை வெளியிட்டார்.

> தீர்மானமெடுப்பதற்கும் இசைவடைவதற்கும், பிரச்சினை தீர்ப்பதற்கும் தம்மிடத்தே உள்ள சக்தியை வெளிக்கொணரும் சுய விருத்திச் செயன்முறையாகும்.
>
> – ஆதர்ஜோன்ஸ், மயர்ஸ்

> தாம் எதிர்கொள்ளும் பிரச்சினை நிலைமைகளை இனங்கண்டு அவை தொடர்பாக வெற்றிகரமாகத் துலங்குவதற்காக தம்மிடத்தே உள்ள சக்தியை வெளிக் கொணர்ந்து உறுதியான சுய எண்ணக்கருவின் முதிர்ச்சியை நோக்கிச் செல்லுவதற்காக வழங்கப்படும் ஓர் உந்துகையாகும்.
>
> - கால் றொஜர்ஸ் (1961)

> தன்னைப் பற்றிய விளக்கம், சுய எண்ணக்கரு தொடர்பான விருத்தியை ஏற்படுத்தி, அந்தத் தனியாளினது அபிவிருத்திக்கு உதவுதல் ஆகும்.
>
> - கிரிஸ்கெனாஸ் (1962)

ஒருவருக்கு, வாழ்க்கைக் காலத்துள் ஏற்படும் தீர்க்கமான சகல சந்தர்ப்பங்களையும் பொருத்தமானவாறு எதிர்கொள்ளும் சக்தியை அவரிடம் கட்டியெழுப்ப உதவும் செயன்முறை.

மேற்படி விடயங்களின் படி வழிகாட்டலும் ஆலோசனை யும் எனும் இரண்டு எண்ணக்கருக்களினுள் அவற்றுக்கே யுரித்தான சில சிறப்பான தன்மைகள் உள்ளன என்பது தெளிவாகின்றது.

நன்றி: கல்வி உளவியல்
தேசிய கல்வி நிறுவகம்

# சிறுவர் மேம்பாடு பற்றிய முதற் பாடம்

குழந்தைகளின் வளர்ச்சியும் மேம்பாடும் பற்றிய அடிப்படை அறிவு

பின்வரும் விடயங்கள் விவரிக்கப்படும்:

» சிறுவர் மேம்பாடு என்றால் என்ன?

» சிறுவர் வளர்ச்சி, மேம்பாடு என்பன பற்றிய அறிவின் வரலாறு

» இயல்பான, ஆரோக்கியமான பாலப் பருவ வளர்ச்சியின் விளைவு எவ்வாறிருத்தல் வேண்டும்.

» குழந்தையின் விருத்தியைப் பாதிக்கும் அம்சங்கள்

» வாழ்வின் முதல் ஆண்டில் நிகழும் விருத்தி

முதல் மாதம்

2 – 5 மாதம்

5 – 9 மாதம்

9 – 14 மாதம்

1 – 3 வயதில் நிகழும் விருத்தி

3 வயது முதல் பூப்பெய்தும் பருவம் வரையான வளர்ச்சி

### சிறுவர் மேம்பாடு என்றால் என்ன?

சிறுவர் மேம்பாட்டின் பெரும்பகுதியை நாமே அவதானித்துக் கொள்ளலாம்.

### வளர்ச்சி

ஒரு குழந்தை முதலில் விரைவாகவும் முதிரும் பருவத்தை எய்தும் போது மெதுவாகவும் வளர்வதை நாம் காணலாம். வழக்கமாக வளர்ச்சிப் படிமுறை சுமார் 15 – 17 வருடத்தில் முற்றுப் பெறுகிறது. கலங்கள் துரிதமாகப் புது புதுக் கலங்களாகப் பிரிவுறுவதன் விளைவே வளர்ச்சியாகும். இக்கலங்கள் தாம் ஆற்றும் பணிக்கு இசைய வெவ் வேறாகின்றன. இது வேறுபடுதல் எனப்படும்.

### மாற்றம்

சிசுவின் உடம்பு படிப்படியாக உருமாற்றம் பெறுதலைக் காண்கிறோம். குழந்தையாக இருந்து பிள்ளையாகி, பள்ளிப் பருவம் தாண்டி, விடலைப் பருவத்தை அடைவதைக் காண்கிறோம்.

### பேச்சு / தொடர்பாடல்

குழந்தையின் மழலைப் பேச்சு படிப்படியாக வார்த்தைகளாகவும் வார்த்தைகள் வசனங்களாகவும் வளர்ச்சி பெறுவதைக் கேட்கிறோம். அநேக பிள்ளைகள் சுமார் 3 வயதில் தாய் மொழியில் தம் கருத்துகளை வெளியிடும் ஆற்றலைப் பெறுகின்றன.

### கற்றல்

சிறுவர்கள் பல்வேறு திறன்களைக் கற்கவும், தம்மைச் சூழ உள்ள உலகைப் பற்றி அறியவும் விளங்கிக் கொள் ளவும் தம் புலன்களை அதிகமதிகமாகப் பயன்படுத்துவதைக் காண்கிறோம்.

### சுய உதவியை நோக்கி நகர்வு

பிறரின் தயவிலேயே முற்று முழுதாகத் தங்கியிருந்த குழந்தை, பிள்ளையாக மாறி, தன் வாழ்வின் பொறுப்பைத் தானே ஏற்கும் ஆற்றலுள்ள இளைஞனாக வளர்வதை நாம் அவதானிக்கலாம்.

### சமூகப் பணியை ஏற்றல்

வளர்ந்த பிள்ளை தன் சமுதாயத்தின் சமூக வாழ்வில் அதிகமதிகமாகப் பங்குகொள்ளும் ஆற்றல் பெறுவதைக் காண்கிறோம். அவ்வாறு செய்கையில் வேலை, விளை யாட்டு ஆகியவற்றின் மூலமும் பிறரை அவதானிப்பதனாலும் பல்வேறு சமூக நியதிகளையும் கற்றுக்கொள்கிறது. இவ்வாறாக, சிறுவர்கள் சமூகத்தில் ஆண், பெண் என்னும் வகையில் தாம் ஏற்க வேண்டிய வெவ்வேறு பாத்திரங்களைக் கற்றுக்கொள்கிறார்கள்.

**சிறுவர் வளர்ச்சி, மேம்பாடு என்பன பற்றிய அறிவின் வரலாறு**

இந்த வரலாறு, இந்தப் பூமியில் மனிதப் பிறவிகள் எவ்வளவு காலமாக வாழ்ந்துள்ளன என்பதைக் கருத்திற் கொண்டோமானால், மிகச் சமீபத்தியதே, 1940 களுக்கு முந்திய காலத்தில் பிள்ளைகளைப் பற்றி அறிவியல் வாரியாக விளங்கிக் கொள்ளும் முயற்சி படிப்படியாகவே மேற்கொள்ளப்பட்டது. ஆயினும், கடந்த 50 ஆண்டு காலத்தில் அது துரித வளர்ச்சி கண்டு, இன்று பல நாடுகளிலும் ஒரு பிரதான கற்கை நெறியாக விளங்குகிறது.

இன்று நம் வசமுள்ள திரண்ட அறிவுக்கு வெவ்வேறு துறைகளைச் சார்ந்த அறிவியலாளர்கள் பங்களித்துள்ளார்கள்.

உளவியலாளர்கள் பிள்ளைகளின் நடத்தையை ஆராய்ந்துள்ளார்கள், வெவ்வேறு பருவப் பிள்ளைகளும் செய்யக் கூடியவை எவை, பேசக்கூடியவை எவை, எண்ணக்கூடியவை எவை, வெவ்வேறு நிலைமைகளில் எவ்வாறு நடந்து கொள்வார்கள் என்றெல்லாம் ஆராய்ந்திருக்கிறார்கள்.

உதாரணம்: பியாஜே (Piaget) என்பது புகழ்பெற்ற உளவியலாளரின் பெயர், வெவ்வேறு பருவப் பிள்ளைகள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் தம் எண்ணத்தை வெளியிடுவதற்கும் தமக்குள்ள ஆற்றலை – சிந்தனை, பேச்சு, பார்வை, கேள்வி, வரைதல் ஆகியவற்றை – எவ்வாறு பயன்படுத்துகிறார்கள் என்பது பற்றி இவர் ஆராய்ந்துள்ளார்.

குடும்ப உறுப்பினர்கள் ஒருவரோடொருவர் உறவாடும் முறை எவ்வளவு முக்கியமென்பது பற்றியும் குழந்தையின் மேம்பாட்டில் அது ஏற்படுத்தும் தாக்கம் பற்றியும் உளவியலாளர்கள் அண்மையில் கவனம் செலுத்தியுள்ளார்கள்.

உயிரியல் விஞ்ஞானிகள், வைத்தியர்கள், உயிரியலாளர்கள் போன்றவர்கள் பாலப் பருவ மூளையின் வளர்ச்சி, போசாக்கு, நோய் நொடி என்பன பற்றியும் உடம்பு வளர்ந்து விருத்தியடையும் விதம் பற்றியும் ஆராய்ந்துள்ளார்கள்.

உதாரணம்: கர்ப்ப காலத்திலும் பிள்ளைப் பருவத்திலும் குழந்தையின் வளர்ச்சி, மூளை விருத்தி ஆகியவற்றில் போசாக்கு எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பது பற்றிய பல ஆய்வுகள் இன்று கிடைத்துள்ளன.

என்றாலும் பிள்ளையின் சமூகச் சுற்றாடலும் வளர்ச்சியைப் பாதிக்கிறது. எனவே உணவின் வகை தொகை, பிள்ளைக்கும் அதன் குடும்பத்தவர்க்குமுள்ள தொடர்பாடலின் தன்மை இரண்டுமே பிள்ளையின் இயல்பான வளர்ச்சிக்கும் விருத்திக்கும் முக்கியமானவை.

சமூகவியலாளர்கள், சமூகச் சூழல் - குடும்பமும் சமுதாயமும் - பிள்ளையின் வளர்ச்சியை எவ்வாறு பாதிக்கிறதென்பதை எமக்குத் தெளிவுபடுத்தியுள்ளார்கள்.

உதாரணம்: அகதி முகாம்களில் உள்ள மக்களுடையதைப் பார்க்கிலும் பாரம்பரியமான சமுதாயங்களில் வாழும் மக்களின் சமூக அமைப்பு அதிக உறுதிப்பாடுடையது; அதன் போக்கு வாக்குகளை முன்னதாகவே கட்டியம் சொல்லலாம். அகதி முகாம்களில் வெவ்வேறு பின்னணியைக் கொண்ட மக்கள் இருப்பார்கள். இவர்கள் வீடு வாசல்களை, சில சமயங்களில் நாட்டைக் கூட, விட்டுத் தப்பி வெளியேறியவர்களாயிருக்கலாம். இவ்வாறான சூழலில், பல குடும்பங்கள் தாம் அனுபவித்த சமூகக் கொந்தளிப்பின் விளைவாகக் குடும்ப அமைப்பு சீர்குலைந்திருப்பதை உணரலாம். (உதாரணமாக, மணவினை முறிவு, பெற்றோர் மீதான மதிப்புக் குறைந்தமை, பாரதூரமான உளவியல் கோளாறு). இதனால் பிள்ளையின் விருத்தி பல வகையிலும் பாதிக்கப்படுகிறது.

மானிடவியலாளர்கள், கலாசாரமும் கலாசார மாற்றமும் சிறுவர் மேம்பாட்டை எவ்வாறு மாற்றுகின்றன என்பதை ஆராய்கிறார்கள்.

பிள்ளைப் பருவம் பற்றியும் அதன் காலவரையறை பற்றியும் எல்லாப் பண்பாடுகளும் தத்தம் வரையறைகளை வகுத்துள்ளன. பிள்ளைப் பருவம் முடிவடைவதைச் சடங்காசாரங்கள் மூலமாகத் தெரியப்படுத்தும் வழக்கம் பல பண்பாடுகளிலே காணப்படுகின்றன. இதனால் பிள்ளையும் சமுதாயமும் புதிய நம்பிக்கைகளுடன் புதிய மாற்றங்களை எதிர்கொள்வதற்கான நிலை உருவாக்கப்படுகிறது.

மேம்பாட்டைப் பாதிக்கும் கலாசார அம்சங்கள் இடையறாது மாறி வருகின்றன. சில இடங்களில் இந்த மாற்றங்கள் விரைவாக நடைபெறுகின்றன. வேறு சில, எட்டாத தொலைவிலுள்ள இடங்களில், மெதுவாக நிகழ்கின்றன.

பாரம்பரியமான கலாசாரங்களில் துரித மாற்றங்கள் ஏற்படும் போது விடலைப் பருவத்தினர் மிகுந்த இடருக்குள்ளாகிறார்கள். பாரம்பரிய மரபுகளுக்கும் நவீன போக்குகளுக்கும் இடையில் அகப்பட்டுத் தடுமாறுகிறார்கள். இதனால் குழப்பநிலை தோன்றலாம்; தன்னைத் தானே அழித்துக்கொள்ளும் வாழ்க்கை நெறிக்கு அவர்கள் தள்ளப்படலாம். ஆனால், புதிய வாய்ப்புகளும் எதிர்ப்படலாம்.

**இயல்பான, ஆரோக்கியமான பாலப் பருவ வளர்ச்சியின் விளைவு**

சிறுவர் மேம்பாடென்பது ஆளுக்காள் வேறுபட்டதாக அமையும். இதனை நாம் மனத்திருத்த வேண்டும். ஆகவே, பின்வரும் கூற்றுகள் பொதுப்படையானவை. அவை எல்லோருக்கும் பொருந்தா. என்றாலும் விருத்தி என்பது எப்போதும் முன் கூட்டியே அனுமானிக்கக் கூடிய கிரமப்படியே நிகழும்.

உதாரணமாக: ஒரு குழந்தை தவழத் தொடங்க முன்னர் உட்காரும் வல்லமையைப் பெறுகிறது. ஒரு குழந்தை ஆறு மாதத்தில் நிமிர்ந்து உட்காரலாம். மற்றொரு குழந்தை எட்டு மாதம் வரை உட்கார முடியாமல் இருக்கலாம். ஆயினும் இரண்டு குழந்தையும் இயல்பான வளர்ச்சிக் கால வரையறைக்குள் உட்காரத் தொடங்கி விடுகின்றன எனலாம்.

இயல்பாக வளரும் குழந்தை பின்வரும் ஆற்றல்களைக் பெற்றிருக்கும்:

★ **பிறருடன் தொடர்பாடும் ஆற்றல்**

குழந்தைகள் மிக இளம் பருவத்திலேயே பிறரின் கவனத்தை ஈர்க்கவும், பிறரால் அரவணைக்கப்படவும் பிறர் தம்மோடு பேசி, சிரித்து உறவாட வேண்டுமென்றும் விரும்புகின்றன. தாய் தன் மகனைத் தூக்கிவைத்துக் கதைக்கும் போது அவன் முகத்தில் தோன்றும் மகிழ்ச்சிப் பிரகாசத்தைக் கவனித்தாலே இது மிகத் தெளிவாகப் புலப்படும். அந்தக் குழந்தை முகம் மலர்ந்து, மழலை பேசித் தன் கை, கால்களை அசைத்து, தன் உணர்ச்சி வெளிப்பாட்டைத் தெரிவிக்கும். தாய் தொடர்ந்தும் தன்னோடு பேசுவதை உறுதிப்படுத்தவே குழந்தை அப்படிச் செய்கிறது. காலம் செல்லச் செல்ல பிள்ளைகள் ஏனைய சிறுவர்களுடனும் தம்மைச் சூழ உள்ள வளர்ந்தவர்களுடனும் நெருங்கிய நட்புறவுகளை வளர்த்துக் கொள்கின்றன. காலக் கிரமத்தில், அவர்கள் வளர வளர, நண்பர்களின் வட்டமும் அகலமாகிறது. இந்த உறவுகளிற் சில அவர்களின் சீவிய கால பரியந்தம் நிலைத்து விடுகின்றன.

இத்தகைய நல்லுறவுகளை உருவாக்க வேண்டுமானால், பிணக்குகளை எவ்வாறு தீர்க்கலாம் எனப் பிள்ளைகள் கற்றுக் கொள்ள வேண்டும். தம் சுய கௌரவத்தை இழக்காமலே, பிறர் தம்மை விரும்பவும் நம்பவும் தக்க விதத்தில் நடந்து கொள்ளவும் வேண்டும்.

வேலையிலும் விளையாட்டிலும் பிறருடன் பங்கு கொள்ளப் பிள்ளை கற்றுக் கொள்ள வேண்டும்.

பிறருடன் உறவாடும் போது கோபம் குரோதம், பொறாமை ஆகிய குணங்களைக் கட்டுப்படுத்தப் பிள்ளை கற்றுக் கொள்ள வேண்டும்.

பிள்ளைகள் இவ்வாறான சமூகத் *திறன்களை* வளர்ப்பதில் தம் பெற்றோரினதும் நெருக்கமான ஏனைய பெரியவர்களினதும் பழக்க வழக்கங்களைப் பின்பற்றிய வண்ணம் இருப்பார்கள்.

★ **மொழி விருத்தி**

மற்றவர்கள் தன்னை விளங்கிக் கொள்ளும் வகையில் தன் எண்ணத்தை வெளியிடவும், தேவைகளையும் எண்ணங்களையும் தாய்மொழியில் தெரியப்படுத்தவும் பிள்ளை ஆற்றல் பெறுகிறது. பிறர் தனக்குச் சொல்ல விழைவதை விளங்கிக் கொள்ளும் ஆற்றலையும் அவன் பெறுகிறான்.

இது விருத்தியின் மிக முக்கியமான அம்சங்களில் ஒன்றாகும்.

★ **விவேகம் வளர்ச்சியடைதல்**

ஜனனேந்திரிய அம்சங்கள், இயல்பான மூளை வளர்ச்சி, குழந்தைப் பருவத்தில் உற்சாகமான சுற்றாடல், போசாக்கு அம்சங்கள், கற்பதற்கான வாய்ப்பு ஆகியவற்றிலேயே விவேகத்தின் வளர்ச்சி தங்கியுள்ளது.

மூளை விருத்தியாகும் போது, பிள்ளைகள் மிகவும் சிக்கலான பிரச்சினைகளைத் தீர்க்கக் கூடியவர்களா கிறார்கள். மனனஞ் செய்யும் வல்லமையும் அதிகமாகிறது.

புத்தி சாதுரியம் வளர்ச்சியடைவதற்கு முக்கியமான அம்சமாக அமைவது குழந்தைப் பருவத் தூண்டுதல் எனப்படுகிறது. பிறப்பிலிருந்து பிள்ளையும் பெற்றோரும் தமக்குள் நெருங்கி உறவாடுதலே இந்தத் தூண்டுதலாகும். பெற்றோர் பிள்ளைக்கு இடையறாது பொருள்களைக் காண்பித்தும் அவனோடு பேசியும், சேர்ந்து காரியங்களைச் செய்தும், விடயங்களை விளக்கியும், அவனைப் பாராட்டியும், அவனுக்கு இயல்பாக ஏற்படும் அறிவார்வத்தை ஊக்குவித்தும் வருவதன் மூலம் பிள்ளை புது அனுபவங்களைப் பெற்றுக் கொள்கிறான். சுருக்கமாகச் சொல்வதானால் பெற்றோர் மூலமாகக் கற்றுக்கொள்ளல்.

இவ்வாறு கற்பவற்றுட் சில, குறிப்பிட்ட பண்பாட்டுப் பின்னணியில் வளரும் சிறுவர்கள் வளர்ந்த பின்னர் வெளிப்படுத்த வேண்டிய திறமைகளாக அமையலாம். உதாரணமாக, தந்தையிடம் மகன் கற்றுக்கொள்ளும் விவசாயத்துறை ஆற்றல், தாயிடமிருந்து மகள் கற்றுக்கொள்வதான பிள்ளை வளர்ப்புத் திறன்கள் ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

ஏனைய நேரங்களில் பள்ளிக்கூடம் செல்லும் பிள்ளை, பெற்றோரின் தலைமுறையினருக்குக் கிடைத்தற்கரிதாயிருந்த புதிய அறிவைப் பெற்றுக் கொள்கிறான்.

★ **தனித்துவம் விருத்தி பெறல்**

காலக் கிரமத்தில் பிள்ளை தான் தனித்துவமானவன் என்னும் உயர்வைப் பெறுகிறான். தன் வல்லமைகள், பலவீனங்கள், தன் வேர்கள், குடும்பத்தில் தான் வகிக்கும் பங்கு, தனக்குச் சொந்தமான பண்பாடு ஆகியவற்றை இனங்கண்டு கொள்கிறான். இந்தவிதமான தனித்துவம் விருத்தியடையும் போது, பெண் அல்லது ஆண் என்ற வகையில், பாலியல் தனித்துமும் சேர்ந்துகொள்கிறது.

★ **உடல் வளர்ச்சியும் இயல்பியக்கத் திறன்களும்**

குழந்தை தன் உடம்பைப் பின்வரும் வழிகளில் இயங்கச் செய்வதில் நாளுக்கு நாள் திறமை பெறுகிறது: ஓடுதல், துள்ளுதல், சம நிலை பேணல், விரல்களை உபயோகித்தல், அவயங்களின் செயற்பாட்டைக் கட்டுப்படுத்துதல், அவற்றை இசைவுறச் செய்தல்.

குழந்தை படிப்படியாக வளர்ந்து (சில சமயங்கில் இந்த வளர்ச்சி துரிதமாக நிகழலாம்) வரவே, அந்த வளர்ச்சிக்கு ஏற்றதாக அதன் நிறையும் அதிகரிக்கிறது.

வழக்கமான பருவத்தில் பூப்பெய்துவதற்கான மாற்றங்கள் உடம்பில் தோன்றுகின்றன.

★ **கேட்டல், காணல், முகர்தல், சுவைத்தல், தொடுதல் ஆகிய புலனுணர்வுகள் வளர்கின்றன.**

ஒலி எங்கிருந்து வருகிறதென்பதைக் கிரகித்துக் கொள்ளவும் அதன் அர்த்தத்தை அறிந்து கொள்ளவும் பிள்ளை அதிகமதிகமாக ஆற்றல் பெறுகிறது.

கண், மூளை என்பன விருத்தியடைவதற்கு ஏற்ப பிள்ளையின் கட்புல ஆற்றலும் வளர்கிறது.

முகர்தல், சுவைத்தல் போன்ற ஏனைய புலனுணர்வுகளும் சருமத்தைத் தொடும் போது ஏற்படும் உணர்வை அனுபவிக்கும் திறன், தொடும் இடத்தை அறியும் திறன் என்பனவும் படிப்படியாக விருத்தியடைகின்றன.

★ **பிள்ளையின் விருத்தியைப் பாதிக்கும் அம்சங்கள்**

பிள்ளையின் விருத்தியைப் பாதிக்கும் பல அம்சங்கள் உண்டு. இவை பற்றிய அறிவு நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது.

தொடரும் .........

**கல்வி உளவியலின் தன்மை**

- உளவியல் என்பது மனித நடத்தையை ஆராயும் முறை.
- PSYCHOLOGY என்ற வார்த்தை எந்த மொழியில் இருந்து பெறப்பட்டது கிரேக்கம்.
- PSYCHE என்னும் சொல் உயிரை குறிக்கிறது.
- LOGUS என்பது அறிவியலை குறிக்கும் சொல்.
- சமுதாயத்தின் நடத்தையை விவரிப்பது சமுக உளவியல்.
- ஒருவனது உள்ளத்தில் உள்ளனவற்றை தானே விருப்பு வெறுப்பின்றி ஆராய்ந்து விவரித்து, பகுத்தாய்ந்து வகைப்படுத்தி முடிவுக்கு வருதல் அகநோக்கு முறை எனப்படுகிறது.
- பிறரது நடத்தையை கூர்ந்து கவனித்தல் உற்று நோக்கல்முறை எனப்படும்.

# தனிமுறைப் போதனை

கீத்டொப்பிங்
தமிழாக்கம்: புஸ்பா சிவகுமார்

**அறிமுகம்**

தொழில்வாண்மை அடிப்படையில் ஆசிரியரல்லாதோர், நல்ல நோக்கத்துடனும் முறையான விதத்திலும், மற்றவர்கள் கற்பதற்கு உதவுவதையும் ஆதரவு வழங்குவதையும் தனிமுறைப் போதனை என்று வரைவிலக்கணப்படுத்தலாம். இப்போதனை பெரும்பாலும், ஒருவருக்கொருவர் என்ற அடிப்படையில், அதாவது, கற்பவர் ஒருவர், கற்பிப்பவர் ஒருவர் என்ற சோடி அடிப்படையில் நடத்தப்படுகின்றது.

தனிமுறைப் போதனையாளர்கள் என்போர், பெற்றோராக, வயது வந்த கவனிப்பாளராக, சகோதர சகோதரிகளாக, குடும்பத்தின் ஏனைய உறுப்பினர்களாக, சகபாடிகள் குழுவிலுள்ள இதர கற்போராக, பல்வேறு வகைப்பட்ட தொண்டர்களாக இருக்கலாம். ஐந்து வயதுப் பாலகர்கள் கூட, பயனுறுதிவாய்ந்த விதத்தில் தனிமுறைப் போதனை மூலம் கற்கிறார்கள். தனிப்பட்ட ஒவ்வொருவரும் தனிமுறைப் போதனையாளராக இருக்கலாம். ஒவ்வொரு வரும் எவரொருவருக்கோ, ஏதோ ஒன்று சம்பந்தமாக உதவலாம். மற்றவர்கள் கற்பதற்கு உதவும் போது, தனிமுறைப் போதனையாளர்கள், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் தாமே கற்கின்றார்கள்.

தனிமுறைப் போதனை என்பது மிகப் பழையை வழக்கமாகும். பண்டைய கிரேக்கத்திலும் ரோமிலும் இது மிகச் சாதாரணமாக இடம்பெற்றது. இதற்கு முன்னரும் கூட, புராதன நூல்களில் இது பற்றிய பதிவுகளைக் காணலாம். கடந்த நூற்றாண்டு காலமாக, இதன் ஜனரஞ்சகத்தன்மை கூடியும் குறைந்தும் வந்துள்ளது. ஆனால், இது என்றும் மறைந்து விடவில்லை.

தனிமுறைப் போதனையாளர்கள், தாம் கற்பிக்கும் விஷயம் சம்பந்தப்பட்ட உள்ளடக்கத்திலோ அதனுடன் தொடர்புற்ற திறனிலோ "நிபுணர்களாக" இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. என்றாலும், தனிமுறைப் போதனையாளர்கள், தனிமுறைப் போதனை பெறுபவர்களை விட சற்று அதிகம் தெரிந்து வைத்திருப்பவர்களாக இருத்தல் மிகச் சிறப்பாக அமையும். எனினும், தனிமுறைப் போதனையாளர்கள், தனிமுறைப் போதனை பெறுபவர்களை விட, மிக உயர்தரத்திலிருந்தால், தனிமுறைப் போதனை பெறுபவர் கற்க வேண்டிய உள்ளடக்கம், தனிமுறைப் போதனையாளர்களுக்குச் சலிப்பை ஏற்படுத்தக் கூடிய வாய்ப்புண்டு. இதனால் தனிமுறைப்போதனையாளர்கள், தம்மளவில் வெகுவாக நன்மை பெறமாட்டார்கள்.

தனிமுறைப் போதனைக்கு விஷேமான விஷய உள்ளடக்கங்கள் கட்டாயம் என்றில்லை, தனிமுறைப் போதனையாளர்களிடம் போதிய அளவு பின்னணி அறிவு இல்லாத காரணத்தினால், தொழில்வாண்மை ஆசிரியர் ஒருவர் செய்யக்கூடும் என்று தாம் நினைப்பதைப் பின்பற்றிச் செய்வதற்குத் தனிமுறைப் போதனையாளர்கள் முயலக் கூடாது.

தனிமுறைப் போதனையாளர்கள் சரியான விடையைக் கூறச் செய்வதற்காக, தனிமுறைப் போதனையைப் பெறுபவருக்கு உதவவோ, தூண்டவோ, தடயங்களைக் கொடுக்கவோ கூடாது. அவர்கள் தனிமுறைப் போதனையைப் பெறுபவரின் மனத்தில் பதிந்துள்ள கருத்துக்களுக்கு அறைகூவல் விடுத்து விரிவுபடுத்த வேண்டும். ஒரு வேளை, ஒன்றிற்கு மேற்பட்ட சரியான விடைகள் இருக்கலாம்.

வெவ்வேறு சோடிகளுக்கு, வெவ்வேறு வழிகளில் தனிமுறைப் போதனை, பயனுறுதி வாய்ந்ததாக அமையலாம். தொழில்வாண்மை சார்ந்த கற்பித்தலுடன் ஒப்பிடுகையில், அது பின்வருவனவற்றை வழங்க முடியும்.

» மேலும் கூடிய பயிற்சி
» மேலும் அதிக செயற்பாடுகளும் பல்வகைமையும்
» மேலும் அதிக அளவில் தனி ஆள் ரீதியான உதவி
» மேலும் அதிக அளவில் வினாக்களை வினவுதல்
» மேலும் எளிமையான சொற்கள்
» மேலும் அதிக மாதிரியாக்கமும் செய்து காட்டலும்
» பிரதேசத்திற்கு மேலும் பொருத்தமான உதாரணங்கள்

» தவறாக விளங்கிக் கொண்டவற்றை வெளிப்படுத்து வதற்கு அதிக சந்தர்ப்பங்கள்

» மேலும் அதிக அளவில் தூண்டுதலும் சுயமாகத் திருத்திக் கொள்ளுதலும்

» மேலும் அதிக அளவில் உடனடியாக பின்னூட்டலும் பாராட்டுக்களும்

» பொதுமைப்படுத்தலுக்கு மேலும் அதிக சந்தர்ப்பங்கள்

» கற்றல் பற்றிய அதிகரித்த நுண்ணோக்கு (அதாவது, எவ்வாறு கற்கின்றார்கள் என்பதை விளங்கிக் கொள்ளுதல்)

» மேலும் அதிக சுயகட்டுப்பாடும் கற்கும் செயன் முறையின் உடைமையும்

தனிமுறைப் போதனை பெறுவோரும் தனிமுறைப் போதனையாளர்களும், பாராட்டை வழங்குவதற்கும் பெறுவதற்கும் கற்றுக் கொள்ளலாம்; சமூகத்திறன்களை விருத்தி செய்யலாம்; பரந்த அளவில் தொடர்பாளர்களை ஏற்படுத்திக் கொள்ளலாம்; தொடர்பாடற் திறன்களை விருத்தி செய்யலாம் (செவிமடுத்தல், விளக்குதல், வினவுதல், சுருக்கிக் கூறுதல்) மேலும் அதிக அளவில் சுயமதிப்பை விருத்தி செய்யலாம்.

தனிமுறைப் போதனையை வழங்கும் எளிமையான முறைகளான, திரும்பத் திரும்பக் கூறுவதிலும் பயிற்சியிலும் கவனஞ் செலுத்துதல் என்பன, தனிமுறைப் போதனையின் உள்ளார்ந்த, முழுமையான ஆற்றலையும் பயன் படுத்துவதாக அமையாது. எப்படியிருப்பினும் தனிமுறைப் போதனை, அபாயங்களையும் கொண்டுள்ளது.

தொழில்வாண்மை ஆசிரியர் வழங்கக் கூடியதை விட, தனிமுறைப் போதனையாளர் மேலும் அதிக அளவில் தனி ஆளுக்கு, தனி ஆள் அடிப்படையில் ஆதரவை வழங்க முடியுமென்றாலும் அத்தகைய ஆதரவின் தரம், தொழில்வாண்மை ஆசிரியர் வழங்கும் தரத்தை விடக் குறிப்பிடத்தக்க அளவு குறைவாகவே இருக்கும். தனிமுறைப் போதனையாளர்களினால் கண்டுபிடிக்கப்படும் பிழைகளும், தவறான கருத்துக்களும், ஆசிரியர் கண்டு பிடிப்பவற்றை விட, குறைந்தளவு நம்பகத் தன்மையையே கொண்டிருக்கலாம். தனிமுறைப் போதனையாளர்கள், உண்மையில் பிழையானவற்றைத் தனிமுறைப் போதனையைப் பெறுவோருக்குச் சொல்லவோ, காட்டவோ கூடும். அதாவது, அவர்கள், பிழைகளை மீள வலியுறுத்தக் கூடும். தனிமுறைப் போதனையாளர்கள் தமது பொறுமையை இழந்து, சரியான விடையைத் தனிமுறைப் போதனை பெறுபவரிடம் கூறக்கூடும். அல்லது தனிமுறைப் போதனை பெறுபவர் நிறைவேற்ற வேண்டிய பணியைத் தாமே நிறைவேற்றக் கூடும். அத்தகைய சந்தர்ப்பத்தில், தனிமுறைப் போதனை பெறுபவர்கள், மிகச் சொற்ப அளவே கற்றுக் கொள்வார்கள்.

பாடசாலையில் அல்லது கல்லூரியில் செய்யப்படும் வேலையில், அல்லது வேறெங்காவது செய்யப்படும் எந்த வகையான வேலையிலும் உதவுவதற்குத் தனிமுறைப் போதனையில் ஈடுபடலாம். எப்படியிருப்பினும், அவ் வேலையை எப்படிச் செய்ய வேண்டுமென்று பாடசாலை நினைக்கின்றதென்பதைப் பற்றி, தனிமுறைப் போதனை யாளர் திட்டவட்டமாக அறியாதவராக இருக்கலாம். குறிப்பாக தனிமுறைப் போதனையாளர், பாடசாலையிலிருந்து விலகி, அதிக காலம் சென்றிருந்தால், இது நிகழலாம். தனிமுறைப் போதனையாளார்கள், எல்லாவற்றையும் அறிந்திருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படவில்லை என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். எனக்கு நிச்சயமாகத் தெரியாது என்றோ, இதுவே என்னுடைய வழி ஆனால், இதுதான் ஒரே வழி அல்ல என்றோ கூறுவதற்கு அவர்கள் எப்பொழுதும் தயாராக இருக்க வேண்டும்.

இத்தகைய உள்ளார்ந்த கஷ்டங்கள் இருந்த போதிலும், மிக அதிக அளவில் இடம்பெற்றுள்ள ஆராய்ச்சிகள் மூலம் பெறப்பட்ட பெறுபேறுகள் தனிமுறைப் போதனை மிகப் பயனுறுதி வாய்ந்ததாக அமையலாம் என்பதைக் காட்டி நிற்கின்றன. அத்துடன் இது, சாதனை களை எய்துவதற்கு இலகுவான, சிக்கனமான ஒரு வழி யாகும். (ப்ளூம், 1984; கொஹென் குலிக்கும் குலிக்கும், 1982; டெவின்-ஷீஹன், பெல்ட்மன், அலன், 1976; லெவீன், க்ளாஸ், மெய்ஸ்டர், 1987; ரொயெக், ஏனையோர், 1999; ஷார்ப்லியும் ஷார்ப்லியும், 1981; டொப்பிங், ஏலி 1998; வோல்பேர்க், ஹோர்டெல், 1997)

எப்படியிருப்பினும் இங்கு தனிமுறைப் போதனையைப் பற்றி, இங்கு சுருக்கமாகத் தரப்பட்டுள்ள உள்ளார்ந்த பலவீனங்களையும் கண்டு கொண்டு, தனிமுறைப் போதனை நன்கு கட்டமைக்கப்பட்டுள்ளதென்பதையும் அது நல்ல தரம் வாய்ந்ததென்பதையும் உணர்வது முக்கியமாகும். ஆராய்ச்சிகளில் குறிப்பிடப்பட்டுள்ள பயனு றுதிப்பாடு, நீங்கள் உள்ள இடத்தில், பயனுறுதிப்பாட்டை உறுதிப்படுத்தாது போகலாம். நடைமுறைப்படுத்துவதிலுள்ள தரம், மிக முக்கியம், நாம் எவ்வாறு உதவலாம் என்பதைப் பற்றியும் தாம் எங்கெல்லாம் உதவ முடியாது என்பதைப் பற்றியும், தனிமுறைப் போதானையாளர்கள் தெரிவாக இருக்க வேண்டும்.

பயனுறுதி வாய்ந்த தனிமுறைப் போதனை தொடர்பாக, ஆராய்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட பத்து 'தத்துவங்கள்' இக்கைநூலில் தரப்பட்டு ஆராயப்படுகின்றன. இக்கோட்பாடுகள் மூன்று வகைப்படும்.

» தனிமுறைப் போதனையை எவ்வாறு செய்யலாம் என்பது பற்றிய பொதுக் கோட்பாடுகள். (அத்தியாயங்கள் 1-4). இது தனிமுறைப் போதனையாளர்களுக்கு

» வாசித்தல், எழுதுதல், கணிதம் என்பவற்றை எவ்வாறு தனிமுறைப் போதனை செய்யலாம் என்பது பற்றிய கோட்பாடுகள். (அத்தியாயம் 5-7). இது தனிமுறைப் போதனையாளர்களுக்கு.

» தனிமுறைப்போதனையை ஒழுங்கமைப்பது எவ்வாறு என்பது பற்றிய கோட்பாடுகள் (அத்தியாயங்கள் 8-10) – ஆசிரியர்களுக்கும் தனிமுறைப் போதனையை ஒழுங்கமைப்பவர்களுக்கும்.

### 01. யதார்த்த வாழ்க்கை இலக்குகள்

திடமான ஒரு நேரம் பற்றி உடன்பாடு காணுங்கள்; தனிமுறைப் போதனை பெறுபவரின் யதார்த்த வாழ்க்கை இலக்குகளை உங்களுடைய இலக்காகக் கொள்ளுங்கள்; ஆதரவையும் அறைகூவலையும் சமநிலைப்படுத்திக் கொள்ளுங்கள்.

### ஆராய்ச்சிகளின் பெறுபேறுகள்

கற்றற் பணிக்கான நேரம் என்பது, பயனுறுதி வாய்ந்த கற்றலில், பிரதான காரணிகளுள் ஒன்றாகும். இது அடிக்கடி நிகழும் குறுகிய அமர்வுகளில் கற்றல், அவ்வப்போது இடம்பெறும் நீண்ட அமர்வுகளை விட, அதிக பயனுறுதி வாய்ந்ததாகும்.

சொந்த யதார்த்த வாழ்க்கை இலக்குகளைப் பொறுத்த மட்டில் தான், தனிமுறைப் போதனை பெறுபவரின் தூண்டல் மிக உயர் மட்டத்தில் இருக்கும். எனினும், இவை, குறுகிய கால எல்லையைக் கொண்டனவாகவும் பணியை முடிப்பதில் மட்டும் கவனஞ் செலுத்துவனவாகவும் இருக்கலாம்; இவை அகட்டப்பட வேண்டும்.

தனிமுறைப் போதனை பெறுபவர் குறிப்பிட்ட அத்தருணத்தில் எவ்வளவை விளங்கிக் கொண்டுள்ளார் என்பதைப் பொறுத்து, அவ்விளக்க நிலையில் தனிமுறைப் போதனை ஆரம்பிக்கப்பட வேண்டும். இத்தொடக்க நிலை எங்குள்ளது என்பதை தனிமுறைப் போதனையாளர்கள் நிறுவி, சம்பந்தப்பட்ட தப்பெண்ணங்களைக் கண்டறிய வேண்டும். இம்முனையில் இருந்து தனிமுறைப் போதனை சிறு படிகளில் முன்னேறிச் செல்ல வேண்டும்.

பாட உள்ளடக்கத்தை மனனம் செய்வதை விடக் கற்றல் மூலோபாயங்கள் முக்கியம். கற்கும் ஒவ்வொரு வரினதும் மூலோபாயங்களைப் பற்றி அறிந்து கொள்வதற்காகவோ ஆழமான விளக்கத்தைப் பெறுவதற்காகவோ தனித்தனி ஆட்களாக கற்போருடன் பேசுவதற்குப் பாடசாலை ஆசிரியர்களுக்கு நேரம் இல்லை. இங்கு தான், தனிமுறைப் போதனை, விசேஷமாக உதவமுடியும்.

### நடைமுறைப் பிரயோகங்கள்

#### திடமான, கிரமமான நேரம்

ஒன்றாக இணைந்து செயற்படுவதற்கும், தாம் ஒதுக்கக்கூடிய நேரத்தைப் பற்றித் தனிமுறைப் போதனையாளரும் தனிமுறைப் போதனை பெறுபவரும் உடன்பாட்டிற்கு வரவேண்டும். ஒரு வாரத்தில் எத்தனை தடவைகள் சந்திக்கலாம்? ஒவ்வோர் அமர்வும் எவ்வளவு நேரத்தை உள்ளடக்க வேண்டும்? எத்தனை வாரங்களுக்குப் போதனை நீடிக்க வேண்டும்? எங்கே? நீங்கள் தொடர்ந்து செய்ய முடியாத அல்லது பூர்த்தி செய்ய முடியாத எதையும் ஆரம்பிக்கலாகாது.

நம்பிக்கையும் சௌகரியமும் நிறைந்த, தனிமுறைப் போதனைத் தொடர்பை வளர்த்துக்கொள்வதற்குக் கிரமமான சந்திப்புக்கள் அவசியம்.

தனிமுறைப் போதனை பெறுபவரின் யதார்த்த வாழ்க்கை இலக்குகளை உங்கள் இலக்காகக் கொள்ளுங்கள்.

தமக்கு எவ்வெவற்றில் உதவி தேவைப்படுகின்றது என்பது பற்றி, தனிமுறைப் போதனை பெறுபவர்கள், பெரும்பாலும் திடமான கருத்துக்களைக் கொண்டிருப்பார்கள். எனினும், இக்கருத்துக்கள், குறுகிய காலத்திற்கே நீடிப்பவையாக அமையலாம். தனிமுறைப் போதனை பெறுபவர்கள், உண்மையாக விஷயத்தை விளங்கிக் கொள்வதை விட தமது எழுத்து வீட்டு வேலைகளைச் சரியாகச் செய்துகொள்வதைப் பற்றியே அதிகம் சிந்திக்கக் கூடும். (அப்படிச் செய்தால், ஆசிரியர் தம் மீது கோபப்பட மாட்டார் என்பதற்காக) எனவே, தனிமுறைப்போதனையைப் பெறுபவரின் உடனடியான கரிசனைகள் எவையோ, அவற்றுடன் தனிமுறைப் போதனையாளர்கள் ஆரம்பிக்க வேண்டும். ஆனால் தனிமுறைப் போதனையாளர்கள், தனிமுறைப் போதனை பெறுவோரின் இலக்குகளைப் பற்றி அவர்களுடன் பேசி, பரந்த, ஆழ்ந்த விளக்கத்தைக் கருத்தில் எடுத்துக் கொள்ளும்படி தனிமுறைப் போதனை பெறுவோரை ஊக்குவிக்க வேண்டும். தனிமுறைப் போதனையாளர்கள், தாம் ஆர்வங்கொண்டுள்ள அல்லது நிபுணத்துவம் பெற்றுள்ள விஷயங்களை, தனிமுறைப் போதனை பெறுவோருக்கு கற்பிக்க வேண்டுமென்பதோ, தனி முறைப் போதனையாளரைப் போலச் சிந்திக்க வேண்டும் என்பதோ இதன் அர்த்தம் அல்ல.

# கற்றல், கற்பித்தலுக்கான வாசிப்பும் உலக வாசகர் தினமும்

எல்லா வேறுபாடுகளையும் கடந்த ஒரு திருநாளாக புத்தக தினம் பிறக்கிறது. உலக வாசகர்களின் பிறந்த நாள் இது. பெரிய பெரிய படங்களைக் கொண்ட பல வண்ண புத்தகத்தை ஒய்யாரமாகக் கொண்டாடிப் படித்துக் கொண்டிருக்கும் சின்னஞ்சிறுமியும், முகத்தருகே புத்தகத்தை வைத்துக் கண்களை இடுக்கியவாறு படித்துப் பெருமிதம் கொள்ளும் மூத்த குடிமகன் ஒருவரும் ஒரு சேர பூரிப்பு கொள்ளும் அற்புத தினம் அல்லவா இந்த நாள்!

திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டாலும் என்னைக் கிறங்கடிக்கும் செய்தியாக இருப்பது, ஸ்பெயின் தேசத்தின் கேட்டலோனியா நகரத்தில் இந்த நாளைக் காதலர் தினம் போலக் கொண்டாடும் விதம்! ஆடவர்கள் தமது மனம் கவர்ந்த நங்கையர்க்கு ரோஜா மலர்களைப் பரிசாக அளித்து மகிழ்வார்களாம். பதிலுக்கு, அந்தப் பெண்கள் புத்தகங்களை வழங்குவார்களாம். இந்த நாளில் 4 மில்லியன் மலர்களும், 8 லட்சம் நூல்களும் கை மாறும் என்று தெரிவிக்கிறது இணையதள குறிப்பு ஒன்று. ஆண்டு முழுவதும் நடக்கும் புத்தக விற்பனையில் சரிபாதி இந்த ஒரு நாளில் விற்றுவிடுமாம். புத்தகக் காதலர்களும், காதல் அகத்தினரும் நீடூழி வாழ்வார்களாக!

ஒரு பெரிய ஆளைக் கூட மாய மந்திரம் போட்டுக் குறுக்கி ஒரு குடுவையில் அடைத்துவிடுகிற மந்திரவாதி போல, இந்த உலகத்தையே-அதன் வரலாற்றையே-அரிய மனிதர்களையே-அருங்காட்சி அனைத்தையுமே ஒரு சொடுக்கு போட்டுக் குடுவையில் அடைத்ததுமாதிரி ஒரு புத்தகம் நம் எதிரே இருக்கிறது. எத்தனை எத்தனை குடுவைகளை நம்மால் விடுவித்துப் பார்க்க முடிகிறதோ அத்தனை இன்பங்கள் இந்த வாழ்வில் நமக்கு வசப்படுகிறது. அதன் பார்வையே முதல்கட்ட உற்சாகத்தை உள்ளத்தில் ஊற்றெடுக்க வைத்துவிடுகிறது.

நாம் கதவைத் திறந்ததும் நம்மோடு பேசத் தொடங்குகிற சித்தராக இருக்கிறது புத்தகம். அந்தக் குரல் மூடி வைத்த அந்த நூலில் நமக்காக எத்தனையோ காலமாகக் காத்திருக்கிறது. நமக்குப் போதும் என்கிறபோது, கதவை மீண்டும் சாத்தி வைத்தால் சடக் என்று அமைதியாகி அடுத்த திறப்புக்குக் காத்திருக்கிறது அந்தக் குரல். யார் தட்டியபோதும் திறக்கிற அந்தக் கதவு, கரையான்களிடமும் பேதம் பார்க்காமல் தன்னை ஒப்புக் கொடுத்து ஒரு தியாகப் பெருவாழ்வுக்குத் தயாராகிறது.

அவரவர் கற்பனைக்கு ஏற்ப, அவரவர் வேகத்திற்குப் பொருத்தமாக, அவரவர் விருப்பத்திற்கு ஏற்ற முறையில் முன்பின்னாகக் கூடக் காட்சிகளை இயக்கும் திரையரங்கமாக இருக்கிறது ஒரு புத்தகம். ஒளியுமிழும் அதன் திரைச்சீலை, படத்தைப் பார்ப்பவர் ஏரிக்கரையில் அமர்ந்தாலும், பயணத்தின் ஊடே வருகை புரிந்தாலும், சமையல் அறை வேலைகளின் இடைவெளியில் எட்டிப் பார்த்தாலும் அதே மதிப்போடும், பொறுப்போடும் தனது திரையிடலை அன்போடு நிகழ்த்துகிறது. பழைய படங்களின் புதிய காப்பிக்காக ஏங்காத வாசகர் உண்டா! எத்தனை எத்தனை கிளர்ச்சியை உருவாக்குகிறது இந்த வாசிப்பு!

பழைய புத்தகங்களைப் புரட்டிப் புரட்டி அதன்மீது போதை கொண்டு அலைவோரைக் குறித்து ஒரு கட்டுரையை பதினைந்து ஆண்டுகளுக்குமுன் தினமணிக் கதிரில் வாசித்த நினைவு வருகிறது. ஆக்கபூர்வமான போதை அது! இனி புத்தகமே வாங்கமாட்டேன் என்று சொல்லிச் சென்ற நண்பர் ஒருவரை அடுத்த வருடமே புத்தகக் கண்காட்சியில் பார்த்தேன். மது அருந்தாவிட்டால் என்ன, பழகிய கடைக்குப் போய்வருவதில்லையா, அப்படித்தான் இதுவும் என்றார் அவர்!

வேறு ஒரு நண்பர் எப்போது சந்திக்கும்போதும் ஜோல்னாப் பையைப் பிடுங்கி உள்ளே என்ன புத்தகம் இருக்கிறது என்று ஆராய்வார். இன்னொருவர், கடைசியாக என்ன புத்தகம் வாசித்தீர்கள் என்றுதான் பேச்சையே தொடங்குவார். இப்படியான ஜீவிகள் அடுத்தவர் வாசிப்பைத் தூண்டவும், வாசிப்பின் தூதுவர்களாகவும் அமைந்து விடுகின்றனர். பகிர்வு மிகப் பெரிய வாசிப்புத் தளம். தாங்களாக வாசிக்க இயலாதவர்கள்கூட இப்படியான கேள்வி ஞானத்தில், ஒரு கட்டத்தில் தேடிப் பிடித்து வாசிக்கத் தொடங்குகின்றனர். மறைந்த அற்புதக் கலைஞர் பூர்ணம் விசுவநாதன் அவர்களது குழுவில் நடித்துவந்த ரமேஷ் என்ற வங்கி ஊழியரது பணி நிறைவு விழாவில் பேசிய குருகுலம் நாடகக் குழு இயக்குனர் பூவராக

மூர்த்தி, எப்போது பார்க்கும்போதும் இவரைப் படிக்க வில்லையா அவரைப் படிக்கவில்லையா என்று கேட்டுக் கேட்டு எத்தனையோ எழுத்தாளரது படைப்புகளை ரமேஷ் தன்னை வாசிக்க வைத்த உத்தியைக் குறிப்பிட்டார். தாம் இன்புறுவது உலகு இன்புறக் கண்டு காமுறும் வித்தியாச கோஷ்டிகள் இவர்கள்.

இந்த ஏப்ரல் 14, அம்பேத்கர் பிறந்த நாள் அன்று, வாசிப்பு குறித்த எனது அனுபவங்களை எல்லாம் புரட்டிப் போட்டாள் ஓர் ஒன்பது வயது சிறுமி. திருவான்மியூர் பனுவல் அமைப்பின் சமூக நீதி மாத நிகழ்வுகளில் அன்று பீமாயணா என்ற படக் கதை வடிவிலான அம்பேத்கர் வரலாறு புத்தகத்தை அறிமுகப்படுத்திப் பேசிய அந்தக் குழந்தையின் பெயர் சைதன்யா. கையில் எந்தக் குறிப்பும் அற்று, ஒரு பிசிறு இல்லாமல், சுமார் இருபது நிமிடங்கள் போல அத்தியாயம் அத்தியாயமாக அவள், அம்பேத்கரின் ஆளுமை குறித்து தான் அடைந்த வியப்பின் பிரதிபலிப்பை எடுத்து உரையாற்றிய விதம் பார்வையாளரை அசத்தியது. வண்டிக்காரர் இளக்காரமாகப் பார்த்தார் என்ற வாக்கியமும், பின்னர் வேறு ஒரு விஷயத்தைச் சொல்கையில், அதிலும் அம்பேத்கருக்கு ஒரு நன்மை இருந்தது. தீண்டாமை குறித்துப் புரிந்து கொள்ளவும் போராடவும் அவருக்கு அது உதவியது என்ற சொல்லாடலும் நுட்பமாக இருக்கும் அவரது வாசிப்பை உணர்த்தியது. ஓநாயும் ஆட்டுக்குட்டியும் திரைப்படத்தில் நடித்திருக்கும் இந்தச் சுட்டிப் பெண், ஏற்கெனவே எஸ் ராமகிருஷ்ணன் அவர்களது குழந்தை களுக்கான கதைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து விருது வாங்கி இருப்பவர். வலைப்பூவில், கவிதைகளை எழுதித் தள்ளுபவர். இந்தக் குட்டிப் பெண்தான், இணைய தள சாட்டில் பதில் போடத் தவறியபோது என்னை இறந்து விட்டீர்களா என்று கேட்ட தேவதை.

வாசிப்பு இறக்காத வரை மனிதர்கள் பெருவாழ்வு வாழ்வார்கள் என்றே தோன்றுகிறது. வில்லியம் ஷேக்ஸ்பியர் பிறந்த இந்த நாள், உண்மையில் வாசகர்களின் பிறந்த நாள்! உலகம் முழுக்க பிறந்த நாள் கொண்டாடும் வாசகர்கள் பல்லாண்டு வாழ வாழ்த்துக்கள்

**படம்: கோப்பு**

எழுத்தாளர் சுஜாதாவை யாரோ ஒருமுறை சீண்டியிருந்தார். சுஜாதா என்ன எழுதினாலும் வெளிவருகிறதே, அவர் லாண்டரிக் கணக்கு எழுதினாலும் போடுவீர்களா என்று ஒரு பத்திரிகை ஆசிரியருக்குக் கடிதம் வந்தது. உடனே சுஜாதா, லாண்டரிக் கணக்கு ஒன்று எழுதிப் போட்டார்: வேட்டி இத்தனை, சேலை இத்தனை, அப்புறம் கைக்குட்டை (ரத்தக் கறை படிந்தது) ஒன்று என அதுவும் இதழில் வெளியானது. லாண்டரிக் கணக்கு இருக்கட்டும், தாங்கள் வாங்கிய புத்தகக் கணக்கு யாரும் வைத்திருக்கிறார்களா? உள்ளபடியே அது எத்தனை சுவாரசியமும் ஈர்ப்பும் நிறைந்ததாக இருக்கும். அதைவிட வாசிப்பின் பட்டியல்? அது எத்தனை மதுரமாக இனிக்கும்...

**அசர வைக்கும் பட்டியல்**

மதுரையில் வசிக்கும் எழுத்தாளர் ச. சுப்பாராவ் வியப்பளிக்கும் ஒரு வாசகர். கைபேசி, மின்னஞ்சல், முகநூல் என்ற நவீன சாதனங்கள், ஊடகங்கள் போன்றவற்றில் பட்டும் படாமல், தொட்டும் தொடாமல் விழிப்பாக நேரத்தைச் சேமித்து அப்படியே கொத்துகொத்தாகப் புத்தகங்களை வாசித்துத் தள்ளுபவர். போன ஆண்டு, தற்செயலாக ஏதோ பேச்சின்போது ஓராண்டில் இத்தனை நூல்கள் வாசித்தேன், இத்தனை பக்கங்கள் என்று புள்ளிவிவரம் கொடுத்தார். அதிர்ந்துபோய், இதற்கெல்லாமா கணக்கு வைத்திருக்கிறீர்கள் என்று கேட்டதற்கு அடுத்த மின்னஞ்சலில் அதிர்ச்சிப் பட்டியல் ஒன்று வந்துசேர்ந்தது.

1989-ல் தொடங்கி 2012 வரை ஆண்டுதோறும் தான் வாசித்த ஆங்கில, தமிழ் நூல்களின் எண்ணிக்கை, பக்கங்கள் ஆகியவற்றின் கணக்கு, நாள் ஒன்றுக்கு சராசரி எத்தனை பக்கங்கள் என்று அந்தக் கூட்டல், பெருக்கல், வகுத்தல் கணக்கு அதில் இருந்தது. மிகக் குறைந்தபட்சமாக ஓர் ஆண்டில் சராசரியாக நாள் ஒன்றுக்கு 23.14 பக்கங்கள், வேறு ஓர் ஆண்டில் மிக அதிகபட்சமாக நாள் ஒன்றுக்கு 75.36 பக்கங்கள். இந்த 24 ஆண்டுகளில் மட்டும் மேற்படி அசுரன் (பின்னே மனிதரா அவர்?) ஆங்கிலம் (448), தமிழ் (1,136) இரண்டிலுமாக மொத்தம் வாசித்திருந்தது 1,584 புத்தகங்கள். 4,18,945 பக்கங்கள்.

இலக்கிய ரசிகர், உளவியல் மருத்துவர் நெல்லை டாக்டர் ராமானுஜம் கடந்த வாரம் சும்மா இருக்காமல், முகநூல் கணக்கில் சுப்பாராவை வம்புக்கிழுத்து, என்னைச் சோர்வடையச் செய்யும் வாசிப்பின் வெள்ளை அறிக்கை ஏன் இன்னும் வெளியிடப்படவில்லை? என்று தகவல் அறியும் உரிமையைப் பயன்படுத்திக் கேட்டிருக்கிறார் போலிருக்கிறது. சுப்பாராவ் சளைக்காது இப்படிப் பகிர்ந்திருக்கிறார்: 2013-ல் படித்த புத்தகங்கள் - 87. அதில் தமிழ் - 58. ஆங்கிலம் - 29, மொத்தப் பக்கங் கள் - 17351. நாளொன்றுக்கு சராசரி - 47.53. தமிழில், கு. அழகிரிசாமி முழு தொகுப்பு, முகலாயப் பேரரசில் பெர்னியரின் பயணங்கள், பம்மல் சம்பந்த முதலியார் எழுதிய நான் கண்ட நாடகக் கலைஞர்கள், தியடோர் பாஸ்கரனின் சித்திரம் பேசுதடி, பெருமாள் முருகனின் மாதொருபாகன், பி.எஸ்.ராமையாவின் மணிக்கொடி காலம், டி. கே. கலாப்ரியாவின் சுவரொட்டி என நிறைய நல்ல புத்தகங்கள் என்று சொல்லும் அவருக்கு *100* புத்தகங்கள், நாளுக்கு 50 பக்கங்கள் என்பது இந்த ஆண்டின் இலக்காம்.



**படிக்க நேரமில்லையா?**

படிக்கவே நேரமில்லை என்று சொல்பவர்கள், ஒரே ஒரு நடை புத்தகக் கண்காட்சிக்குச் சென்று பார்க்க நேர்ந்தால், பச்சிளம் குழந்தைகளோடு நடையாய் நடக்கும் பெற்றோரையும், வாண்டுச் செல்லங்களையும், உடல் உபாதைகளைப் பொருட்படுத்தாது தேடலில் திளைக்கும் முதியோரையும், மாற்றுத் திறனாளிகளையும் சந்திக்கும்போது நிச்சயம் ஒரு மறுபரிசீலனைக்குத் தங்களை அவர்கள் உட்படுத்தவே செய்வார்கள்.

வாழ வேண்டுமானால் வாசி என்றார் குஸ்தாவ் ஃப்ளொபெர் என்ற நாவலாசிரியர். முந்தைய 15 நாள்களில் புதிய நூல் எதையும் வாசிக்காதவரின் உரையாடலில் எந்த நறுமணமும் கமழ்வதில்லை என்பது சீனத்தில் புழங்கும் சொல்லடை. அடுத்த தலைமுறைக்கான பரிசுப்பொருள் புத்தகங்கள் என்கிறது மற்றுமொரு சீனப் பழமொழி. அண்மையில் புதுவையில் நடந்த ஒரு கவிதை நூல் வெளியீட்டில் நூலாசிரியைக்கு வந்து குவிந்த சால்வைகள் நாற்பதாவது இருக்கும். அவற்றை அவரோ வேறு யாரோ என்ன செய்ய இயலும்? அதற்குப் பதிலாக ஒவ்வொருவரும் மிக எளிய புத்தகம் ஒன்றை வழங்கி யிருந்தால்கூட அவற்றைப் பலரும் வாசித்து இன்புற முடியும்.

எனது நண்பர் ஒருவர் எப்போது எங்கே என்னைக் கண்டாலும் பையைப் பற்றி இழுத்து அதில் என்ன நூல் இருக்கிறது என்று பார்ப்பது வழக்கம். கடைசியாய் என்ன படித்தீர்கள் என்று கேட்கும் அன்பர் ஒருவர் தூண்டிக் கொண்டே இருப்பவர். வற்றி உலர்ந்துபோன நகைச்சுவைத் துணுக்குகளால் தமது சிறப்புரையைக் கட்டமைக்கும் சிலர் அற்புதமான நூல்களை ஆங்காங்கு பொருத்தமாக மேற்கோள் காட்டினால் அந்தப் பேச்சின் தரம் எவ்வளவு உயரும் என்று ஆதங்கத்தோடு கேட்பார் இன்னொருவர்.

**திறந்துகொண்டது இன்னொரு விழி**

பிறவியிலேயே தோன்றிய குறைபாடு ஒன்றின் காரணமாகத் தமது பன்னிரண்டு வயதிலேயே கண்பார்வையை வேகமாக இழந்துகொண்டிருந்த ஒரு மனிதர் அவசர அவசரமாக ஒரு நூலை வாசித்து முடித்திருக்கிறார். பிறகு, முற்றிலும் கண்பார்வை பறிபோன வேதனையான ஆண்டுகள் ஒன்றில் தாம் வாசித்த அந்த இறுதிப் புத்தகத்தின் தாக்கத்தில் தனது 25ம் வயதில் முயற்சி மேற்கொண்டு மூன்று மொழிகளில் முதுநிலை பட்டம்பெற்று பல்கலைக்கழகப் பேராசிரியராக வேலை நியமனம் பெற்று, எழுத்தாளராகவும் பரிணமித்து, சமூகப் போராளியாகவும் வாழ்ந்துவருகிறார் அவர்.

பஞ்சாபில் வசித்துவரும் டாக்டர் டார்செம் என்ற அந்த அற்புத மனிதர் திருதராஷ்டிரா என்ற பெயரில் சுயசரியதையை எழுதியிருக்கிறார். அவருள் தாக்கத்தை ஏற்படுத்திய நூலை எழுதியவரும் கண்பார்வையற்றவர் என்பது முக்கியமான செய்தி. நிகோலாய் ஒஸ்திரோவ்ஸ்கி எழுதிய புகழ் பெற்ற ரஷ்ய நாவலான வீரம் விளைந்தது என்ற நூல்தான் அது. வாசிப்பினால் என்ன பெரிதாகக் கிடைத்துவிடும் என்று யார் கேட்க முடியும்?

கவிதையோ, கதையோ, பயணக் கட்டுரையோ, அறிவியல் உலாவோ, தத்துவ விசாரமோ, வரலாற்று ஆய்வோ, தொல்லியல் தேடலோ எதுவாக வேண்டு மானாலும் இருக்கட்டும் வாசிப்பு. அது இந்த அகண்ட பிரபஞ்சத்தின் எதாவது ஒரு சிறப்பு வாசலுக்கான வழியைக் காட்டலாம். திறவுகோல் அளிக்கலாம். புதையலாகவும் மாறிவிடலாம். இது எதுவுமே நடக்கக்கூட வேண்டாம். வாசிப்பின் இன்பமே மகத்தானதாக அமைந்துவிடலாம். வாசிக்காது இருக்க எந்தக் காரணமும் சொல்லாத அன்பர்கள் வாசிக்க எதற்குக் காரணம் கேட்க வேண்டும்? வாசிப்பால் இணைப்போம் இந்த உலகை!

# 'மன அழுத்தம்' கற்றல் கற்பித்தலைப் பாதிக்குமா?

21ம் நூற்றான்டின் முக்கிய நோய்யாக மனஅழுத்தம் இருக்கும் என பல ஆய்வுகள் கூறுகின்றன. இப்போது எல்லாம் ரத்தக்கொதிப்பு, சர்க்கரை நோய்க்கு அடுத்தப் படியாக மன அழுத்த நோய்களுக்கு என டாக்டர்களிடம் செல்பவர்களின் எண்னிக்கை அதிகமாகும்.

மன அழுத்தம் மிகவும் கொடுமையானது இயல்பான வாழ்க்கையைப் பறித்து நிம்மதியற்ற பொழுதுகளையும், நோய்களையும் தந்து செல்லும் இந்த மன அழுத்தம். குறிப்பாக இன்று 5 முதல் 20 வயதில் உள்ளவர்கள் அதிக மன அழுத்தத்தில் அவதிப்படுகின்றனர்.

உலகில் உள்ளமக்கள் தொகையில் நூற்றுக்கு 69 பேர் மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

76 பேர் போதுமான உறக்கம் இல்லாமல் உள்ளனர்.

77 பேர் குடும்ப உறவுகளினால் மன அழுத்திற்கும், மனோபயத்திற்கும் ஆளாகியுள்ளனர்.

50 பேர்களுக்கு புதிய பொருள்களை நுகரமுடியவில்லை என்பதே பெரிய கவலையாக உள்ளது.

55 பேர்களுக்கு குறைந்த நண்பர்களே உள்ளனர்.

58 பேர்கள் தலைவலியால் அவதிபடுகின்றனர்.

70 பேர் உடனே கோபப்படுபவர்களாக உள்ளனர்.

அதிகமான மனஅழுத்தம் ஒரு நபரின் உயிரியல் வயதை 30வருடங்கள் கூட்டுகிறது என்றும், சமிபத்திய ஆய்வு கூறுகிறது.

அதுமட்டுமல்லாது மனஅழுத்தம் அதிகமாகி தற்கொலை நிகழ்வுகளும் அதிகரிக்கும் அளவுக்கு இந்நோய் பாதிப்பை ஏற்படுத்திவிடுகிறது.கடந்த 2004 - 2008 மட்டும் 16000மாணவர்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.அதேபோல் 2006ல் மட்டும் 5857 மாணவர்கள் தேர்வு பயத்தால் மட்டும் தற்கொலை செய்துகொண்டுள்ளனர் என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டிய நிலையில் இருக்கிறோம்.

### மனஅழுத்தம் எதனால் ஏற்படுகிறது?

அழுத்தம் இருவகையில் வரலாம். ஒன்று நம்மைச் சூழ்ந்த சமூகத்தின் செயல்பாடுகளால் நமக்குள் வருவது. இன்னொன்று நம்முடைய வாழ்க்கைமுறை, சிந்தனைகளினால் வருவது.

ஏமாற்றம், பயம், நிராகரிப்பு, எரிச்சல், அதிக வேலை, அதிக சிரத்தை, குழப்பம் இவையெல்லாம் மன அழுத்தத்தைத் தோற்றுவிக்கும் சில காரணிகள். சிலருக்கு அதிக வெளிச்சம், அதிக சத்தம் போன்ற காரணங்களாலும் மனஅழுத்தம் உண்டாகிறது.

பிறப்பு, இறப்பு, போர்கள், திருமணங்கள், விவாக ரத்துகள், நோய்கள், பதவி இழப்பு, பெயர் இழத்தல், கடன், வறுமை, தேர்வு, போக்குவரத்து நெரிசல், வேலை அழுத்தம், கோபம், நட்பு முறிவு, உறவு விரிசல், என நம்மைச் சுற்றி நிகழும் எல்லா விதமான காரணிகளும் மன அழுத்தத்திற்குள் நம்மை இட்டுச் செல்ல முடியும்.

### தவறான பழக்கங்களின் மூலம் உண்டாகும் மனஅழுத்தம்?

புகை பிடித்தல், சரியான உணவுப் பழக்கம் இல்லாமை, போதை மருந்து பழக்கம், குடிப்பழக்கம், சரியான தூக்கம் இல்லாமை இவையெல்லாம் மன அழுத்தத்தை நாம் விலை கொடுத்து வாங்கும் செயல்கள். புகை பிடிக்கும் போது உடலில் கலக்கும் நிக்கோட்டினுக்கு மன அழுத்தத்தை அதிகரிக்கும் சக்தி இருப்பதாக ஆராய்ச்சிகள் நிரூபித்திருக்கின்றன.

### மனஅழுத்தால் உண்டாகும் நோய்கள்என்ன?

மன அழுத்தம் பல நோய்களைக் கொண்டு வரும். குறிப்பாக மைகிரேன் எனப்படும் ஒற்றைத் தலைவலி, ஸ்ட்ரோக், எஸீமா உட்பட பல நோய்களைமன அழுத்தம் கொண்டு வருகிறது.

மேலும், தலைவலி, அஜீரணக் குறைபாடுகள், தூக்கமின்மை, தசைப்பிடிப்பு, உடல் வலி, நெஞ்சு வலி, சீரற்ற இதயத் துடிப்பு,உயர் இரத்த அழுத்தம், உடல் எடைஅதிகரித்தல், குறைதல்,ஆஸ்த்மா, மூச்சுத் திணறல், தோல் நோய்கள், தாம்பத்தியக்குறைபாடுகள், புற்று நோய், அல்சர், சர்க்கரை நோய் போன்றவற்றிக்கும் ஆளாகலாம்

**குழந்தைகளிடம் மன அழுத்தம் அற்ற நிலையை உருவாக்க**

குழந்தைகளுக்கு மன அழுத்தம் அதிகரித்து வருவதாக ஒருஆய்வு கூறுகிறது.

பெற்றோருக்குள் ஏற்படும் சண்டை, கவனிப்பின்மை போன்றகாரணங்களால், குழந்தைகள் அதிகம் பாதிக்கப் படுகின்றன.அன்புக்கு ஏங்குகின்றன. இதுவே, மன அழுத்தத்தை ஏற்படுத்திவிடுகிறது. தூக்கமின்மை, உணவில் ஆர்வமின்மை, சோம்பல் போன்றவை ஏற்பட்டால், உடனே குழந்தைகளை டாக்டரிடம் காட்ட வேண்டும்.தாழ்வு மனப்பான்மைக்கு, சிகிச்சை அளிக்க வேண்டும். நாளடைவில் இது குறைந்து விடுகிறது. ஏழுவயதில் இருந்து பத்துவயதுக்கு உட்பட்ட குழந்தைகள் இதில் அதிகம் பாதிக்கப்படுவதாக டில்லியில் நடந்த ஓர் ஆய்வில் தகவல் வெளியாகியுள்ளது

தினமும் குழந்தைகளுடன் உரையாடுங்கள். அவர்களுடையதினம் எப்படிசெலவழிந்தது. என்னென்ன செயல்கள் நடந்தன என்றெல்லாம் உரையாடுங்கள். அழுத்தமான சூழல் இருப்பதுபோல உணர்ந்தால் அதிலிருந்துஎப்படி விடுபடுவது என்பதை அவர்களுக்குச் சொல்லுங்கள்.

உங்கள் பிரச்சனைகளை குழந்தைகள் மேல் எக்காரணம் கொண்டும் திணிக்காதீர்கள். அவர்களுக்கு குடும்பத்தின் தேவை மற்றும் அமைதியானவாழ்க்கையின் அவசியத்தை வலியுறுத்துங்கள்.

குழந்தைகள் எதையாவது செய்யும் போது மனம் விட்டுப்பாராட்டுங்கள். அவர்களை அரவணைத்துச் செல்லமறக்காதீர்கள். அவர்கள் இசை, பெயிண்டிங், நடனம்போன்றவற்றில் ஈடுபட தூண்டுங்கள்.

நகைச்சுவை உணர்வுள்ள குழந்தையாக உங்கள் குழந்தையை வளர்க்க முயலுங்கள். அது இறுக்கமான சூழல்களை குழந்தைகள் சமாளிக்க பிற்காலத்தில் பயன்படும்.

குழந்தைகள் எப்போதும் எதிலும் முதன்மையாக வரவேண்டும் என எதிர்பார்க்காதீர்கள். அது தேவையற்ற அழுத்தத்தை உருவாக்கிவிடும். எல்லோரும் முதலாவதாக வருவது நடப்பதில்லையே. விடுமுறைகள், மாலை வேளைகளை சற்று இலகுவாகவே வைத்திருங்கள். அதிகப்படியான கல்வியும் மன அழுத்தத்தை நல்கும் என்பதை மறவாதீர்கள். தோல்வியும் வெற்றியும் சகஜம் என்னும் மனநிலையைக் கொண்டிருங்கள் அல்லது எதிர்காலத்தில் குழந்தை தோல்விகளைச் சந்திக்கும் போது உடைந்து போகும் வாய்ப்பு உண்டு.

உங்கள் குழந்தைக்கு நீங்கள் ஒரு நல்ல முன் மாதிரியாக இருங்கள். குடித்துவிட்டு வீட்டுக்கு வரும் தந்தை குழந்தை குடிக்கக் கூடாது என அறிவுரை சொல்வது பாதிப்பை ஏற்படுத்தாது. குழந்தைகளுடன் நேரம் செலவிடுவதும், அவர்கள் பதின் வயது எட்டுகையில் நல்ல நண்பர்கள், உறவினர்களுடன் ஆரோக்கியமான நட்பு வைத்துக்கொள்ள தூண்டுவதும், உடற்பயிற்சிகள் செய்யத் தூண்டுவதும் மன அழுத்தத்தைக் குறைக்கும்.

**மனஅழுத்தத்தைப் போக்க வழி என்ன?**

மன அழுத்தத்தைக் கையாள்வதற்கு நம்முடைய மனதின் சிந்தனைகளை தூய்மைப் படுத்த வேண்டும். எதிர்மறைச் சிந்தனைகள் பெரும்பாலும் மன அழுத்தத்தையே அளிக்கின்றன. எனவே நல்ல சிந்தனைகளை வளர்த்துக் கொள்வதன் மூலம் மன அழுத்தத்தைக் கையாளமுடியும்.

அமைதியான குடும்பச் சூழல் பெரும்பாலான மனஅழுத்தத்தைக் குறைக்கிறது. அலுவலகத்தின் குழப்பங்களையோ, எரிச்சல்களையோ குவிக்கும் இடமாக குடும்பம் இருக்கக் கூடாது, மாறாக அவற்றை அழிக்கும் இடமாகவே குடும்பம் இருக்க வேண்டும் என்பதனை குடும்பத்தினர் புரிந்து கொள்ள வேண்டும். குடும்பத்தில் நுழைந்தவுடன் மனம் மகிழ்ச்சியடையும் வகையில் குடும்பத்தினரோடு அன்பான வாழ்க்கை வாழ்தல் மிகவும் முக்கியம்.

எத்தனை இறுக்கமான சூழலாக இருந்தாலும் சிரிக்கக் கற்றுக்கொண்டால் பிரச்சனைகள் பல காணாமல் போய்விடும். நல்ல நகைச்சுவை உரையாடல்களை வளர்த்துக் கொள்ளுங்கள். இது இரத்த அழுத்தத்தைக் கட்டுக்குள் வைக்கும். தசைகளை இறுக்கமற்ற நிலைக்கு கொண்டு செல்லும். நுரையீரலுக்கு சுத்தமான காற்றை கொண்டு செல்லும் எனவே மன அழுத்தத்தைக் குறைக்க சிரியுங்கள் என்கிறார் மனோதத்துவ நிபுணர் லீபேர்க்.

குடும்பங்களில் பிரச்சனைகள் வருவது சகஜம். கணவன் மனைவியரிடையே பிரச்சினை வரும்போது உன்னால் தான்வந்தது என்று பழியை மாறி மாறி சுமத்தாமல் நமக்கு பிரச்சினை இருக்கிறது எப்படி தீர்வு காண்பது எனும் கண்ணோட்டத்தில் பேச வேண்டும் என்கிறான் பிரபல அமெரிக்க உளவியலாளர் வில்லார்ட் எ.ஃப் ஹார்லே.

**மன அழுத்தத்தைக் குறைக்க சில வழிகள்.**

» காலையில் பதினைந்து நிமிடங்கள் முன்னதாகவே எழுந்துவிடுங்கள்.

» எங்கேயாவது செல்ல வேண்டியிருந்தால் அதற்குரிய ஆடைகள், பொருட்களை முன்கூட்டியே எடுத்து வைத்துக் கொள்ளுங்கள்.

» ஒரு காகிதத்தில் அன்றைய தினம் செய்ய வேண்டிய பணிகளையும், எப்போது செய்யப் போகிறோம் என்பதையும் குறித்து வையுங்கள்.

» காத்திருப்பது சிரமம் என்று கருதாதீர்கள். ஒரு புத்தகத்தைகையில்வைத்திருப்பது காத்திருத்தலை சுகமாக்கும். தேவையற்ற மன அழுத்தத்தைக் குறைக்கும்.

» வேலைகளைத் தள்ளி வைப்பது மன அழுத்தத்தை அதிகரிக்கும். செய்ய வேண்டியதை தாமதப் படுத்தாமல் செய்யுங்கள்.

» முன்கூட்டியே திட்டமிடுங்கள். எதையும் கடைசி நேரம் வரை காத்திருந்தபின் செய்வதைத் தவிருங்கள்.

» வேலை செய்யாததைக் கட்டி அழாதீர்கள். சரி செய்ய முயலுங்கள் காலணிஆனாலும் கடிகாரம் ஆனாலும். இல்லையேல் அவை தேவையற்ற மன அழுத்தத்தைத் தரக்கூடும்.

» சற்று முன்கூட்டியே செல்ல பழக்கப் படுங்கள். பத்து நிமிடத்தில் செல்ல முடிந்த இடத்துக்கு இருபது நிமிடத்திற்கு முன்பாகவே புறப்படுங்கள்.

» கா∴பி அதிகம் குடிப்பதைத் தவிருங்கள். புகை மது எல்லாம் வேண்டாம்

» சில மாற்று யோசனைகளைக் கைவசம் வைத் திருங்கள். உதாரணமாக பஸ் தாமதமானால் இதைச் செய்வேன் என்பது போன்றவை.

» இறுக்கம் தளருங்கள். சில வேலைகள் தடை படுவதாலோ, தாமதப்படுவதாலோ உலகம் முடிந்து விடப் போவதில்லை.

» தவறாய்ப் போன ஒரு விஷயத்தைக் குறித்து சிந்தித்துக் கொண்டே இருப்பதை விட, சரியாய் நிகழ்ந்த பலவற்றைக் குறித்து அடிக்கடி நினைத்து மகிழுங்கள்.

» செல்லும் இடங்கள் புதிய இடங்களாக இருந்தால் வழியை முதலிலேயே தெளிவாகக் கேட்டு வைத்துக் கொள்ளுங்கள்.

» சற்று நேரம் கைப்பேசிகளையும், தொலைபேசிகளையும் அணைத்து விடுங்கள். ஓய்வு எடுங்கள் எந்த தொந்தரவும் இன்றி.

» செய்வதற்கு இயலாத பணிகளோ, நேரமில்லாமையால் நாம் செய்ய முடியாது என்று நினைக்கும் பணிகளோ இருந்தால் மன்னிக்கவும்.. என்னால் செய்ய இயலாது என்று சொல்லப்பழகுங்கள்.

» உணவு, உடை, உறைவிடம் தவிர்த்த எதுவும் உங்களை மனஇறுக்கம் கொள்ளச் செய்யாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.முன்னுரிமை எதற்குக் கொடுக்க வேண்டும் என்பதில் தெளிவு அவசியம்.

» எளிமையாக வாழுங்கள்.

» உற்சாகமான நண்பர்களுடன் பழகுங்கள் அதிக நேரம்.

» நன்றாகத் தூங்குங்கள். முடிந்தால் அலாரம் வைத்து தூங்குங்கள். தடையற்ற தூக்கத்துக்கு அது உதவும்.

» வீட்டில் பொருட்களை அதனதன் இடத்தில் ஒழுங்காக அடுக்கிவையுங்கள். அவசரமாய் தேடுகையில் அகப்படாத பொருள் மனஅழுத்தம் தரும்.

» ஆழமாக மூச்சை இழுத்து மெதுவாக வெளிவிடுங்கள்.

» எழுதப் பழகுங்கள். கவலைகளை, எரிச்சல்களை, தோல்விகளை குறைக்க எழுத்து வடிகாலாகும்.

» குழப்பம், கவலைகளை உள்ளுக்குள் புதைக்காமல் நம்பிக்கைக்குரிய நண்பர்களிடம் பகிருங்கள்.

» தினமும் உங்கள் மனதை மகிழச்செய்யும் செயல்கள் எதையேனும் ஒன்றைச்செய்யுங்கள். அதில் பொருளா தாரப் பயன் ஏதும் இல்லாவிட்டாலும் கூட.

» பிறருக்காக எதையேனும் செய்யப் பழகுங்கள். செய்யும் அனைத்துசெயல்களையும் ஆத்மார்த்தமான அன்போடு செய்யுங்கள்.

» என்னை யாரும் புரிந்துகொள்ளவில்லையே எனும் முனகல்களைத் தவிர்த்து பிறரைப் புரிந்து கொள்ள முயலுங்கள்.

» உங்கள் உடை, நடை பாவனைகளின் தன்னம்பிக்கை மிளிரட்டும். உடைகளை நன்றாக அணிவதே தன்னம்பிக்கையை அதிகரிக்கும் என்பது நிரூபிக்கப் பட்டஉண்மை.

» நிறைய வேலைகளை ஒரே நாளில் முடிக்க நினைக்காதீர்கள். ஒவ்வொரு வேலைக்கும் இடையே சரியான இடைவெளி விடுங்கள்.

» வார இறுதிகள், விடுமுறை நாட்களை மிகச் சிறப்பாகச் செலவிடுங்கள். வெளியே செல்வது, கடற்கரைக்குச் செல்வதுஎன மனதை புத்துணர்ச்சி யாக்குங்கள்.

» இன்றைய பணிகளை செவ்வனே செய்தால் நாளைய பணிகள் செவ்வனே நடைபெறும் என்பதை மனதில் கொள்ளுங்கள்.

» பிடிக்காத வேலை இருந்தால் அதை முதலிலேயே முடித்து விடுங்கள். அப்போது தான் தொடர்ந்து செய்யும் பிடித்தமான வேலைகள் மனதை இலகுவாக்கும்.

மன்னிக்கும் மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளுங்கள், அடுத்தவர்களைக் காயப்படுத்தாமல் வாழப் பழகுங்கள்.

இவற்றில் சிலவற்றைப் பின்பற்றினாலே மன அழுத்த மற்ற வாழ்க்கை நமக்கு வசப்படும்.

# சர்வதேச (ஆடம்பர) பாடசாலைகள் (International School) சிறந்த மாணவர்களை உருவாக்குகிறதா?

நமது பள்ளிகள் குறித்த பார்வையை உருவாக்குவதில் சில அடிப்படையான உளவியல் முறைகள் பின்பற்றப்படுகின்றன. சமூகம் சார்ந்த உளவியல் இதில் முக்கிய பங்குவகிக்கிறது. பொது புத்தி என்ற பதத்தின் அடிப்படையில் அதிக விளம்பரம் செய்கிற பணக்காரர்கள் படிக்க வைக்கும் பள்ளியில் தனது பிள்ளையை சேர்க்க வேண்டும் என்ற மனரீதியான ஆசை, அதற்கு ஏற்றாற்போல இந்த நவின பள்ளிகள் தேவையான பகட்டு வேலைகளை செய்து விடுகிறது. அதுகுறித்த கிழ்கண்டபதிவுவை படியுங்கள்

பள்ளிகள் மாறி வருகின்றன. ஆடம்பரமான தனியார் பள்ளிகள் பகட்டான விளம்பரங்களை செய்து வருகின்றன. அவற்றின் தோற்றப்பொலிவும் அழகும் கண்ணைக் கவர்கிற விதத்தில் உள்ளன என்றால் மிகையல்ல. முன்பு பள்ளிகளில் கரும்பலகைகள் இருந்தன. வெள்ளைச் சாக்பீஸ் இருந்தது. இப்போது வெள்ளைப் பலகைகள் உள்ளன. கருப்பு மை ஸ்கெட்ச் பேனாக்கள் பயன் படுத்தப்படுகின்றன. கணினி ஆய்வகம் உள்ளது. கழிப்பறை வசதிகள் உள்ளன. புல்வெளிகள், மைதானங்கள் அருமை யாக உள்ளன. ஆனால், சுமைதூக்கியைப் போல பாடப்புத்தகங்களைச் சுமந்து செல்வது மட்டும் இன்னும் மாறவில்லை. ஒழுங்காக வகுப்பில் உட்கார்ந்து அனைத்துப் பாடங்களுக்கும் குறிப்பெடுப்பது, அவற்றை மனப்பாடம் செய்வது, தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறுவது. அதிக மதிப்பெண் பெறும் மாணவ- மாணவியருக்கு காலை பிரார்த்தனைக் கூட்டத்தின்போது அதிக பாராட்டுகள். சென்ற மாதம் முதல் வகுப்பில் தேறிய மாணவி இந்த மாதம் இரண்டாவதாகவோ, மூன்றாவதாகவோ வரும் அளவிற்கு கடுமையான போட்டி கள் உள்ளன. முதலிடத்தைத் தக்க வைத்துக்கொள்வது மிகவும் கடினமான காரியமாகும். ஆனால் போட்டியிலே சாதிக்கத் தவறிய முன்னாள் சாம்பியன்கள் இரண்டாவ தாகவோ, மூன்றாவதாகவோ வரும் நிலையில், அம்மாணவ - மாணவியர் கூனிக்குறுகும்படியாக உள்ளது.

பாரம்பரியமாகக் கல்வி கற்கும் முறையும் கற்பிக்கும் முறைகளும் மாறி வருகின்றன. நிலா நிலா ஓடி வா, அம்மா இங்கே வா வா ஆசை முத்தம் தா தா பாட்டைக் கேட்கவே முடியவில்லை. அழகான சீருடையில் பூத்த நிலாக்களைப் போல மாணவர்கள். புழுதியில் புரண்டு எண்ணெய் பார்க்காத தலை, கிழிந்த சட்டை கிழிந்த டவுசர் எதையும் பார்க்க முடியாது.

காலையில் வாய்ப்பாட்டு (இசை) வகுப்பு, சனி, ஞாயிறுகளில் பரதம், வெஸ்டர்ன் ஏதோ ஒரு நடனப் பயிற்சி, அபாகஸ் வகுப்பு, இந்தி டியூசன், யோகா, கராத்தே, செஸ் விளையாட்டு வழக்கமான பாடங்களுக்கு டியூசன் குழந்தை கண் விழித்ததிலிருந்து தூங்கப் போகும் வரை ஒரே பிஸி. பிஸியோ பிஸி. ஓய்வில்லாத நிலையில் குழந்தைகள் எளிதாக மனச்சோர்வு அடைகிறார்கள். தோல்வியைத் தாங்குவதற்கு அவர்களால் இயலாமல் போகிறது. பெற்றோர்களையோ, ஆசிரியர்களையோ, நண்பர்களையோ நேருக்கு நேர் சந்திக்கக் கூச்சப்படு கிறார்கள். அக்கம் பக்கத்தார் குழந்தைகளின் கல்வி குறித்து ஏதாவது கேள்வி கேட்டு விட்டால் இரு தரப்பினரும் ஜென்ம விரோதிகளாகி விடுகிறார்கள். இருதரப்புப் பிள்ளைகளும் ஒரே பள்ளியில், அதற்கும் மேலாக ஒரே வகுப்பில் படித்துக் கொண்டிருந்தால் கேட்கவே வேண்டாம்.

குழந்தைகளின் மூளை ஓய்வில்லாமல் வேலை செய்கிறது. ஆனால் உடலளவில் அவ்வளவாக ஆரோக்கியம் இல்லை. பெற்றோர்களும் தங்களைத் தாங்களே வருத்திக் கொண்டும், பிள்ளைகளையும் வருத்துகிறார்கள்.

அங்கிளுக்கு சாமஜ வர கமனா பாட்டுப்பாடிக் காட்டு, ஆடிக்காட்டு, அவனோடு செஸ் பிராக்டிஸ் செய்தால் என்ன? ஏன் சும்மாவே நின்று கொண்டிருக்கிறாய். கம்ப்யூட்டர் பாடம் படித்து விட்டாயா? ஹோம் ஓர்க் முடித்து விட்டாயா? என கேள்விகள் பதில்கள் கடிகாரத்தின் இரண்டு முட்களைப் போல. ஓடிக்கொண்டே யிருக்கிறது குழந்தை.

வகுப்பிற்கு பத்து குழந்தைகளோ பதினைந்து குழந்தைகளோ அவ்வளவு தான்.குறைந்த அளவு குழந்தைகள் இருந்தால் அனைத்துக் குழந்தைகளை யும் நன்றாகக் கவனிக்க முடியும் என்று நிர்வாகம் கதை விடுகிறது. நிற்பதற்கு நடப்பதற்கு அனைத்திற்கும் பீஸ். ஒரு மார்க் அரை மார்க் வித்தியாசத்தில் அத்தனை ரேங்குகளும். பள்ளிப்படிப்பில் சுட்டிகளாக கெட்டிகளாக விளங்கும் பிள்ளைகள் வாழ்க்கையில் 100 ரூபாய்

நோட்டிற்கும் 500 ரூபாய் நோட்டிற்கும் வித்தியாசம் தெரியாதவர்களாகவும், யதார்த்த வாழ்க்கையைப் புரிந்து கொள்ளாமல் எளிதில் ஏமாந்து விடுகிறார்கள். பள்ளிப்படிப்பை முடித்து வெளியே வருபவர்கள் தமிழும் தெரியாமல் ஆங்கிலமும் சரியாகத் தெரியாமல் அரை குறையாக வெளியில் வருகின்றனர். குரூப் டிஸ்கஷன், ப்ரிசே ரைட்டிங் (APrecise writing) போன்றவைகள் வாழ்க்கைக்கு உதவுவதில்லை என்பதை மாணவர்களும் பெற்றோர்களும் புரிந்து கொள்வதே இல்லை.

ஆனால் கல்லூரிக்குப் போகும் போது நன்கொடை கொடுக்காவிட்டால் இடம் கிடைக்காது. தகுந்த வேலை கிடைக்குமா? வேலை கிடைத்தாலும் செலவழித்த முதலுக்கு சம்பளம் கிடைக்குமா? எத்தனையோ பட்டதாரிகள் இரண்டாயிரத்துக்கும் மூன்றாயிரத்துக்கும் வேலை பார்க்கிறார்கள். இத்தனைக்கும் ஆண்களுக்கு பரவாயில்லை. பெண்கள் நிலைமை படுமோசம். வரைமுறையற்ற வேலைகள், காலவரம் பில்லாத உழைப்பு, குறைந்த சம்பளம். அதிக செலவில் வாங்கப்படும் டிகிரி சர்டிபிகேட், கல்யாணப் பத்திரிகையில் போடுவதற்காக, அதிக வரதட்சணை வாங்குவதற்காக, பெருமைக்காக மட்டுமே உதவுகிறது. தாராளமயமாக்கல், தனியார்மயமாக்கல், அவுட் சோர்சிங் போன்ற இடையூறுகளுக்கிடையே கல்லூரிப்படிப்பை முடித்த பின்னர் அரசு வேலைவாய்ப்புகள் ஏதாவது கிடைத்தால் பிற்கால வாழ்க்கை பிரகாசமாக இருக்கும். தனியார் சந்தையில் வேகமாக ஓடும் குதிரைகளுக்குத் தான் அதிக வாய்ப்பு. முன்னேறி வரும் தொழில் நுட்பத்திற்கு ஈடாக வளர வேண்டிய கட்டாயம். இல்லையென்றால் நாம் நண்பர்களாகவே பிரிவோம் என்று பிரிவுபசாரப் பார்ட்டி நடத்தி விடுவார்கள்.

குழந்தைகளின் நிலைமை குறித்து பிரபல மனநல மருத்துவர் சியாமளா வத்சா கூறுவது,குழந்தையின் ஆரோக்கியம், கற்பனை, திறமை போன்றவைகள் இயற்கையான ஆர்வத்தாலும் உந்து சக்தியாலும் வர வேண்டும். வகுப்பறைகள் குழந்தைகளின் கற்பனையை முடக்கி வைக்கிறது. எல்லாம் முடிந்த பிறகு பெற்றோர்களும் பிள்ளைகளும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டிருக்க வேண்டியது தான்.

*நன்றி: கல்விக் கதிர்*

• • • • • • • • • • • • • • • • • • • • • • • •

## உளவியல்தந்தைகள்

**வில்லியம்ஜேம்ஸ்:** அமெரிக்க உளவியல்தந்தை அவர் அமெரிக்க மற்றும் அவரது புத்தகத்தில் உளவியல் நிறுவ உதவியது, உளவியல் கோட்பாடுகள், ஒரு உடனடி கிளாசிக் ஆனது.

**சிக்மண்ட்பிராய்டு:** சைகோ அனாலிசிஸ் ஒரு தந்தை அவரது கோட்பாடுகள் மற்றும் வேலை உளவியல் சிந்தனை ஹ்யூகோ Mnsterberg: அப்ளைடுசைக்காலஜி தந்தை அவர், மருத்துவ தடயவியல் மற்றும் தொழிற்துறை நிறுவன உளவியல் உட்பட பல பயன்படுத்தப்படும் பகுதிகளில் ஆரம்ப முன்னோடியாக இருந்தார்.

**ஜான்பவுல்பி:** இணைப்பு கோட்பாட்டின் தந்தை அவர் இணைப்பு கோட்பாட்டை உருவாக்கினர்.

கர்ட்லெவின்: சமூக உளவியல் தந்தை அவரது பணி சமூக நடத்தைகளை ஆய்வு செய்யவிஞ்ஞான முறைகளை பயன்படுத்தி முன்னோடியாக.

**எட்வர்ட்தொர்ன்டிக்:** நவீனகல்வி உளவியல் தந்தை கற்றல் செயல்முறை தனது ஆராய்ச்சி கல்வி உளவியல் அடித்தளத்தை நிறுவ உதவியது.

**ஜீன்பியாகெட்:** மேம்பாட்டு உளவியல் தந்தை புலனுணர்வு வளர்ச்சிக்கு அவரது கோட்பாடு ஆராய்ச்சி குழந்தைகளின் அறிவு வளர்ச்சியை பற்றி எப்படி புரட்சி.

**Ulric Neisser:** நவீன அறிவாற்றல் உளவியல் தந்தை உளவியல் மற்றும் அறிவாற்றல் இயக்கம் தனது 1967 புத்தகம், அறிவாற்றல் உளவியல் வெளியீடு ஒரு பெரும் ஊக்கம் பெற்றது.

**Lightner Witmer:** நவீன மருத்துவ உளவியல் தந்தை அவர்1907 ல்மருத்துவ உளவியல் அர்ப்பணித்து உலகின் முதல் இதழ், உளவியல் மையம், நிறுவப்பட்டது.

**கோர்டன்ஆல்போர்ட்:** ஆளுமை உளவியல் தந்தை அவர் ஆளுமை ஆய்வு முதல் உளவியலாளர்கள் இருந்தது.

# மேலதிக மொழிகளைக் கற்பித்தல்

எலியட் எல். ஜீட் லிஹீவாடான்
ஹேர்பேர்ட் ஜே. வோல்பேர்க்
தமிழாக்கம்: புஸ்பா சிவகுமாரன்

**தொடர்ச்சி....**

**எழுதுதல்**

மாணவர்கள் தாம் மற்றவர்களுக்குக் கூற விரும்பும் செய்தியைக் கூறும் பொருட்டு பயனுறுதிவாய்ந்த இயல்பான மொழியை உருவாக்குவதற்கு, அவர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட வேண்டும்.

**ஆராய்ச்சிகளின் பெறுபேறுகள்**

எழுதுவதற்குக் கற்பிப்பது தொடர்பாக, இரண்டு முக்கிய அணுகுமுறைகள், சில காலமாக ஆராயப்பட்டு வருகின்றன. முதலாவது, 'ஆக்க அணுகுமுறை' எனப்படுகின்றது. இது எழுதுவதனால் பெறப்பட வேண்டிய இறுதியான பலனில் கவனஞ் செலுத்துகின்றது. அதாவது, தர்க்க முறை யிலமைந்த பிழைகளற்ற கட்டுரை. இதன் பிரகாரம், மாணாக்கர்களுக்கு மாதிரி உரைப்பகுதியொன்று வழங்கப் படும். அதை அவர்கள் ஆய்வு செய்து, பாகுபடுத்தி, பின்னர் மீள எழுதுவார்கள். வெவ்வேறு விதமான எழுத் தாக்கங்களுக்கு வெவ்வேறு மாதிரிகள் முன்வைக்கப் படுகின்றன.

எழுதுவது தொடர்பாக இதற்கு எதிர்மாறானது 'செயன்முறைசார் அணுகுமுறை' எனப்படுகின்றது. நன்கு எழுதப்பட்ட ஒரு பகுதியை உருவாக்கும் போது, எழுதுபவர் மேற்கொள்ளவேண்டிய படிகளை இவ்வணுகுமுறை வலியுறுத்துகின்றது. இவ்வணுகுமுறை சம்பந்தமாகக் கற்பிக்கப்படும் படிகள் பின்வருமாறு: சிந்தனைக் கிளறல். அதாவது, தனி ஆள் ஒருவரின் மனத்தில் எழுகின்ற பற்பல கருத்துக்களை எழுதிக் கொள்ளுதல் முக்கிய விஷயங்களைச் சுருக்கிக் கூறுதல். அதாவது, தர்க்க ரீதியான ஒழுங்கில் கருத்துக்களை வரிசைப்படுத்துதல் வரைவாக்குதல், அதாவது, இச் சந்தர்ப்பத்தில் எழுதுபவர், வடிவத்தை விட, கூறப்போகும் செய்தியின் உள்ளடக்கத்தின் மீது கருத்தூன்றுவார் மீள்பார்வை. அதாவது, எழுதுபவரின் மனத்தில் உதித்த பின் சிந்தனைகள் அல்லது சகபாடிகளினாலோ ஆசிரியர்களினாலோ வழங்கப்பட்ட பின்னூட்டலின் அடிப்படையில் திருத்தங்கள் இடம் பெறும் ஒப்புப் பார்த்தல். அதாவது, இங்கு வடிவம் வலியுறுத்தப்படும். இறுதி வரைவு. இச்செயன் முறைகள் யாவும் விளங்கப் படுத்தப்பட்டு, கற்பிக்கப்பட்டு, மாணாக்கர்களினால் பயிற்சி செய்யப்பட வேண்டும்.

விஞ்ஞானம், இலக்கியம் என்பன போன்ற பல்வேறுபட்ட பரப்புக்களில் எழுதப்படுவனவற்றை, இனங்கண்டு ஒற்றுமை வேற்றுமைகளை அறிவதற்குச் செய்யும் முயற்சியில், பல்வேறு இலக்கிய வகைகள் மீது கவனஞ் செலுத்துவதி லுள்ள பெறுமானம் பற்றி, சில அண்மைக் கால ஆராய்ச்சிகள் எடுத்துக்கூறுகின்றன. ஒன்றுடனொன்று ஒத்துப்போக முடியாத மூன்று அணுகு முறைகளை விட, எழுதுதல் பற்றிய நிகழ்ச்சித் திட்டம் ஒன்று, ஆக்கம், செயன்முறை, இலக்கிய வகை எழுத்து என்பவற்றை ஒருங்கிணைத்து, இசைவாக்கஞ் செய்யப்பட்ட முழுமையான ஒன்றாக்க வேண்டும். இத்துடன், பல மாணாக்கர்களுக்கு, புலமை சாராத விஷயங்களில் பிரத்தியேகமான பயிற்சி தேவைப்படலாம். உதாரணமாக, கடிதங்கள், படிவங்கள், சுய விபரக் கோவைகள், பட்டியல்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். பொருத்தமான விதத்தில் இவற்றையும் எழுதுதல் சம்பந்தப்பட்ட வகுப்புக்களில் உள்ளடக்கலாம்.

வகுப்பறையில் எழுதுதலைக் கற்பிப்பதற்குப் பின்வருவன, சில ஆலோசனைகளாகும்:

1. எழுதும்போது, அவசியப்படும் கட்டங்களை மாணாக்கர்களுக்குக் கற்பியுங்கள்: சிந்தனைக் கிளறல், முதல் வரைவை எழுதுதல், மீள்பார்வை யிடுதல், பதிப்பிடல் (திருத்தி அமைத்தல்) முதலியன.
2. சிறந்த எழுத்துக்கள் என்று கருதப்படும் மாதிரிகளை வழங்கி, அவற்றைப் பயனுறுதி வாய்ந்தனவாகவாக்கும் இயல்புகளைப் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
3. ஏற்றுக்கொள்ளக்கூடிய எழுத்துக்கள் தொடர்பாக அவற்றை வாசிப்போரின் எதிர்பார்ப்புக்களைப் பற்றியும் வெவ்வேறுபட்ட எழுத்து வகைகளுக்கு வெவ்வேறுபட்ட எழுத்துப் பாணிகள் பயன்படுத்தப் படுவதைப் பற்றியும் கலந்துரையாடுங்கள்.



4. எழுதுவதற்கு தலைப்புக்களைத் தெரிவு செய்யும் பொழுது, மாணாக்கர்களின் ஆர்வத்தைக் கவரக் கூடியனவும், எதிர்காலத்தில் அவர்கள் தேர்ச்சி பெறவேண்டி அமையும் பணிகளை உள்ளடக்கியன வுமான தலைப்புக்களைத் தெரிவு செய்யுங்கள்.

5. படிவங்கள், கடிதங்கள், அட்டவணைகள் என்பன வற்றைக் கோவைப்படுத்துதல் போன்ற யதார்த்த வாழ்க்கைக்குரிய, எழுத்துத் தொடர்பான பணிகளை மாணாக்கர்களுக்கு கற்பியுங்கள்.

### இலக்கணம்

முறைசார் இலக்கணத்தைக் கற்பித்தல், சில நிலைமைகளில் சில நன்மைகளை ஏற்படுத்தலாம். ஆனால், வேறு சில நிலைமைகளில் அது வரையறைக்குட்பட்ட நன்மைகளையே வழங்குவதாக அமையலாம்.

### ஆராய்ச்சிகளின் பெறுபேறுகள்

மரபு வழிவந்த, மேலதிக மொழி நெறிகளில், முறை சார்ந்த இலக்கணத்தில் கவனஞ்செலுத்துவதில், ஆசிரியர்கள் அதிக நேரத்தைச் செலவிட்டார்கள். இருந்த போதிலும், இலக்கண வடிவங்களைத் தனியாக எடுத்து அவற்றைக் கற்பித்தலும் அவற்றைத் தொடர்ந்து, ஒரே கோலத்தில் அமைந்த இலக்கண வடிவங்களை, தொடர்ச்சியான பயிற்சி மூலம் மனதில் பதிய வைத்தலும், மொழியை சரியான விதத்தில் பயன்படுத்துவதற்கு வழிவகுக்காமற் போகக்கூடும் அத்துடன், தொடர்பாடுவதற்கு முயலும்போது, மாணாக்கர் தொடர்ந்தும் இலக்கணப் பிழைகளைவிடலாம். மொழி கற்பித்தல், வெறுமனே இலக்கணத்தைக் கற்பித்தலுக்கும் அப்பாற் செல்ல வேண்டுமென இன்றைய ஆராய்ச்சிகள் சுட்டிக் காட்டுகின்றன. கற்போர் குறிப்பிட்ட தொரு வடிவத்தின் அர்த்தத்தை விளங்கிக்கொள்வதுடன் அவ்வடிவம் இடம்பெறும் உரைப்பகுதியையும் விளங்கிக் கொள்ள வேண்டும். மேலும், இலக்கணத்தில் வெளிப் படையான அறிவுறுத்தல்களைப் பெற்று, அதை நயந்து, நன்மையடைவதற்கு முன்னர், மாணாக்கர்கள் சொற்களைப் பயின்று அவற்றைக் கற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படலாம். ஆகவே, ஒரு பிழை திருத்தம் பற்றிய பின் னூட்டல் மிக்க பயனுள்ளதாக அமைய முடியும்.

### வகுப்பறையில்

ஓர் இலக்கணக் கோலத்தைக் கற்பிப்பதற்குப் பின்வருவன அடிப்படை நடைமுறைகளாகும்.

1. இயல்பான ஓர் உரையாடலில், குறிப்பிட்ட இலக்கண வடிவத்தை முன்வைத்து, அவ்வடிவம் எவ்வாறு ஆக்கப்படுகின்றது என்பதையும், ஒரே சீரற்ற வடிவங்களையும், எழுத்துக் கூட்டுதல், அல்லது உச்சரிப்புத் தொடர்பான பிரச்சினைகள் ஏதாவது இருந்தால் அவற்றையும் விளக்குங்கள்.

2. குறிப்பிட்ட வடிவத்தைக் கற்றுக்கொள்ளக் கூடிய விதத்தில், இயல்பான மொழியில் பற்பல உதாரணங்களை வழங்குங்கள். அவ்வடிவத்தை எவ்வாறு பொருத்தமான விதத்தில் பயன்படுத்தலாம் என்பது பற்றி குறிப்பிட்ட சந்தர்ப்பத்துடன் தொடர்புற்ற தகவல்களை வழங்க வேண்டும்.

3. வடிவத்தை உருவாக்கும்படி மாணாக்கர்களைக் கேட்பதற்கு முன்னர், மாணாக்கர் அக்கற்றல் வடிவத்தையும் அதன் தொழிற்பாடுகளையும் இனங்கண்டுகொள்கிறார் என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்.

4. இயல்பான தொடர்பாடல் வழிகளில் குறிப்பிட்ட வடிவத்தை மாணாக்கர்கள் பயன்படுத்துவதற்கு இட மளிக்கும் விதத்தில் செயற்பாடுகளை வழங்குங்கள். வெறுமனே, எளிமையான ஒரே கோலத்திலமைந்த வற்றைத் தொடர்ந்து பயிற்சி மூலம் மனத்தில் பதிய வைத்தல் மட்டும் போதாது.

5. பிழைகள் ஏற்பட்டால், எவ்வடிவங்கள் பயன் படுத்தப்பட வேண்டும் என்பது பற்றியும் அவை ஏன் பயன்படுத்தப்பட வேண்டும், என்பது பற்றியும் அர்த்தபூர்வமான பின்னூட்டலை வழங்குங்கள். ஆனால், ஒரு வடிவத்தைப் பூரணமாகக் கிரகித்துக் கையாள்வதற்கு, பெரும்பாலான சந்தர்ப்பங்களில் மாணாக்கர்களுக்கு அதிக நேரம் தேவைப்படும் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.

### 10. விளங்கிக்கொள்ளக்கூடிய உச்சரிப்பு

மேலதிக மொழியொன்றைப் பேசும் மாணாக்கர்கள் பேசுவதை, அதே மொழியைப் பேசும் ஏனையோர் விளங்கிக் கொள்ளக்கூடியதாக இருத்தல் வேண்டும். எனவே, உச்சரிப்பு பற்றிய கற்பித்தல் இந்நோக்கத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

#### ஆராய்ச்சிகளின் பெறுபேறுகள்

மேலதிக மொழி ஒன்றைக் கற்கும் வயதில் கூடிய மாணாக்கர்கள், அம்மொழியைத் தாய் மொழியாகக் கொண்டோர் பேசுதல் சாத்தியமாகுமா என்பதைப் பற்றி ஆராய்ச்சியாளர்கள் விவாதித்து வந்துள்ளார்கள். இத்தகைய மாணாக்கர்களுள் ஒரு சிலரே தாய் மொழியாகப் பேசுபவர்களைப் போல அம்மொழியைப் பேசும் நிலையை எட்ட முடியுமென்று பல ஆராய்ச்சியாளர்களும் ஏற்றுக்கொள்கின்றார்கள். எப்படியிருப்பினும் பெரும்பாலான தொடர்பாடல் தேவைகளைப் பொறுத்தமட்டில், மொழியைத் தாய் மொழியாகப் பேசுவோரைப் போலப் பேச வேண்டும் என்பது முக்கியம் அல்ல. குறிப்பிட்ட மொழியைப் பேசும் ஏனையோர் விளங்கிக்கொள்ளும் விதத்தில் பேசும் ஆற்றலை மாணாக்கர்கள் விருத்தி செய்துகொள்ள வேண்டுமேயன்றி அம்மொழியைத் தாய் மொழியாகப் பேசுபவரைப்போலப் பேச வேண்டுமென்றில்லை. கிரகித்துக்கொள்ளக் கூடியதாக உச்சரிப்பு இருக்க வேண்டும் செய்தியை விளங்கிக்கொள்ள முடியாத விதத்தில் உச்சரிப்பு அமையக் கூடாது. எனவே உயிர் ஒலிகளையும் மெய் எழுத்துக்களின் ஒலிகளையும் தனித்தனியாக உச்சரிக்கச் செய்வதிலும் பல்வேறு கூட்டொலிகளை (ஒலிக்கூட்டுக்கள்) உச்சரிக்கச் செய்வதிலும் ஆசிரியர்கள் கவனஞ்செலுத்த வேண்டும்.

லேதிக மொழியினது ஒலிகளின் உயர்வு தாழ்வு, சொல் அழுத்தம், சந்தக் கோலங்கள் என்பவற்றைக் கற்பித்தல் அதே அளவு முக்கியத்துவம் கொண்டது. இவை இடம்பெறாவிட்டால், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பயனுறுதி வாய்ந்த தொடர்பாடல் தடைப்படும். தனி ஒலிகளைத் துல்லியமாக உச்சரிக்காததைப் பார்க்கிலும், மேலே குறிப்பிட்ட பரப்புக்களில் காணப்படும் வல்லமையின்மை தான் அதிக அளவிலான தொடர்பாடற் பிரச்சினைகளுக்கும் காரணமாகின்றது.

உச்சரிப்பைக் கற்பிக்கும்போது மாணாக்கர்களுக்கு இயல்பான மொழிப் பின்னணியில் பயிற்சி அவசியம். கோலத்தை உருவாக்குவதில் தாம் எவ்வளவு தூரம் வெற்றிபெற்றிருக்கின்றார்கள் என்பதை மாணாக்கர்கள் மதிப்பீடு செய்ய முடியாதிருக்கக்கூடும் என்பதனால், உச்சரிப்புச் சம்பந்தப்பட்ட கற்பித்தலில் பின்னூட்டல் அத்தியாவசியமான ஒரு பகுதியாகும். உச்சரிப்பு அம்சம் ஒன்றைத் தெரிவு செய்கையில், மேலதிக மொழியில் தொடர்பாடும் பொழுது தாய் மொழிக் கோலங்கள் அத்தொடர்பாடலுக்கு எவ்வாறு உதவியாக அமையலாம் அல்லது அத்தொடர்பாடலுக்கு எவ்வாறு பாதகமாக அமையலாம் என்பதை ஆசிரியர் எடுத்துக்காட்ட வேண்டும்.

#### வகுப்பறையில்

உச்சரிப்பைக் கற்பிக்கும்போது சில பல கற்பித்தல் மூலோபாயங்கள் உதவியாக அமையும்:

1. உச்சரிப்பை மிக உன்னிப்பாகக் கவனிப்பதற்கு மாணாக்கர்களுக்குக் கற்பியுங்கள். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் மற்றொரு கோலத்துடன் ஒப்பிடும் போது, முக்கியமான வேறுபாடுகளை இனங் காண் பதற்கு அத்தகைய ஒப்பீடுகள் மாணாக்கர்களுக்கு உதவியாக அமையும்.

2. கோலத்தைத் தனிமைப்படுத்திப் பயன்படுத்தும் படியும் அதன் பின்னர், இயல்பான வாக்கியங்களின் பின்னணி யில் பயன்படுத்தும் படியும் ஊக்கப்படுத்துங்கள்.

3. மாணாக்கர்கள் தாம் அமைக்கும் வாக்கியங்களிலும் மொழிக் கோலத்தைப் பயன்படுத்த வேண்டும்.

4. சரியான ஒலி உயர்வு தாழ்வு, சொல் அழுத்தம், சந்தம் பற்றிய கோலங்களை ஏற்படுத்துவதற்கு மாணாக்கர்களுக்குக் கற்பியுங்கள்.

5. உச்சரிப்பைக் கற்றல் கடினமான விஷயமாகும் இதற்கு, அதிக காலமும் செல்லும். கடினமான கோலங்களை மீண்டும் கற்பிக்க வேண்டிய அவசியம் ஏற்படலாம்.

# வாழ்க வையகம்! வாழ்க வளமுடன்!





உலகத்தில் அமைதியும் ஆன்மீக மேம்பாடும் ஏற்படுவதற்காக சுயமுயற்சியின் மூலம் வாழ்க்கையில் முன்னேறிய மகரிசி அவர்கள்

- தியான முறையில் சிறந்ததான எளிய முறைக் குண்டலினி யோகம்
- உடல் உறுப்புக்களை வருத்தாத எளியமுறை உடற்பயிற்சி
- பண்புகளை உயர்த்தும் தற்சோதனை
- உயிர்ச்சக்தியைப் பாதுகாப்பதன் மூலம் வயோதிகத்தைத் தள்ளிப் போடும் சித்தர்கள் கண்ட நெறியான காயகல்ப யோகம்

இவை இணைந்த வாழ்க்கை நெறியைப் போதித்து மனிதகுலம் உய்ய அருள் தொண்டாற்றி வருகிறார்.

* விரும்புவோர் இங்கு வந்து உடற்பயிற்சியும் தவமும் கற்றுக் கொள்ளலாம்.

* காயகல்பம், அகத்தாய்வு முதலிய பயிற்சிகள் ஒவ்வொரு மாதமும் தக்க பேராசிரியர்களைக் கொண்டு நடத்தப்படுகின்றன.

* தினசரி காலையில் உடற்பயிற்சி கற்றுத் தரப்படுகிறது. மாலையில் கூட்டுத் தவம் நடைபெறுகிறது.



# அகவிழி

## கிடைக்குமிடங்கள்

**பூபாலசிங்கம் புத்தகக்கடை**
202, செட்டியார் தெரு, கொழும்பு - 11
தொ.பே.இல.: 011-2422321

**பூபாலசிங்கம் புத்தகக்கடை**
4A, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே.இல.: 021-2226693

**நியூ கேசவன் புக்ஸ்டோல்**
52 டன்பார் வீதி, ஹட்டன்
தொ.பே.இல.: 051-2222504,
051-2222977

**அறிவாலயம் புத்தகக்கடை**
190 B புகையிரத வீதி,
வைரவப்புளியங்குளம், வவுனியா
தொ.பே.இல.: 024-4920733

**இஸ்லாமிக் புத்தக இல்லம்**
77, தெமட்டக்கொட வீதி,
கொழும்பு - 09
தொ.பே.இல.: 011-2688102

**Easwaran Book Depot**
No. 126/1, Colombo Street, Kandy
Tel.: 081-2220820

**குமரன் புக் சென்டர்**
18, டெய்லிபயர் கொம்பிலக்ஸ்
நுவரெலியா
தொ.பே.இல.: 052-2223416

**விழுது - மட்டக்களப்பு**
இல 22, கலைமகள் வீதி,
நெச்சிமுனை, மட்டக்களப்பு
தொ.பே.இல - 065 - 2222500

**விழுது - திருகோணமலை**
81யு, ராஜவரோதயம் வீதி,
திருகோணமலை
தொ.பே.இல - 026 2224941

**பூபாலசிங்கம் புத்தகக்கடை**
309-A 2/3 காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு
தொ.பே.இல.: 4515775, 2504266

**அல்குரசி புத்தக நிலையம்**
28, 1/2, புகையிரத வீதி, மாத்தளை
தொ.பே.இல.: 066-3662228

**அறிவுநதி புத்தகசாலை**
இல 06, கனகபுரம் வீதி, கிளிநொச்சி
தொ.பே.இல.: 077 6737535

**Zeen Baby Care**
121B, Arm Mill Road,
Addalaichenai -01
Tel.: 077 3651138

**புக் லாப்**
20, 22 சேர் பொன் ராமநாதன் வீதி,
பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்
தொ.பே.இல: 021-2227290,

**அன்பு ஸ்டோர்ஸ்**
14 பிரதான வீதி, கல்முனை
தொ.பே.இல.: 067-2229540

**பரணி புத்தகக் கூடம்**
நெல்லியடி ம.ம வீதி, நெல்லியடி
தொ.பே.இல - 077 5991949

**விழுது - புத்தளம்**
இல 24801 கொழும்பு வீதி,
தில்லையடி, புத்தளம்
தொ.பே.இல - 032 - 5740094

**விழுது - யாழ் மாவட்டம்**
இல 23, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்
தொ.பே.இல - 021 2229866

Printed by
**Kumaran Press (Pvt) Ltd.**
39, 36th Lane, Colombo 06
kumbhlk@gmail.com

ISSN 1800-1246
9 771800 124005

Registered in the Department of Posts of Sri Lanka under QD/26/News/2014